# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 06 வெள்ளிக்கிழமை (22.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 277



[சாவதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
Email.Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே


* ஒருமித்த நாடு எனும் குடியரசாக இருத்தல் வேண்டும்.
* மாகாணம் அதிகாரப்பகிர்வின் முதல் நிலை அலகாக இருக்கும்.
* 233 உறுப்பினர் கொண்ட பாராளுமன்றம். (140 - தொகுதி வாரி, 93 விகிதாசாரம்)
* 55 உறுப்பினர் கொண்ட செனட் சபை. (45 மாகாண பிரதிநிதித்துவம் 10 பாராளுமன்ற பிரதிநிதித்துவம்)
* தேசிய கீதம், தேசிய கொடி, தேசிய தினம் என்பன தற்போது உள்ளவாறே.
* பௌத்தத்திற்கு முதன்மைஸ்தானம்-பௌத்தத்தை பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும்.
* காணி அதிகாரம் மத்தி - மாகாணத்திற்கு.
* வடக்கு - கிழக்கு இணைப்பு, பொலிஸ் அதிகாரம் குறித்த தெளிவின்மையுடன்,

# இடைக்கால வரைபு வெளியானது



(கொழும்பு) புதிய அரசியல் யாப்புக்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கை ஒற்றையாட்சி தன்மை மாறுபடாத நிலையில் அதிகாரங்களை நிர்வாக மட்டத்தில் பரவலாக்கம் செய்வது என்ற அடிப்படையிலேயே வெளியாகியுள்ளது. (04ஆம் பக்கம் பார்க்க)

## சந்தர்ப்பத்தை தவறவிடாது எல்லோரும் உறுதியுடன் இருந்தால் வெற்றிசாத்தியம்

### – இரா.சம்பந்தன்

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பை உருவாக்க கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாதென எல்லோரும் நியாயமாகவும் உறுதியுடனும் இருந்தால் இந்த முயற்சி வெற்றியடையக்கூடிய எல்லாசாதகமான நிலைமைகளும் உள்ளன என எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார். தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில், பிரதம மந்திரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையிலும் 23

## இலங்கைக்கு ஐ.நா. உதவிச் செயலாளர் கடும் கண்டனம்

(கொழும்பு)

சிவில் சமூகப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்பட்டு வருவதாக இலங்கை மீது, மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் உதவிச்செயலர் அன்ட்ரூ கில்மோர் குற்றஞ்சாட்டி 24

## ஜனநாயகத்தை அரசு கொலை செய்துள்ளது டளஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் அரசியல் ரீதியான சில தவறுகளை செய்யதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் 23

## அற்பசொற்ப சலுகைகளுக்காக தமிழ்த் தலைமை விலைபோயுள்ளது

### கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சிகளின் தலைமைத்துவங்களின் அற்பசொற்ப எதிர்பார்ப்புக்களுக்காக உள்ளூராட்சிகள் தேர்தல் திருத்தச்சட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி திருத்தங்களைக் கொண்டுவந்ததினால் வடக்கு, கிழக்கில் பாரியளவான பாதிப்புக்கள் ஏற்படப்போவதாக இலங்கையின் தேர்தல் கண்காணிப்பு அமைப்பான சுதந்திரமானதும், நீதியானதுமான 23

## ஜகத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகள்

### ஆதாரம் இல்லை – அரசு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜெயசூரியவுக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளுக்கு எவ்வித ஆதாரமும் இல்லையென இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. 23

## கூடியளவு அதிகாரங்களை பகிர சு.க. இணக்கம்!

(கொழும்பு)

புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடியளவில் அதிகாரங்களை பகிர ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இணங்கிய போதிலும் ஜனாதிபதி பதவியும் அவசியம் என்பதே கட்சியின் நிலைப்பாடு என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கூடிய அரசியலமைப்புச் சட்டவாக்க சபையில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். புதிய அரசியலமைப்புச் சட்டத் 24

## "புத்த பெருமானே" புதிய அரசியலமைப்பு

### – ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்குரிய இடம் பாதுகாக்கப்படும் எனவும் பௌத்த மதத்தின் அடிப்படையிலேயே சகல விடயங்களும் அணுகப்பட்டுள்ளது 04



ஐ.நா பொதுச்சபை கூட்டத்தொடரில் பங்குபற்றுவதற்காக சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் அமெரிக்க அரசியல்விவகார உதவி இராஜாங்கச்செயலாளர் தோமஸ் ஷெனனுக்கு மிடையிலான சந்திப்பு நேற்று நியூயோர்க் நகரில் இடம்பெற்றது.

### ரூ.12 இலட்சத்து 40 ஆயிரம் பெறுமதியான

## போலி நாணயத் தாள்களை மாற்ற முயன்றவர்கள் மடக்கிப் பிடிப்பு



(யாழ்ப்பாணம்)

12 இலட்சத்து 40ஆயிரம் ரூபாய் பெறுமதியான கனேடிய டொலர்போலி நாணயத் தாள்களை இலங்கை ரூபாய்களுக்கு பரிமாற்றம் செய்ய முற்பட்ட இருவரை யாழ். 24

## போர்க்குற்றச் சாட்டுக்களால்தான் எனக்கு விசா மறுக்கப்பட்டது!

### – சரத் பொன்சேகா

(கொழும்பு)

இராணுவத்துக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுகளுக்கு தீர்வு காணப்படாததால்தான், ஐ.நா பொதுச் சபை அமர்வுகளில் பங்கேற்பதற்கு, தனக்கு நுழைவு



விசா மறுக்கப்பட்டதாக அமைச்சரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். 23

# 17-வது ஆண்டு நினைவு நாள்



(642)

## அமரர் பொன்னு குகதாசன்

(பிரபல கட்டடக் கலைஞர்)

திதி : 22-09-2017

தோற்றம் : 21.11.1938 மறைவு : 30.09.2000

அறிவில், ஆற்றலில், பாசத்தில் சிறந்த
உள்ளத்தில் உயர்ந்து பல்லோரும் போற்ற வாழ்ந்த
எங்கள் தெய்வத்தின் நினைவுகள் என்றும் மறவாது

"கேமாலயம்"
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## தேர்தலை நடத்த கோரிக்கை

இன்னும் ஒரு வருடம் நிறைவடைவதற்கு முன்னர், மாகாண சபை தேர்தல்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இந்த கோரிக்கையை விடுத்தார். மாகாண சபை தேர்தல்களை ஒரே தடவையில் நடத்த எண்ணியுள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும் அவற்றை உரிய காலப்பகுதியில் நடத்துவது கட்டாயமானதாகும் எனவும் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (மு-11)

KELANI CABLES

## பொறியியற்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### களனி சக்தி வீட்டு மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி

வீட்டு மின்னிணைப்புத் தகைமைச் சான்றிதழ் கற்கைநெறியினை் களனி கேபிள்ஸின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியற்பீடம் தமிழ் மொழியில் நடத்தி வருகின்றது. இக்கற்கை நெறியின் பிரதான நோக்கம் வீட்டுமின்னிணைப்பு செயல்முறை தொடர்பான தத்துவ விளக்கங்களை வழங்குவது. எனவே மின்னியல் தொழில்நுட்ப துறையில் முன்னனுபவமுள்ளோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இக்கற்கைநெறிக்கு 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**காலம்** : **ஒரு வருடம் (பகுதிநேரம்: மாதத்தின் முதலாவது சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்)**
**தெரிவு** : **நேர்முகப்பரீட்சை மூலம்**
**இடம்** : **பொறியிய்ற்பீடம், அறிவியல்நகர், கிளிநொச்சி.**

மேற்படி கற்கைநெறியினை பயில்வதற்காக பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 06-10-2017 வரை பீடாதிப்தி, பொறியியல் பீடத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும். பொருத்தமான விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரக் கோவையினை விண்ணப்ப முடிவு திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவேண்டும். அல்லது நேரில் ஒப்படைக்க முடியும் (சுயவிபரக்கோவையில் வீட்டு மின்னிணைப்பு துறையில் தொழில் செய்த சேவைக காலம், சேவை விபரம் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்).

*அனுப்பவேண்டிய முகவரி:*

**ஒருங்கிணைப்பாளர்**
**"களனி சக்தி வீட்டு மின்னிணைப்பு**
**தகைமைச் சான்றிதழ் கற்கைநெறி"**
**பொறியியற்பீடம்,**
**அறிவியல்நகர், கிளிநொச்சி.**

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "களனி சக்தி வீட்டு மின்னிணைப்பு தகைமைச்சான்றிதழ் கற்கைநெறி" எனக்குறிப்பிடுதல் வேண்டும். தெளிவற்ற மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்கு பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.** (ச-9708) **- பதிவாளர்**

*ஓம் ஸ்ரீ சாய்ராம்*



## ஈழத்து சீரடி சாயி நாதனின்
## 9-வது வருட ஸ்ரீ சாயி திவ்ய மஹோற்ஷவ விழா – 2017

**அன்பான அடியார்களே!**

**நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 17-ம் நாள் சுவாதி நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும் கூடிய (23.09.2017) சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஸ்ரீ சீரடி சாயிநாதரின் வருடாந்த திவ்ய மஹோற்ஷவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.**

### கிரியா விபரம்

| | | | |
|---|---|---|---|
| 01-ம் திருவிழா | 23.09.2017 | மாலை 4.30 மணி | கொடியேற்றம் (ரிஷப வாகனம்) |
| 02-ம் திருவிழா | 24.09.2017 | மாலை 4.30 மணி | மயூர வாகனம் |
| 03-ம் திருவிழா | 25.09.2017 | மாலை 4.30 மணி | பத்மாசன பீடம் |
| 04-ம் திருவிழா | 26.09.2017 | மாலை 4.30 மணி | அன்ன வாகனம் |
| 05-ம் திருவிழா | 27.09.2017 | மாலை 4.30 மணி | தண்டிகை |
| 06-ம் திருவிழா | 28.09.2017 | மாலை 4.30 மணி | சுவான வாகனம் |
| 07-ம் திருவிழா | 29.09.2017 | மாலை 4.30 மணி | சர்ப்ப வாகனம் |
| 08-ம் திருவிழா | 30.09.2017 | மாலை 4.30 மணி | கப்பல் வாகனம் |
| 09-ம் திருவிழா | 01.10.2017 | மாலை 4.30 மணி | பல்லக்கு உற்ஷவம் |
| 10-ம் திருவிழா | 02.10.2017 | மாலை 4.30 மணி | குதிரை வாகனம் (வேட்டை) |
| 11--ம் திருவிழா | 03.10.2017 | மாலை 4.30 மணி | சப்பறம் |
| 12-ம் திருவிழா | 04.10.2017 | காலை 7.00 மணிக்கு | தேர்த்திருவிழா |
| | | மாலை 5.00 மணிக்கு | பச்சை சாற்றுதல், ரத அவரோகணம் |
| 13-ம் திருவிழா | 05.10.2017 | காலை 7.00 மணிக்கு | தீர்த்தத் திருவிழா |
| | | மாலை 5.00 மணிக்கு | கொடியிறக்கம் |
| 14-ம் திருவிழா | 06.10.2017 | மாலை 5.00 மணிக்கு | லெண்டித்தோட்ட உற்ஷவம் |
| 15-ம் திருவிழா | 07.10.2017 | மாலை 4.00 மணிக்கு | வைரவர் மடை |

வீதி உலா செல்லும் பாதை: *ஆலயம் – மருதடி வீதி – றக்கா வீதி – கோவில் வீதி – நாவலர் வீதி – ஆலயத்தை வந்தடையும்*


சீரடி சாயி மந்திர்
314, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

இங்ஙனம் : ஆலயத்தினர், உபயகாரர்கள், பக்த அடியார்கள்
தொ.பே இல. : 077 722 2568, 077 481 5336

(601)

# தியாக தீபம் திலீபனின் ஏழாம் நாள் நினைவேந்தல்





இந்திய அரசிடம் ஐந்தம்சக் கோரிக்கையை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து மரணித்த தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வின் ஏழாவது நாள் நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் நல்லூரில் நடைபெற்றது.

(படங்கள்:- உ.சாளின்)

# மனிதப் பேரவலத்தை உடன் நிறுத்தக்கோரி கவனயீர்ப்புப் பேரணி




மியன்மாரில் ரோஹிஞ்யா முஸ்லிம் மக்களுக்கு எதிராக இடம்பெறும் மனிதப் பேரவலத்தை உடன் நிறுத்தக் கோரி கவனயீர்ப்புப் போராட்டப் பேரணி நேற்று இடம்பெற்றது. இந்த பேரணியை அடுத்து ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் கைலா பிள்ளையார் கோவில் முன்பாக ஒன்றுகூடிய வடக்கு-கிழக்கை சேர்ந்த தமிழ்,முஸ்லிம் மக்கள் பேரணியாக சென்று ஐக்கிய நாடுகள்கிளை அலுவலகத்தில் மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜரினை கையளித்திருந்தனர்.

அந்த மக்ஜரில் பர்மாவில் தற்போது ரோஹிஞ்யா முஸ்லிம் மக்களுக்கு எதிராக மிக மோசமான மனிதப் படுகொலை இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனை அவர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும். கடந்த 2009 ஆம் ஆண்டு இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் இடம்பெற்ற மிக மோசமான யுத்தத்தில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

மேலும் இவ்யுத்தத்தால் 40 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்கள். இவ்வாறு இலங்கையில் உள்ள சிறுபான்மை மக்களாகிய நாம் இந்நாட்டில்இடம்பெற்ற மூன்று தசாப்தகால கொடூரமான வன்முறைகளை அனுபவித்திருந்தோம். அந்த வகையில் உலகில் உள்ள ஏனைய சமூகத்தின் துன்பங்களை எம்மால் உண ர்ந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் இடம் பெற்றது போன்று ஒருமனிதப் பேரவலம் உலகில் வேறெங்கிலும் இனிமேல் இடம்பெறக்கூடாது. ஆகவே பர்மாவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் மனிதபேரவலமானது உடனடியாக நிறுத்தப்பட்டு அங்கு சமாதானமும், நல்லிணக்க மும் ஏற்படுத்தப்பட வேண்டும் என கோருகின்றோம் என அம் மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது. (இ-4)

# அழகாக பெண்களைப் பயன்படுத்தி தேர்தலை ஒத்திவைக்கிறது அரசு

## மகிந்த குற்றச்சாட்டு



மிகவும் அழகாக பெண்களைப் பயன்படுத்தி அரசாங்கம் தேர்தலை ஒத்தி வைத்து வருவதாக முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ் குற்றம் சுமத்தியுள்ளார்.

சுகததாச உள்ளக அரங்கில், முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தனவினால் எழுதப்பட்ட இருண்ட கதை என்ற நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த விழாவில் பங்கேற்ற போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

உச்ச நீதிமன்ற தீர்ப்பிற்கு அமைய தேர்தல் ஒத்தி வைக்கப்படுவது தவிர்க்கப்பட்டாலும் இந்த அரசாங்கம் மிகவும் அழகாக பெண்களைப் பயன்படுத்தி தேர்தலை ஒத்தி வைப்பதாக தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பதற்காக, தேர்தல்களை ஒத்தி வைப்பதாக அரசாங்கம் கூறியிருப்பது அரசாங்கத்தின் பயந்த தன்மையை வெளிப்படுத்துவதாகவும் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை நிறைவேற்றிய தினம் ஜனநாயகத்தின் இருண்ட நாளாகவே கருதப்பட வேண்டும்.

எனவே இன்றைய தினம் இருண்ட கதையொன்றையே பேச வேண்டியுள்ளது என வும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# மட்டக்களப்பைச் சேர்ந்த 28 பேரை நாடு கடத்தியது இந்தோனேசியா!

சட்டவிரோதமாக படகு மூலமாக நியூசிலாந்துக்கு செல்வதற்காக, இந்தோனேசியாவில் தங்கியிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த 28 பேர் நேற்று முன்தினம் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். அவர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களை தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப்பிணையில் விடுவிக்க மினுவாங்கொடை நீதவான் நீதிமன்ற நீதவான் சிலனி சத்துரந்தி உத்தரவிட்டார். இதே வேளை, பிணையாளர்கள் நெருங்கிய உறவினர்களாக இருக்க வேண்டும் என்று பிணை கோரிக்கை விடுத்த நீதவான், சந்தேக நபர்களை 2018ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் கட்டளையிட்டார். (இ-7)

# யாப்பினை எதிர்க்கும் உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்க சு.க.நடவடிக்கை

## அமைச்சர் அமரவீர எச்சரிக்கை



ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாப்பினை எதிர்க்கும் உறுப்பினர்கள், கட்சியிலிருந்து நீக்கப்படுவர் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர எச்சரித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சியின் யாப்பினை மீறிச் செயற்படும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியிலிருந்து நீக்கப்படுவர்.

சுவரொட்டிகளை ஒட்டி, தனிப்பட்ட அரசியல் நடத்தும் நபர்களுக்கு அரசியல் எதிர்காலம் கிடையாது.

இவ்வாறான அரசியல்வாதிகளை மக்கள் நிச்சயம் நிராகரித்து விடுவார்கள். நான் யாருக்கும் சேறு பூசவில்லை. நபர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்த என்னிடம் போதியளவு சாட்சியங்கள் உண்டு.

கட்சி என்ற ரீதியில் தூய்மையான அரசியலுக்காக தீர்மானங்களை எடுத்து வருகின்றோம்.

தனிப்பட்ட நபர்களை மையப்படுத்தி சுதந்திரக் கட்சி அரசியல் நடத்தவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை
Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழுந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை – மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுர்வேத சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966 Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்.
Tel. 021 205 4066 / 077 872 5251

## இடைக்கால...

அரசியலமைப்பு சபைக்கு நேற்று முற்பகல் பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட வழிப்படுத்தும் குழுவின் அறிக்கை 12 பிரிவுகளின் கீழான உள்ளடக்கங்களை கொண்டுள்ளது.

தற்போதைய அரசியலமைப்பின் 1ஆம் மற்றும் 2ஆம் அத்தியாயங்களில் உள்ளடக்கப்படும் விடயங்கள், அதிகாரப்பகிர்வு கோட்பாடுகள், அரச காணி மற்றும் மாகாண நிரல் விடயங்கள் பற்றி மத்திய அரசாங்க சட்டம் இயற்றுதல் என்ற பிரிவுகள் அதில் உள்ளடங்குகின்றன.

அத்துடன், பிரதான ஆட்புலம், இரண்டாம் சபை, தேர்தல் முறைமை, ஆட்சித்துறை, அரசியலமைப்பு பேரவை, பெண்களின் பிரதிநிதித்துவம், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் வழிப்படுத்தற்குழு உறுப்பினர்களின் அவதானிப்புகளும் கருத்துக்களும் என்ற 12 பிரிவுகளின் கீழ் இந்த உள்ளடக்கங்கள் அமைந்துள்ளன.

அந்த வகையில், இலங்கை பிரிக்கப்படாத மற்றும் பிரிக்கப்பட முடியாத ஒரே நாடாக இருத்தல் வேண்டும் என்றும் பிரிந்து செல்லுதலை தடுக்கும் பொருட்டு அரசியலமைப்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், அதிகூடிய அதிகாரப்பகிர்வு வழங்கப்படல் வேண்டும் என்றும் தற்போதைய அரசியலமைப்பின் அத்தியாயம் 1 மற்றும் 2 ஆகியவற்றினால் உள்ளடக்கப்படும் விடயங்களின் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையானது "ஏக்கிய இராஜ்ஜிய எனப்படும்" "ஒருமித்த நாடு" எனும் குடியரசாக இருத்தல் வேண்டும் என்ற உருவாக்கம் பரிசீலிக்கப்படலாம் என்றும் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்த உறுப்புரையின் ஏக்கிய இராஜ்ஜிய" ஒருமித்த நாடு என்பது பிரிக்கப்படாத மற்றும் பிரிக்கப்பட முடியாத நாடு எனும் பொருளாகும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம், எந்தவொரு மாகாண சபையோ அல்லது அதிகார சபையோ இலங்கையினது ஆட்புலத்தின் எந்தவொரு பகுதியையும் தனிநாடொன்றாக பிரகடனப்படுத்தக்கூடாது.

அத்துடன், எந்தவொரு மாகாணத்தையோ அல்லது அதன் பகுதியையோ. இலங்கையிலிருந்து விலகித் தனியாவதற்காக ஆதரித்து வாதாடவோ அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ கூடாது என்ற முன்மொழிவும் அரசியல மைப்பின் 5ஆம் உறுப்புரையின் கீழான பரிசீலனைக்கு முன்மொழியப்பட்டுள்ளது.

இதேநேரம், அரசியலமைப்பில் பௌத்த மதம் பற்றி விதந்துரைக்கும் 9ஆவது உறுப்புரை பற்றி இரு முன்மொழிவுகள் பரிசீலனைக்காக வழிப்படுத்தும் குழுவின் இடைக்கால அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

"பௌத்த மதத்துக்கு முதன்மை ஸ்தானம வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு, அதற்கிணங்க 10 ஆம் மற்றும் 14(1)ஆம் உறுப்புரைகளால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லா மதங்களுக்கும் காப்புறுதி செய்தல் வேண்டும்.

அத்துடன், பௌத்த சாசனத்தை பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும்" என்பது அதில் முதலாவது முன்மொழிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறில்லாத பட்சத்தில், "இலங்கையில் பௌத்த மதத்திற்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்படுதல் வேண்டும்.

எல்லா மதங்களையும் மற்றும் அதன் நம்பிக்கைகளையும் மரியாதையுடனும் மாண்புடனும் மற்றும் பாரபட்சமின்றியும் நடத்துவதுடன், அரசியலமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை எல்லா ஆட்களுக்கும் உத்தரவாதமளிக்கும் அதேவேளையில் பௌத்த சாசனத்தை பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும்" என்று இரண்டாவது முன்மொழிவாக யோசனை செய்யப்பட்டுள்ளது. (மு-11)

## புத்த பெருமானே...

எனவும பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மீண்டும் உறுதிப்பட தெரிவித்துள்ளார்.

இந்த நாடு பௌத்தர்களை அதிகம் கொண்ட நாடு. இந்த நாட்டின் அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்குரிய இடம் பாதுகாக்கப்படுகின்றது. சமூகத்தில் அதற்குரிய முதன்மைத் தன்மை பாதுகாக்கப்படுகின்றது. புத்த பெருமான் போதித்ததெல்லாம் குரோதத்தினால், குரோதத்தை வெல்ல முடியாது என்பதாகும். குரோதமில்லாத நிலையினாலேயே குரோதத்தை வெல்ல முடியும்.

எமது இனத்துக்கு பௌத்த மதத்தைப் போதிப்பதன் மூலம் வழிகாட்ட நடவடிக்கை எடுக்கப்படும். தேவையில்லாத பிரச்சினையை உருவாக்கிக் கொண்டு, வீணான அச்சத்தை தோற்றுவித்துக் கொண்டு, பொருளாதாரத்தை அழித்துக் கொண்டு, மக்களைப் பிரித்துக் கூறுபோடுவதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லையெனவும் பிரதமர் கூறியுள்ளார்.

இதன்போதே அரசியலமைப்பில் பௌத்த மதத்துக்குள்ள இடம் குறித்து பிரதமர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் விரிவாக விவாதிக்கப்படும். மக்கள் அரங்கில் பேசுபொருளாக மாற்றப்படும். இதன்மூலம் முழுநாட்டுக்கும் பொருத்தமான அரசியலமைப்பு தயாரிக்கப்படல் வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

ஒகடோபர் மாதத்தில் பாராளுமன்றம் கூடாத ஒரு நாளில் அரசியலமைப்பு சபையைக் கூட்டி இந்த அறிக்கையை விவாதிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (மு-11)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 1966 - 04 - 28

மறைவு 2017 - 09 - 19

அமரர்

**கணபதிப்பிள்ளை கிருஷ்ணராஜன்**

(சமாதான நீதவான்)

(கிராம அபிவிருத்தி திணைக்களம் - வடக்கு மாகாண சபை)

அவர்கள் 19.09.2017 செவ்வாய்க்கிழமையன்று காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை எமது குடும்பம் சார்பாக தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் (648) பூ.ஶ்ரீஸ்கந்தராசா J.P குடும்பம்



## மரண அறிவித்தல்

**முருகேசு கனகலிங்கம்**

(உரிமையாளர் - ஸ்ரீமுருகன் அரிசி ஆலை, அநுராதபுரம்)



இல.141, இராசாவின்தோட்ட வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸில் வசித்து வந்தவருமான முருகேசு கனகலிங்கம் (உரிமையாளர் - ஸ்ரீமுருகன் அரிசி ஆலை, அநுராதபுரம்) 20.09.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - கனகம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இராசலிங்கம் (ராசா), பாலசுந்தரம் (கனடா), தயாநிதி (யாழ்ப்பாணம்), கலாநிதி (லண்டன்), சத்தியலிங்கம் (இந்தியா), தருமலிங்கம் (சிவா - ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2017) பிரான்ஸில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.141, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம். (651) தகவல்:- சி.தயாநிதி (தயா)



## மரண அறிவித்தல்

**செல்வி**

**நடராசா பொன்னம்மா**



தோற்றம்:29.06.1928 மறைவு: 21.09.2017

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பண்ணாகம் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நடராசா பொன்னம்மா நேற்று (21.09.2017) வியாழக்கிழமை அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தியர் நடராசா - அபிராமிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, சரஸ்வதி, தியாகராசா (முன்னாள் PT ஆசிரியர் - விக்ரோறியா) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் (மரண சகாய நிதிச் சங்கம்), விசுவலிங்கம் (ஆசிரியர்), சுகிர்தரத்தினம் (ஆசிரியை) ஆகியோரின் மைத்துனியும் சிவசண்முகம், சந்திரா, அமரர் ரேணுகா, ரஜனி, சுந்தரலிங்கம் (ஜேர்மனி), அமரர் சிவசக்தி மற்றும் நடேசலிங்கம் (கனடா), நவநாயகி குகலிங்கம் (முன்னாள் அலுவலர் - பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), ரேவதி, பிரேமாவதி (வலிகாமம் மேற்கு பிரதேச சபை) ஆகியோரின் சிறிய தாயாரும் முரளிநடேசன் (சுவிஸ்), தில்லைநடேசன் (கனடா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.09.2017) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பண்ணாகம், சுழிபுரம். (649) தகவல்: குடும்பத்தினர் 077 626 4214



## பகிரங்க ஏல விற்பனை

**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட மத்திய காற்று சீராக்கியின் (Central Air Conditioning) பின்வரும் பொருட்கள் 2017.10.02ஆம் திகதி (திங்கட்கிழமை) மு.ப 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 01. | காற்று குளிர்விப்பான்கள் | - 02 |
| 02. | மின் நீர் இறைப்பான்கள் | - 07 |
| 03. | காற்று குளிர்விக்கும் பகுதிகள் | - 02 |
| 04. | குளிரூட்டியின் குழாய் அமைப்புக்கள் | - 1000kgற்கு மேல் |
| 05. | பனை மரங்கள் | - 25 |
| 06. | தீராந்தி மரங்கள் | - 06 |
| 07. | கூரை தகடுகள் | - 30 |

இவ் ஏலவிற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதி இலக்கம் 24க்கு அருகாமையில் மேற்படி பொருட்களை 2017.10.02 ஆம் திகதி காலை 8.00 - 10.00 மணிவரை பார்வையிட முடிவதுடன் அதனைத் தொடர்ந்து ஏலவிற்பனையில் கலந்து கொள்ள முடியும். ஏலத்தில் தெரிவானவர்கள் பணத்தை காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று பொருட்களை அன்றைய தினம் பி.ப 5.00 மணிக்கு முன்னர் போதனா வைத்தியசாலையிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

பணிப்பாளர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C-9709)

## சந்தை இடமாற்றம்

நல்லூர் கல்வியங்காடு செங்குந்தா சந்தையில் இயங்கும் மரக்கறி சந்தையும், மீன் சந்தையும் புனரமைப்பு செய்யப்பட வுள்ளதால் 2017.09.23ஆம் திகதி முதல் தற்காலிகமாக ஆடியபாதம் வீதியில் நாயன் மார்கட்டு சந்திக்கும் இடையில் (தற்போதைய சந்தையில் இருந்து 75 மீற்றர் தூரத்தில்) இடம் மாற்றப்பட்டுள்ளது. இதனால் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியத்திற்கு மனம் வருந்துகின்றோம் என யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் அறி வித்துள்ளார். (இ)

## கூட்டு எதிரணியுடன் இணைவதற்கு அமைச்சர்கள் காத்திருக்கின்றனராம்

### பந்துல குணவர்த்தன கூறுகிறார்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தி லிருந்து விலகி அமைச்சர்கள் கூட்டு எதிரணியுடன் இணை வதற்கு காத்திருப்ப தாக நாடாளுமன்ற உறுப்பி னர் பந்துல குணவர்த்தன தெரிவித் துள்ளார். இந்த விடயம் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்து ள்ளார்.

முன்னாள் பிரதியமைச்சர் அருந்திக பெர் னாண்டோ நாடாளுமன்றில் விசேட செய்தி ஒன்றை வெளியிட்ட பின்னர் எதிரணியில் அமர் ந்தார் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ஆட்டோக்களுக்கு புதிய நடைமுறை

(கொழும்பு)

இலங்கையில் பயணிகள் போக்குவரத் திற்காக பயன்படுத்தப்படும் ஆட்டோக்க ளுக்கு தனியான ஒரு நிறத்தை அறிமுகம் செய்ய வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தீர்மானித்துள்ளது.

அவ்வாறு செய்வதன் ஊடாக வாடகை ஆட்டோ இலகுவாக அடையாளம் காண முடியும் என அந்தச் சபையின் தலைவர் சிசர கொதாகொட தெரிவித்து ள்ளார்.

தற்போது இந்தப் போக்கு வரத்து வாகன ங்களுக்கு பயன்படுத்தப்படும் நிறம் தொடர் பில். கலந்துரையா டல் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது. தீர்மானம் மேற் கொள்ளப் பட்டவுடன் நிறம் மாற்றப்படும். இதற்கு மேலதிகமாக நிறம் மாற்றப்பட்ட ஆட்டோக்க ளுக்கு இலட்சினை ஒன்றும் பயன்படுத் தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் தற்போது 11 இலட்சத்திற்கு அதிகமான ஆட்டோக்கள் பதிவு செய்ய ப்பட்டுள்ள நிலையில் அவற் றில் 9 இலட்சம் ஆட்டோ க்கள் போக்குவரத்திற்காக பயன்ப டுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக்கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTADதரம்/ பதிவு | கேள்விப்பிணைப் பணம், செல்லுபடியாகும் காலம் | மீளளிக் கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/DPS/D14/ Rod/427-1 | Concrete வீதி நிர்மர்ணம் - கரைச்சி பிரதேச சபைக்கு உட் பட்ட உருத்திரபுரம் கிழக்கு 4ம் குறுக்கு வீதி | 8.66 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 Highway | ரூபா 87,000.00 வங் கிப் பிணை 19/01/2018வரை | ரூபா 2,000.00 |
| 2 | KN/DPS/D14/ Rod/427-2 | Concrete வீதி நிர்மாணம் - கரைச்சி பிரதேச சபைக்கு உட் பட்ட வட்டக்கச்சி தபால்பெட்டிச் சந்தி வீதி | 8.66 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 Highway | ரூபா 87,000.00 வங் கிப் பிணை 19/01/2018வரை | ரூபா 2,000.00 |
| 3 | KN/DPS/D14/ Rod/427-3 | Concrete வீதி நிர்மாணம் - கரைச்சி பிரதேச சபைக்கு உட் பட்ட உதயநகர் மேற்கு இந்து இளைஞர் மன்ற வீதி | 8.66 மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 Highway | ரூபா 87,000.00 வங் கிப் பிணை 19/01/2018வரை | ரூபா 2,000.00 |

1.பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாகவிளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.

I.நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசியநிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

II.இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.

III.நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.

IV.ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.

2.ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-021 228 5357, பக்ஸ் இல:-021 228 3966)

3.கேள்வி ஆவணங்களை 22.09.2017 ஆம் திகதியிலிருந்து 04.10.2017 ஆம் திகதிவரை காலை 9.00மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை வேலைநாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

4.இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி,பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

5.அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,மாவட்டச் செயலகம் கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 06.10.2017 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

6.கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.

7.கேள்வி தொடர்பான முதற்கூட்டம் (Pre bid meeting) 02.10.2017 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

8.தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

சுந்தரம் அருமைநாயகம்,
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-9705)

## இராசி பலன்

22.09.2017

(புரட்டாதி 06, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு

துதியை முற்பகல் 11.13 மணிவரை

சித்திரை பின்னிரவு 1.59 மணிவரை

சுபநேரம் 6.02-7.32 மணிவரை

இராகுகாலம் 10.32-12.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்திரட்டாதி<br>பகல் 1.28 மணிக்கு<br>துலாம்-சந் | | ராகு |
| கேது | | | செவ், புத, சுக் |
| | சனி | குரு | சூரி சந் |

**மேடம்:** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வழிபாட்டில் ஆர் வம் காட்டுவீர்கள், விருந்துக ளில் கலந்து மகிழும் வாய் ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிற ருக்கு உதவும் எண்ணம் உரு வாகும், செய்தொழில் மேன் மையுண்டு, போசன நன்மை யுண்டு.

**மிதுனம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டு வீர்கள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ் நிலை உருவாகும், போசன நன்மையுண்டு.

**கடகம்:** சுபகாரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், நண்பர்கள் நம்பி க்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**சிம்மம்:** எடுத்த காரியத்தில் முன்னேற் றம் பெறுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், உடன் பிறப்புக் கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கன்னி:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள், தனவரவு திருப்தி தரும்.

**துலாம்:** ஆன்மீக சிந்தனை மேலோங் கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, தன்னம் பிக்கை துளிர் விடும் நாள்.


**விருச்சிகம்:** காரியங்களை நிறைவேற் றுவதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உரு வாகும், செலவுகளில் தாரா ளம் காட்டுவீர்கள்.

**தனுசு:** தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொது வாழ்வில் புகழ்கூடும் நாள்.

**மகரம்:** உங்களின் திறமைக்கு மற்ற வர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும், தூரதேசச் செய்தி கள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** தடைப்பட்ட காரியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்:** காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்பும் அமையலாம், எடுத்த காரி யத்தில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்பட லாம்.


வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு,விளையாட்டுத்துறைஅமைச்சின் கீழ் இயங்கும் ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் 2017 ஆம் ஆண்டுக்கான யாழ். மாவட்ட மழலைகள் விளையாட்டு விழா கடந்த 17ஆம் திகதி யாழ்.கனகரட்ணம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் வடக்கு கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கெண்டார். (படங்கள்:-கட்டுடை செய்தியாளர்)

# வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா இன்று யூனியன் கல்லூரியில் ஆரம்பம்

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழா இன்று தொடக்கம் மூன்று நாட்கள் யாழ்.தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.


முதலாம் நாள் நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3 மணியளவில் கலா வினோதன் நாகலிங்கம்கணபதிப்பிள்ளை (சின்னமணி) அரங்கில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக வடக்குமாகாண ஏதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவும் சிறப்பு விருந்தினராக மு.கோபாலகிருஷ்ணனும் கலந்து கொள்வர்.

கிராமிய கலைக்கதம்பம், குழு நடனம், கிராமிய இசை, சண்முகாஞ்சலி, பாம்பு நடனம், நாட்டிய நாடகம், இசை நாடகம் "யாழ்ப்பாணர்" போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறும்மாகாணஅரசஊழியர்களுக்கிடையிலானபோட்டி, மாகாண கலைமன்றங்களுக்கிடையிலான போட்டி என்பனவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும்.

வடக்கு மாகாண எழுத்தாளர்களின் படைப்புக்கள்,- - அரச ஊழியர்களுக்கிடையில் நடத்தப்பட்ட புகைப்படப் போட்டியின் படைப்புக்கள் தினமும் காலை 9 மணிக்கு காட்சிப்படுத்தப்படும். (இ

# மலசலகூடம் அமைப்பு



வடமாகாண போக்குவரத்து அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதியின் கீழ் யாழ்.நெல்லியடி நகரப்பகுதி பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் சுமார் 14 இலட்சம் ரூபா செலவில் நவீன முறையில் மலசலகூடம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 50 வருடங்களாக பல தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருந்தது. இந்நிலையில் நெல்லியடி வர்த்தக சங்கச் செயலாளர் சுரே ரஞ்சன் முன்வைத்த கோரிக்கையின் மூலமாக இம் மலசலகூட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-60)

## ஏலவிற்பனை

(சாவகச்சேரி)

பறிமுதல் செய்யப்பட்ட மணல், சுண்ணாம்புக்கல் மற்றும் மண்வெட்டி, சவல், கோடரி, கத்தி போன்ற கருவி உபகரணங்கள் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற வளாகத்தில் நாளை (23.09. 2017) சனிக்கிழமை ஏல விற்பனை செய்யப்படவுள்ளது எனபதிவாளர் அறிவித்துள்ளார். (இ-7)

## கரையோர சுற்றாடல் இன்று துப்புரவாக்கல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கரையோர சுற்றாடல் தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சகல கரையோரப் பிரதேசங்களிலும் துப்புரவாக்கல் பணிகள் இடம்பெறும் என கரையோர சுற்றாடல் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (இ-10-107)




## வாணிவிழா

வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வாணிவிழா எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்க சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி திருக்கோவில் நால்வர் மணி மண்டபத்தில் நிலைய சமயப் பொறுப்பாளர் பஞ்சாட்சரம் ஞானபண்டிதன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (இ-3)



நேரான கல்வியியல் மனப்பாங்கு என்ற தொனிப்பொருளில் செயன்முறைக் களப்பயிற்சி கடந்த 17 ஆம் திகதி யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது. இப்பயிற்சியில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்ட தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகள் கலந்து கொண்டனர். (படங்கள்:-புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# உரிய சமிக்ஞை இன்றி வீதி அபிவிருத்திப் பணி

(யாழ்ப்பாணம்)

வீதி திருத்த வேலைகள் நடைபெறும் பகுதிகளில் வீதியொழுங்கிற்கு ஏற்ற சமிக்ஞைகள் உரிய தராதரத்துடன் காட்சிப்படுத்தப்பட்டு அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என வடமாகாண முதலமைச்சரிடம் பொதுமக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் பொதுமக்கள் சார்பாக மனித உரிமை செயற்பாட்டாளரான தியாகராஜா நிரோஸ் முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள மகஜரில்,



கோப்பாய் பிரதேச செயலக பிரிவிலுள்ள யாழ் - பருத்தித்துறை வீதியில் புத்தூர் 9 ஆம் கட்டையில் வடிகாலமைப்புப் பணி மேற்கொள்ளப்படுகின்றது. இதற்காக வீதியோரத்தில் பாரிய அளவில் நிலம் வெட்டப்படுகின்றது.

இவ்வாறு வெட்டப்பட்ட மண் மற்றும் நிர்மாண வேலைகளுக்கான கற்கள் வீதியோரத்தில் குவிக்கப்பட்டும் உள்ளன. எனினும் சாதாரணமாகவே விபத்துக்கள் நடைபெறும் பாரிய வளைவினை உடைய இவ் வீதியில் வீதியோரத்தில் வேலைகள் நடைபெறுவதற்கான எந்தச் சமிக்ஞையும்கிடையாது தனியே இரண்டு கொங்கிறீட் கற்களால் முண்டு கொடுக்கப்பட்டு மஞ்சள் நிற சிறு துண்டு பொலித்தீன் சுற்றப்பட்ட சிறு தடி ஒன்று மட்டுமே ஆங்காங்கே இருக்கின்றது. இது வாகன சாரதிகளுக்கு சற்றும் விளங்காத அறிவிப்பு ஆகும்.

நேற்று முன்தினம் அதிகாலை இவ் வீதியால் பாண் ஏற்றி வந்த ஓட்டோ கட்டுமான வேலைகளுக்காக வீதியில் போடப்பட்டிருந்த கல்லால் குடைசாய்ந்தது. அதன் சாரதி மயிரிழையில் உயிர் தப்பினார். மக்களின் பணத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தின் எதுவும் மக்களின் உயிர்களை மதிக்காதவையாகவோ அவர்களின் பாதுகாப்பினைக் கண்டு கொள்ளாதவையாகவோ அமையக் கூடாது. ஒப்பந்தகாரர்கள் அல்லது திணைக்களங்கள் அது பற்றி அவதானம் செலுத்த வேண்டும்.

தினமும் இவ் வீதியால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் சென்று வருகின்றனர். எனினும் யாரும் மக்களின் இந்தப் பிரச்சினையினை இதுவரையில் கண்டு கொள்ளவில்லை. இந் நிலையில் உடனடி கவனம் எடுத்து இதுபோன்று வேலைகள் நடைபெறும் சகல பகுதிகளிலும் வீதியொழுங்கிற்கு ஏற்ற சமிக்ஞைகள் உரிய தராதரத்துடன் காட்சிப்படுத்தப்பட்டு அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

# வனவள ஜீவராசிகள் திணைக்களத்திற்கு எதிராக வடமராட்சியில் நேற்று மக்கள் போராட்டம்


(குரணவாய்)

வடமராட்சி கிழக்கு பகுதியில் 196 சதுரகிலோமீற்றர் வனவள ஜீவராசிகள் திணைக்களத்திற்கு உரிய நிலப்பரப்பாக எல்லை இடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்களால் போராட்டம் ஒன்று நேற்று (21.09.2017) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கட்டைக்காட்டில் இருந்து 196 சதுரகிலோமீற்றர் நிலப்பரப்பை வனவள ஜீவராசிகள் திணைக்களத்திற்குரிய நிலப்பரப்பாக அடையாளப்படுத்துவதற்காக எல்லைக்கற்கள் பறிக்கப்பட்டுள்ளன. இப்பகுதிக்குள் மக்கள் குடியிருப்புக்கள், பாடசாலை, தொழில் புரியும் இடங்கள் என்பன அடங்குகின்றன.

இதனைக்கண்டித்து மக்கள் நேற்றுக்காலை மருதங் கேணி பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இன்று கட்டைக்காட்டில் உள்ள வனவள ஜீவராசிகள் திணைக்களத்தின் அலுவலகத்திற்கு முன்பாக தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தினை தாம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டோர் அரசே தேசிய பூங்கா எனும் பெயரில் எமது பூர்வீக வாழ்விடங்களை அபகரிப்பதை நிறுத்து, அரசே! வனவள ஜீவராசிகளுக்கு உள்ள பாதுகாப்பு எமக்கு இல்லையா? மக்களின் அன்றாட செயற்பாடுகளில் தலையிடுவதை நிறுத்து, சுண்டிக்குளம் ஜே/435 கிராம மக்களை மீள்குடியேற்றம் செய் போன்ற பதாகைகளை தாங்கியிருந்தனர். (இ-60-89)

# இலங்கை மரைன் படைப்பிரிவுக்கு அமெ. கொமாண்டோக்கள் பயிற்சி



(கொழும்பு)

இலங்கை கடற்படையின் மரைன் படைப்பிரிவினருக்கு, அமெரிக்காவின் மரைன் படைப்பிரிவின் அதிகாரிகள் பயிற்சி அளித்து வருகின்றனர். வெலிசறை கடற்படைத் தளத்தில் இந்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை கடற்படையின் மரைன் படைப் பிரிவினருக்கு, மருத்துவ பயிற்சிகளை அமெரிக்க மரைன் படைப்பிரிவு அதிகாரிகள் அளித்து வருகின்றனர்.

இலங்கை கடற்படையின் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மரைன் படைப்பிரிவுக்கு அமெரிக்க மரைன் கொமாண்டோக்கள் தொடர்ச்சியாகப் பயிற்சிகளை அளித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7)

## படகு கவிழ்ந்து ஒருவர் பலி!

(கொழும்பு)

அம்பாறை, ஒலுவில் கடலில் மீன்பிடிக்கச் சென்ற நபரொருவர், நேற்றுக் காலை படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளாரென, அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒலுவில் 4ஆம் பிரிவைச் சேர்ந்த சம்சுதீன் பஸீல் (வயது 44) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம், அக்கரைப்பற்று வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## ஒரே பார்வையில் நவராத்திரி வழிபாட்டு முறைகள்

### நான்காம் நாள்

| | |
|---|---|
| கோலம்போடும் பொருள் | அட்சதை |
| கோலவகை | படிக்கட்டு |
| அபிஷேகத்திற்குரிய திரவியம் | பன்னீர் |
| திலகம் இடப்படும் திரவியம் | அரகஜா |
| ராகம் | பைரவி |
| இசைக்கப்படும் வாத்தியம் | கோட்டுவாத்யம் |
| கனிகள் | கொய்யாப்பழம் |
| நிவேதனங்கள் | கறிச்சாதம் |
| மலர்கள் | ஜாதிபுஸ்பம் |
| இலைகள் | கதிர்ப்பச்சை |

தொகுப்பு:- சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் (வீணாகான குருபீடம்)


# வலம்புரி-சங்குநாதம் செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

## வடமாகாணத்தில்

- யாழ்ப்பாணம்
- முல்லைத்தீவு
- கிளிநொச்சி
- மன்னார்
- வவுனியா

ஆகிய மாவட்டங்களில் இருந்து ஒவ்வொரு பிரதேசங்கள் மற்றும் ஊர்களுக்கான செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாணத்தின் மூலைமுடுக்குகளில் உள்ள அத்தனை பிரச்சினைகளையும் வெளிக்கொண்டு வந்து தீர்வினைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் முக்கிய தகவல்களை வெளிப்படுத்தல் என்ற நோக்கில் வடபிராந்தியம் முழுமைக்கும் செய்தியாளர்களை இணைக்கும் இத்திட்டத்தில்,

ஆர்வம், எழுத்தாற்றல், சமூக நோக்குள்ள -நேர்மையுடன் பணியாற்றக் கூடிய இருபாலாரும் இச் செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

முழுப்பெயர், தபால் முகவரி, பால், பிறந்த திகதி, தே.அ.அ.இல. தொலை பேசி இல, மின்னஞ்சல், விவாக நிலைமை, கல்வித் தகைமை உள்ளிட்ட விபரங்களுடன் தங்களைக் கேட்டறியக்கூடிய உறவினர் அல்லாத இருவரின் பெயர், விலாசம் உள்ளடங்கலாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை

பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 30.09.2017 இற்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

பிரதம ஆசிரியர், வலம்புரி.


ஸ்ரீ ராம ஜெயம்
ஹரி ஓம் நமோ நாராயண நமஹ



## வல்லீ புரநாதரான திருமாலைத் துதித்தேன்...!

உளமார எண்ணி உனைநாளும் ஏத்தும்
அடியார்கள் கேட்கும் - வரம்யாவும்
அளவேதும் இன்றிக் கொடுத்தாளும் நீல
நிறமேனி கொண்ட - பரந்தாமா
இளகாத நெஞ்சும் மெழுகாகும் உந்தன்
எழில் வாசல் வந்து-தொழுதாலே
குளமாகும் அன்பர் விழிதானே மாரி
மழையாகப் பொழியும் - நீராலே
தளராது அன்று களம்மீதிற் சங்கை
எடுத்தூதி ஐவர் - சமராட
நிழலாக நின்று பெரும்போரைக் கண்ணன்
எனவாகி வென்ற - பெருமானே
வளமான செம்மண் நிலமோடு நன்னீர்
வற்றாத ஊராம் - கோண்டாவில்
கிழக்கோரம் வல்லீ புரநாதர் ஆன
திருமாலே உன்னைத் - துதித்தேன்யான்!

ஆக்கம்: சின்னையா சிவபாலன், கோண்டாவில்

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு வல்லீபுரநாதர் திருக்கோயிலின் வருடாந்தத் திருவிழாவில் இன்று கொடியேற்ற நாளாகும். அதனை முன்னிட்டு 22.09.2017 வெள்ளி ஆகிய இன்று இக்கவிதை பிரசுரமாகிறது.

(632)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:12 செவ் 12 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BSc, MSc/ விரிவுரையாளர்<br>தொ.இ: B/7076 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 20 செவ் 4 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4748 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: செவ் 12 இல்<br>உயரம்: 176cm<br>தகைமை/தொழில்: BSc, MBA/ அரசதொழில்<br>தொ.இ: B/7062 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 44 செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MA/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/4749 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 54 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7079 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 36 செவ் 8 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்: BSc, MSc/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4751 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/7080 | பிறப்பு: 1980 RC<br>நட்சத்திரம்: சித்திரை<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BA/ அரசதொழில்<br>தொ.இ: G/4753 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வரட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை; அடிப்படை வசதிகளின்றி வாழ்கின்றோம்

## கண்ணகி நகர் மேற்கு மக்கள் மகஜர்



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கண்ணகிநகர் மேற்கு கிராம மக்கள் தமக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்படவில்லையெனவும் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வருவதாகவும் தெரிவித்து கரைச்சிப் பிரதேச உதவி பிரதேச செயலாளர் சிவகாமியிடம் மகஜர் ஒன்றை நேரில் கையளித்தனர்.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு மகஜர் கையளிக்கப்பட்டது.

கண்ணகிநகர் மேற்கு கிராமத்தைச் சேர்ந்த மக்களின் பிரதிநிதிகள் சிலர் பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகத்திற்குச் சென்று நேற்று முற்பகல் 10 மணியளவில் கோரிக்கை மகஜர்களைக் கையளித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக கிளிநொச்சியில் நிலவிய கடும் வரட்சியின் போது தங்களது கிராமமும் பாதிப்புக்குள்ளாகியிருந்தது. ஆனால் மாவட்டத்தின் ஏனைய கிராமங்களுக்கு வழங்கப்பட்டது போன்று எங்களது கிராமத்துக்கு வரட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை. இங்கு 85 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. மீள் குடியேற்றத்தின் ஆரம்ப காலத்தில் வழங்கப்பட்ட உதவித் திட்டங்களைத் தவிர வேறு எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. உட்கட்டுமான வசதிகள் மிக மோசமாக இருக்கின்றன எனவும் தெரிவித்தனர். (2-312-315)

# பொலிஸ் காவலரண் திறந்து வைப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் பொலிஸ் நிலையம் இல்லை என்ற நீண்ட நாள் குறையை நீக்கும் முகமாக நேற்று மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் பொலிஸ் காவலரண் ஒன்று திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்ன, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.பிரணவநாதன், மந்தை கிழக்கு உதவி பிரதேச செயலாளர் இ.ரமேஸ் உள்ளிட்டவர்களால் இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

மந்தை கிழக்கு பிரதேச செயலாளர் மற்றும் மக்களின் கோரிக்கைகமைவாக மந்தை கிழக்கு நட்டாங்கண்டல் பகுதியில் அமைக்கப்படவுள்ள பொலிஸ் நிலையக் கட்டடம் அமைக்கப்படும் வரை தனது சேவையை பாண்டியன்குளம் பிரதேசத்தில் உள்ள பழைய பிரதேச செயலகம் இயங்கிய கட்டடத்தில் சேவையை வழங்கவுள்ளது. இக்கட்டடமே உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த மற்றும் பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

வன்னி வலம்

# பாடசாலை செல்வதற்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்துமாறு கோரிக்கை

(மல்லாவி)

மன்னார் மாவட்டத்தில் உள்ள மடு 02 ஆம் கட்ட குடியிருப்புப் பகுதி பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதற்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

மடு, மன்னார் ஆகிய கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பாடசாலை பேருந்து சேவைகள் நடைபெறாமையால் மாணவர்கள் சுமார் 6 கிலோமீற்றர் தூரம் கால் நடையாக செல்ல வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

சுமார் 150 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதற்கு எந்தவொரு போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில் பண்டிவிரிச்சானிலிருந்து மன்னார் நோக்கி பயணிக்கும் பேருந்திலேயே பல்வேறுபட்ட சிரமங்களின் மத்தியில் பாடசாலைக்குச் சென்று வருவதாகத் தெரிவிக்கின்றனர்.


இந்நிலையில் பேருந்தில் அதிக பயணிகள் பயணிக்கும் பட்சத்தில் பாடசாலை மாணவர்களை பேருந்துகளில் ஏற்றாது பயணிக்கிறார்கள்.

இதனால் மாணவர்கள் கல்வியில் இருந்து இடைவிலகி வரும் நிலை காணப்படுகின்றது என பெற்றோர் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

மாணவர்களுக்கு என தனியான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தி தருமாறு கோரி பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து கோரிக்கை ஒன்றை மடு வலயக் கல்விப் பணிப்பாளர், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு நேரடியாகவும், மகஜர் மூலமாகவும் தெரியப்படுத்தியுள்ளனர். (2-15)

# சைட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு

## அவசர சிகிச்சை தவிர ஏனையவைக்கு மூடு



சைட்டம் தனியார் மருத்துவப் பல்கலைக்கழகத்தை இழுத்து மூடுமாறு வலியுறுத்தி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாடு தழுவிய ரீதியில் நேற்றைய தினம் வேலை நிறுத்தத்தை முன்னெடுத்தனர்.

இந் நிலையில் வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றையதினம் காலை முதல் 24 மணி நேரம் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பால் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் மருத்துவ சேவையைப் பெறுக்கொள்வதில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தனர்.

இந்நிலை கிளிநொச்சியிலும் மருத்துவர்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தனர்.

நேற்றுக் காலை முதல் 24 மணி நேரம் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பால் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளர்கள் மற்றும் மாதாந்த சிகிச்சை பெறும் நோயாளர்கள் உள்ளிட்ட பலர் நெருக்கடிகளுக்குள்ளாகினர்.


அவசர,அவசிய சிகிச்சைகளைத்தவிர வேறு எந்த வைத்தியசாலை சேவைகளும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வவுனியா பொது வைத்தியசாலை வைத்தியர்கள் நேற்றுக் காலை முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இந்நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்காக தூர பகுதிகளிலிருந்து வந்து செல்லும் நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாது ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். திடீர் காய்ச்சல், விசக்கடி ஆகிய இரண்டுக்குமான வெளி நோயாளர் பிரிவு செயற்படுகின்ற அதே வேளை, அவசர விபத்துப் பிரிவு, அதிதீவிர சிகிச்சைப் பிரிவு இரண்டும் வழமை போல்செயற்பட்டு வருகின்றன.

குறிப்பாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற வைத்தியர்கள் முன்னெடுத்து வரும் பணிப்புறக்கணிப்பு காரணமாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வந்த மக்கள் பல்வேறு சிரமத்திற்கு முகம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சைட்டம் மருத்துவக்கல்லூரியை மூடக்கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால் முன்னெடுக்கப்படும் மாவட்ட மட்டத்திலான எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலேயே வவுனியா மாவட்ட வைத்தியர்களும் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250-312)

# 5 ஆண்டுகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல்



(கண்டாவளை)


கிளிநொச்சி மாட்டத்திற்கான ஐந்து வருடங்களுக்கான திட்டங்களை தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான ஐந்து ஆண்டுக்கான திட்டங்களை தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் யு.என்.டி.பி. நியுதவியுடன் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பான முன்னோற்கலந்துரையாடல் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

கல்வி, சுகாதாரம், சமூக சேவைகள், விளையாட்டு, சமுர்த்தி, கிராம அபிவிருத்தி, பெண்கள் அபிவிருத்தி, விவசாயம், நீர் விநியோகம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

# சிவபுரத்தில் நூல் நிலையம் திறப்பு



வவுனியா, சிவபுரம் பகுதியில் நேற்றையதினம் நூல் நிலையம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் குணபாலன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, வவுனியா தெற்கு வலய கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.பி. நடராஜா, முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம், செக்கட்டிப்புலவு கிராம சேவையாளர் ஜே.அமலதாஸ், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.கே. மஸ்தான் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரின் இணைப்பாளர்கள், அமைச்சர் றிசாத் பதியுதீனின் இணைப்பாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், மகளிர் அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், மாணவர்களுக்கு வாசிப்பு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

பொதுநூல் நிலையத்தில் ஞாபகார்த்தமாக மரக்கன்று ஒன்றினையும் நிகழ்வில் கலந்துகொண்ட அதிதிகள் நாட்டிவைத்தனர். (2-250)

# கிளாலிப்பகுதியில் மணல் அகழ்விற்கு எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி கிளாலிப் பகுதியில் மணல் அகழ்வுகளுக்கு எந்த அனுமதிகளும் வழங்கப்படவில்லை என பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி பரமோதயன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கிளாலிப் பகுதியில் தொடர்ந்தும் சட்ட விரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதாவது கிளாலிப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான விவசாய நிலங்கள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் இவ்வாறு பாரியளவில் மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மணல் அகழ்வுகளை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி பொது அமைப்புக்கள் பிர தேச மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்ற போதும், இதுவரை இதனைக் கட்டுப்படுத்த எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவ்வாறான மணல் அகழ்வுகள் பொலிஸார் மற்றும் அதிகாரிகளின் துணையுடன் இடம்பெறுவதாகவும் இதனாலேயே இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. மணல் அகழ்வுகள் தொடர்பில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினாலும் இது தொடர்பில் பொலிஸார் எந்த நடவடிக்கைகளும் எடுப்பதில்லை என்றும் இப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில், தற்போது மணல் அகழ்வுகளுக்கான எந்த அனுமதிகளும் வழங்கப்படவில்லை. இருப்பினும் சிலர் தொடர்ச்சியாக இப்பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக பொது அமைப்புக்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக்கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்குமாறு கிளிநொச்சி பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (2-315)

## 6.52 மில். ரூபா செலவில்

# மீன்பிடித்துறையை மேம்படுத்த பல்வேறு வேலைத் திட்டங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி, கண்டா வளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் ஊடாக தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் நிதியொதுக் கீட்டின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப் படையில் மாவட்டத்தின் மீன்பிடித்துறையினை மேம் படுத்தும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் 2017 ஆம் ஆண்டின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பகுதிகளில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது இளைப்பாறு மண்டபங்கள், கருவாடு உலரவைக்கும் மேடைகள், மீனவர்களுக்கான திசை காட்டிகள் வழங்குதல், கருவாடு பதனிடும் பயிற்சிகள், மீனவர்களுக்கு வலைகள் வழங்குதல், படகு நங்கூரமிடும் தளம் அமைத்தல் போன்ற பல் வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன.

மேற்படி வேலைத்திட்டங்கள் 6.52 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# அனர்த்தக் குறைப்பு வேலைத்திட்டம்; செல்வபுரம் கச்சாய் வீதி புனரமைப்பு

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பகுதியில் அனர்த்தக் குறைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் செல்வபுரம் கச்சாய் வெளி வீதியின் வெள்ளவாய்க்கால் 14.56 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மழை காலங்களில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைக் குறைக்கும் வகையில் பல்வேறு அனர்த்தக் குறைப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் பச்சிலைப்பள்ளி, செல்வபுரம், கச்சாய் வெளி வீதியின் வெள்ளவாய்க்கால் அமைக்கும் பணி தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


குறித்த வேலைத்திட்டமானது அனர்த்த முகாமைத்துவ அமைச்சினது 14.56 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் முதற்கட்ட நிதி வழங்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருவதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (2-315)

# கஞ்சா வைத்திருந்த நபர் தண்டப் பணம் செலுத்தினார்

கிளிநொச்சிப்பகுதியில் 6 ஆயிரத்து 200 மில்லிகிராம் கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்தவருக்கு ஐயாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப்பகுதியில் 6ஆயிரத்து 200 மில்லிகிராம் கஞ்சாவினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஐயாயிரம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன், கடுமையாகவும் எச்சரிக்கை செய்யப்பட்டார். (2-315)



# கலாசார விழா தொடர்பான கலந்துரையாடல் மாங்குளத்தில் நடத்துவதற்கு தீர்மானம்



ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் நடத்தும் கலாசார விழா ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி மாங்குளத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகள் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனிருத்தனன் தலைமையில் இடம்பெற்றது.

நடைபெறவுள்ள கலாசார விழாவை எவ்வாறு நடத்துவது என்பது என்பது தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டது. இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேகநபர் பொலிஸாருக்கு எதிராக பரபரப்பு வாக்குமூலம்

## நவம்பர் 8 ஆம் திகதிக்கு மீண்டும் வழக்கு விசாரணை

(கண்டாவளை)

கிளிநொச்சி பளைப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயத்தை பணத்திற்கு விற்பனை செய்தமை மற்றும் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டதாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேக நபர் நேற்று முன்தினம் பொலிஸாருக்கெதிராக பரபரப்பு வாக்குமூலம் ஒன்றினை வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி பளைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயத்தை பணத்திற்கு விற்பனை செய்தமை, அனுமதிப்பத்திரமின்றி அரச சீல் சாராயத்தை பணத்திற்கு விற்பனை செய்யும் நோக்கில் பதுக்கி வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஏற்கனவே நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் குறித்த சம்பவம் தொடர்பான விளக்கத்திற்கும் ஏற்கனவே தவணையிடப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் இது தொடர்பான வழக்கு நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் விளக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது சாட்சிகள் சார்பில் அப்போதைய பளைப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி சம்பவம் தொடர்பான தனது வாக்குமூலத்தை வழங்கியிருந்தார்.

இதில் குறித்த சந்தேக நபர் 175 மில்லிலீற்றர் அரச சீல் சாராயத்தை பணத்திற்கு விற்பனை செய்ததாகவும் இதேவேளை 175 மில்லி லீற்றர் மற்றும் 750 மில்லி லீற்றர் அளவுகளைக்கொண்ட அரச சீல் சாராயத்தை மண்ணுள் புதைத்து வைத்திருந்ததாகவும் தமது நடவடிக்கையின் போது சம்பவதினத்தன்று பிற்பகல் 5 மணியளவில் குறித்த பகுதியில் சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டு பளைப்பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட உடுத்துறைப்பகுதியில்வைத்து தடயப்பொருட்களையும் சந்தேகநபர்களையும் கைது செய்து சென்றதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை சான்றுப் பொருட்களும் சாட்சியான பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரிக்கு காட்டப்பட்டு உறுதி செய்யப்பட்டது. சந்தேகநபர் சட்டத்தரணிகள் எவரையும் நியமிக்காது தானே நீதிமன்றின் அனுமதியுடன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் குறுக்கு விசாரணைகளை மேற்கொண்டதுடன், தனது வாக்குமூலத்தையும் வழங்கியிருந்தார்.

இவர் தனது வாக்கு மூலத்தில் தான் 834, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசித்து வருவதாகவும் தனக்கு பளைப்பொலிஸ்பிரிவில் காணிகளோ அல்லது எதுவித பதிவுகளுமோ இல்லை என்றும் சம்பவ தினத்தன்று தான் யாழ்ப்பாணத்தில் இருந்து அனுமதிக்கப்பட்ட அளவையுடைய ஒன்பது போத்தல்களைக் கொண்ட விலையுயர்ந்த மதுபானப்போத்தல்களைக் கொண்டு தனது நண்பர்களுடன் மது அருந்துவதற்காக வந்ததாகவும் அன்றையதினம் பிற்பகல் ஒரு மணியளவில் பளை இயக்கச்சி சந்திப்பகுதியில் தனது நண்பரின் வருகைக்காக காத்திருந்த சமயம் அப்பகுதியில் வைத்து அழகேசன் மற்றும் பண்டார என்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பளைப்பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று எந்த முறைப்பாடுகளும் பதியப்படாமல் தடுத்து வைத்ததாகவும் அதன் பின்னர் மறுநாள் தன்னை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியதாகவும் பொலிஸார் குறிப்பிட்ட சகல தகவல்களும் உண்மைக்கு புறம்பானவை எனவும் இங்கு சான்றுப்பொருளாக காட்டப்பட்ட சாராயம் எதுவும் தன்னிடம் இருந்து எடுத்தவையல்ல.

அவை அனைத்தையும் எடுத்து விட்டு இங்கு தரம் குறைந்த சாராயத்தையே காண்பித்துள்ளனர் என்றும் பரபரப்பு வாக்குமூலம் வழங்கியதையடுத்து குறித்த வழக்கு மேலதிக விசாரணைகளுக்காக நவம்பர் மாதம் 8 ஆம் திகதி தவணையிடப்பட்டுள்ளதுடன், இதன்போது சிறிதுநேரம் திறந்த மன்றில் பரபரப்பு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# 'சீனி இன்றி சுவைப்போம்' முல்லையில் கவனயீர்ப்பு




தேசிய போசாக்கு மாதம் -2017 ஐ முன்னிட்டு வேல்ட் விசன் நிறுவன நிதி அனுசரணையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஆதரவுடன் கரைதுறைப்பற்று தாய்மார் கழகம் நடத்திய கவனயீர்ப்புப் பேரணி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

"சீனி இன்றி சுவைப் போம்" எனும் தொனிப் பொருளில் நேற்று முன்தினம் காலை தண்ணீரூற்று புளியடிச் சந்தியில் ஆரம்பமான கவனயீர்ப்பு பேரணியானது முல்லைத்தீவு மாங்குளம் வீதி வழியாக மு/ வித்தியானந்த தேசிய பாடசாலை கேட் போர்கூடம் வரை நகர்ந்து அங்கு விளக்கவுரைகளும் பரிசில் வழங்கல்களும் நடைபெற்றன.

போசாக்கான உணவு தயாரித்தல் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு இதன் போது பரிசில் வழங்கப்பட்டதோடு துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வைத்தியர் முகுந்தன், சுகாதார கல்வி அலுவலர் பிரணவன், வேல்ட் விசன் நிறுவன முகாமையாளர் யூட். நிசாந்தன், மேற்பார்வை மருத் துவ மாது அனிற்றாகரைதுறைப்பற்று தாய்மார் கழக உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

# வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சருக்கும் முல்லை.மீனவர்களுக்கும் இடையில் சந்திப்பு





வடக்கு மாகாண சபையின் மீன்பிடி அமைச்சராக கடமைகளை பொறுப்பேற்ற வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் கந்தையா சிவநேசனுக்கும் முல்லைத்தீவு மாவட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்குமிடையில் சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் முற்பகல் பத்து மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் கந்தையா சிவநேசன் முல்லை.மாவட்ட மீனவர்களின் குறைகள் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிவதற்காக இந்த சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சருடன் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள், புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (2-281)

# ஒரே குடும்பத்தைச்சேர்ந்த நான்கு பேர் படுகொலை!

## குற்றவாளிக்கு மரண தண்டனை

(கொழும்பு)

அநுராதபுரம் - எப்பாவளை, சந்தரெஸ்கம பிரதேசத்தில் நான்கு பேரை கொலை செய்த ஒருவருக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

2010ஆம் ஆண்டு ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை மகள் மற்றும் மகனை கூரிய ஆயுதத்தினால் தாக்கி கொலை செய்த சம்பவத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட நபருக்கு நீதிபதி மஞ்சுள திலக்கரத்ன நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாளர்கள் எவரும் இருக்கவில்லை. தடயங்களின் அடிப்படை குற்றவாளி கொலைகளை செய்திருப்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி தெரிவித்தார்.

எப்பாவளை, எந்தகல பிரதேசத்தை சேர்ந்த 28 வயதான இளைஞனுக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர் கொலை செய்யப்பட்டவர்களின் உறவினர் என தெரிய வருகிறது. (இ-7)








இளவாலை புனித அன்னாள் ஆலய வருடாந்த திருவிழாவில் திருச்சொரூப பவனி அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள்:-இளவாலை செய்தியாளர்)

# நவராத்திரி நாட்களை அறப்பணி வாரமாக அனுஷ்டிக்க கோரிக்கை

## தென்கைலை ஆதீன அடிகளார்

நவராத்திரி நாட்களை சைவ அறப்பணி வாரமாக அனுஷ்டிக்குமாறு தென்கைலை ஆதீனம் தவத்திரு அகத்தியர் அடிகளார் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன் முப்பெரும் செல்வங்களை இந்நாட்களில் நலிவுற்ற எம் சகோதரர்களுக்கு பகிர முன்வருவோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நவராத்திரி விரதம் குறித்து அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

சக்தியின்றி சிவமில்லை சிவமின்றி சக்தியில்லை என்ற சைவ சமயத் தத்துவத்திற்கு அமைய உலகு எங்கிலும் உள்ள இந்துக்களால் மிகச் சிறப்பாக கொண்டாடப்படும் நவராத்திரி விரதமும் அதனையொட்டிய விஜயதசமி நிகழ்வுகளும் எம் வாழ்வோடு பின்னிப் பிணைந்த விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கின்றது

உலக மாந்தர்கள் யாவருக்கும் இன்றியமையாத கல்வி, செல்வம், வீரத்தை வேண்டி இறை சிவனின் சக்தியாகிய அன்னை பராசக்தியின் முப்பெரும் சக்தி வடிவங்கள் பூசிக்கும் உன்னத நாட்களில் எமக்கு அன்னையவள் ஏற்கனவே தந்திருக்கும் இச் செல்வங்களில் ஓர் பகுதியை எமது சகோதரர்களுக்கு பகிர்ந்தளிக்கும் கைங்கரியத்தை இந்நாட்களில் ஆரம்பித்து தொடர்ந்து செய்வதற்கு உறுதி ஏற்போம்.

குறிப்பாக உடலாலும் உள்ளத்தாலும் பலவீனமடைந்துள்ளோரை ஆற்றுப்படுத்தும் திட்டங்கள் எம் கிராமங்களில் ஏழை குழந்தைகளுக்கான கல்விச் செயற்றிட்டங்கள், அங்கவீனர்கள் பெண் தலைமைத்துவ மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கான வாழ்வாதார நலனோம்புத் திட்டங்களை இந்த வீரத்திற்கான செல்வத்திற்கான கல்விக்கான நாட்களில் முன்னெடுக்குமாறு சைவத்தமிழர்களை அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

எமது தென்கைலை ஆதீன வழிகாட்டலில் சைவ மகா சபை மேற்படி விடயதானங்களுக்கான செயற்றிட்டங்கள் பலவற்றை வடக்கு, கிழக்கு, மலையகம் தழுவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ளது. அதற்கு சரீர ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, சைவ அறப்பணி நிதியம் ஊடாகவோ பங்களிப்பை வழங் குமாறு வேண்டுகின்றோம்.

அதே நேரம் பிரதேசம் சார்ந்த ஆலயங்கள் சைவ நற்பணி மன்றங்கள் ஊடாகவும் இந்த செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

# அச்சுறுத்தும் குப்பை



யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் றெக்கிளமேஷன் அரசு கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக குப்பைகள் தேங்கிக்கிடக்கின்றன. இதனால் துர்நாற்றம் வீசுகின்றது. அது மட்டுமன்றி நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது. டெங்கு போன்ற தொற்று நோய்கள் ஏற்படக் கூடிய அபாயசூழல் காணப்படுவதால் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-106)

# பெண்ணாக மாறிய இராணுவச் சிப்பாய்

பண்டாரவளை நகரில், சந்தேகத்திற்கிடமான முறையில் பெண்ணொருவரைப் போல ஆடையணிந்து நடமாடிய இராணுவச் சிப்பாயை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

விற்பனை நிலையத்துக் கருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் பெண்ணொருவர் நடமாடுவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது. இதன்பிரகாரம் குறித்த இடத்துக்கு சென்ற பொலிஸார், பெண்ணைப் போன்று நடமாடிய நபர் ஊவா பரணகமப் பகுதியைச் சேர்ந்தவர் (வயது-21) எனவும் தெரிய வந்துள்ளது. குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்காக இவர் பெண் வேடம் பூண்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பேஸ்புக் ஊடாக பிறரை ஏமாற்றிய மூதாட்டி கைது

(கொழும்பு)

பேஸ்புக் வலைத்தளம் மூலம் நிதி மோசடி செய்த பெண் ஒருவர் வெலிகம பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிகம பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் இருந்து பரிசுப் பொதி வந்துள்ளதாக பேஸ்புக் ஊடாக தகவல் தெரிவிக்கும் குறித்த பெண், சூழ்ச்சியான முறையில் தனது வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிடுமாறு கோரியுள்ளதாக, ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் ஹோமாகம பகுதியைச் சேர்ந்த 64 வயதான மூதாட்டி எனவும் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும், இது போன்ற மோசடிகளில் மாட்டிக் கொள்ள வேண்டாம் எனபொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-7)

# இலங்கையில் 11,000 குழந்தைகள் விற்பனை

(கொழும்பு)

1980 ஆம் ஆண்டுகளில் இலங்கையிலிருந்து சுமார் 11 ஆயிரம் குழந்தைகள் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த குடும்பத்தினருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குழந்தைகளுக்கான நிலையங்களின் ஊடாகவும் வேற்றுலக நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


இரு தரப்பினரும் போலியான ஆவணங்களைத் தயாரித்து இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. நெதர்லாந்து நாட்டின் குடும்பத்தினருக்கு மாத்திரம் சுமார் 4 ஆயிரம் குழந்தைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் சுவீடன், டென்மார்க், ஜேர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் குழந்தைகள் விற்பனையாகியுள்ளன.

இது தொடர்பில்விசாரணை நடத்த பணிப்புரை விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆட்சி மாற்றம் ஏற்பட்டும் எந்த முன்னேற்றமுமில்லை

## ஜெனிவாவில் பேராசிரியர் போல் நியுமன்



இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ள போதும் காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என பேராசிரியர் போல் நியுமன் தெரிவித்துள்ளார். ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 72வது அமர்வில் கலந்து கொண்ட போது பேராசியர் இந்த கருத்தினை நேற்று முன்தினம் தெரிவித்தார்.

"இலங்கையில் நல்லாட்சி அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்து இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ளன. முன்னேற்றமான செயற்பாடுகள் எதுவும் இல்லை. மனித உரிமைகள் சபையினால் வழங்கப்பட்ட இரண்டு வருட நீடிப்பில் ஏற்கனவே 6 மாதங்கள் நிறைவடைந்துள்ளன. எனினும், தீர்மானங்களின் முக்கிய இலக்குகளை அடைவதில் முன்னேற்றம் மந்த கதியில் காணப்படுவதுடன் அது முற்றிலும் ஒரு அழித்தன மாகவே உள்ளதென தோன்றுகின்றது.

இலங்கையின் இடைக்கால நீதித்துறையை நிறைவேற்றுவதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் உண்மையான முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு போதுமானதல்ல. இலங்கை இராணுவ த்தினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றவாளிகளை நீதிக்கு முன்னால் கொண்டு வருவதற்கு சிறிய சான்றுகள் உள்ளன.

பொது மன்னிப்பு என்ற பெயரில் விடுதலைப்புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் என சந்தேகிக்கப்படும் கணிசமான அளவிலான புனர்வாழ்வு திட்டத்திற்கு திசை திருப்பப்பட்டுள்ளனர். எனினும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நம்பிக்கைளுக்கு ஒரே அடிப்படையாக கொண்டு பொலிஸ் அதிகாரிகளுக்கு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அது சித்திரவதைக்கு முறையான பயன்பாடுகளை ஊக்குவிக்கின்றது.

அனைத்து சமூகங்களும் புறக்கணிக்கப்படுவதோடு, துன்புறுத்தல் மற்றும் தன்னிச்சையான கைது மற்றும் தடுத்து வைப்பது இலக்காக உள்ளது. விடுதலை புலிகளுடன் தொடர்பு வைத்திருப்பதாக சந்தேகிக்கப்படும் எந்தவொரு நபரும் தடுத்து வைக்கப்படுதல் மற்றும் சித்திரவதை ஆபத்தில் உள்ளனர்.

2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத தீர்மானத்தின் அனைத்து பரிந்துரைகளையும் செயற்படுத்த வேண்டும் என்பதற்கமைய இலங்கை நிபந்தனையற்ற முறையில் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் மற்றும் வெளிப்படுத்தப்படாத சித்திரவதை மையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களை வெளியிட வேண்டும் என பேராசியர் போல் நியுமன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இந்தியா மூத்த சகோதரன் சீனா ஒரு சிறந்த நண்பன்

## அமரபுர மகாநாயக்கர் சுட்டிக்காட்டு



தெற்காசியக் குடும்பத்தில் இந்தியா எமது மூத்த சகோதரன் போல இருக்கிறது என்று இலங்கையின், இரண்டாவது சக்திவாய்ந்த பௌத்த பீடமான அமரபுர மகாநிக்காயவின் மகாநாயக்கரான வண. கொட்டுகொட தம்மவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

"பாகிஸ்தான், மாலைதீவு, இலங்கை,நேபாளம் போன்ற நாடுகளை உள்ளடக்கிய தெற்காசியக் குடும்பத்தில் இந்தியா எமது மூத்த சகோதரன். அவர்கள் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் அனைவரும் ஒன்றாக பணியாற்ற வேண்டும்.

பிராந்தியத்தில் அமைதியை கட்டியெழுப்ப இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும், இணைந்து மிகச் சிறந்த பணியாற்ற இலங்கை முயற்சிக்க வேண்டும்.

இந்திய- இலங்கை உறவுகள் மிகமிகப் பழைமை வாய்ந்தது. வரலாற்று ரீதியானது. இந்த உறவுகளை நாங்கள் சேதப்படுத்துவதற்கு எதையும் செய்து விடக்கூடாது.

வடஇந்திய இளவரசனான விஜயன் தான், சிங்கள நாகரிகத்தை உருவாக்கினார் என்பதை புதிய-தலைமுறையினர் நினைவில் கொள்ள வேண்டும்.

அதுபோல தமிழர்களும் இந்தியாவில் இருந்தே வந்தனர். முஸ்லிம்களும் இந்தியா ஊடாகவே வியாபார நோக்கமாக இலங்கைத் தீவுக்கு வந்தனர்.

எமது தேசிய மதமான பௌத்தம் இந்தியாவில் இருந்தே வந்தது. எமது கலாசாரம், எமது எழுத்து வடிவங்கள், எமது பெயர்கள் கூட இந்தியாவில் இருந்தே வந்தன.

இந்தக் காரணங்களால், இந்தியா இல்லாமல் நிற்கவோ, அல்லது அதன் உறவுகளை காயப்படுத்தவோ முடியாது. எனது ஆரம்ப காலத்தை நினைத்துப் பார்க்கிறேன், வடக்கில் உள்ள சிறுவர்கள் படம் பார்ப்பதற்கு சென்னைக்கு நீந்திச் சென்றார்கள்.

சீனாவுடன் நாங்கள் நீண்ட உறவுகளைக் கொண்டிருக்கிறோம். இந்தியா எமது உறவினராக இருக்கும் போது, சீனா ஒரு நண்பனாக இருக்கிறது. இரண்டு சமூகங்களுக்கும் இடையில் பௌத்தம் மூலம், தொடர்புகள் ஆரம்பித்தன.

பொருளாதார ரீதியாக வளர்ச்சி பெற்று உலகின் செல்வந்த நாடுகளில் ஒன்றாக வளர்ந்திருக்கிறது.

கடந்த காலத்தில் எமக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்ட போது, எம்மை மீட்க வந்தார்கள். இந்தியாவினால் அப்போது அதிகம் செய்ய முடியாதிருந்தது.

லங்கா ரில் பௌத்த இடங்களை அழித்த சீன அதிகாரிகளை நான் கண்டிக்கிறேன். ஆனால், பெரும்பாலான இலங்கையர்கள் சீனாவை நண்பனாக உணர்கின்றனர்.

அவர்கள் எமது நண்பனாக இருந்தாலும், அம்பாந்தோட்டை துறைமுக நிலத்தை சீனாவுக்கு வழங்குவதை நாம் எதிர்க்கிறோம்.

நாம் மட்டுமல்ல ஒட்டுமொத்த நாடுமே, அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்க்கிறது" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# கல்வி பயிலும் 35 ஆயிரம் பௌத்த பிக்குகளுக்கு கொடுப்பனவு வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

பிரிவெனாக்களில் கல்வி பயிலும் 35 ஆயிரம் பௌத்த பிக்குகளுக்கு கொடுப்பனவொன்றை வழங்க கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

பிக்குகளின் கல்வி நிலை மேம்பாட்டைக் கருத்தில் கொண்டே இந்த கொடுப்பனவு வழங்குவதாகவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

# நாகர்கோவில் குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்ட மாணவர் நினைவு தினம்

(கரணவாய்)

இலங்கை விமானப்படையின் குண்டுவீச்சு தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட 21 பாடசாலை மாணவர்களின் 22 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று (22.09.2017) நடைபெறும். 1995ஆம் ஆண்டு நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் மீது இலங்கை விமானப்படையின் புக்காரா விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 21 பாடசாலை மாணவர்கள் பலியாகினர். இதன் 22 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று பிற்பகல் 2.மணிக்கு பாடசாலையிலுள்ள நினைவுத் தூபியில் நடைபெறும். (இ-60)

# ஜானக பெரேரா படுகொலை வழக்கு குறித்த சாட்சி விசாரணைகள் பூர்த்தி

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்ட 31 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்த மனுதாரர் சாட்சி விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளன. அநுராதபுரம் உயர் நீதிமன்ற நீதிபதி ஸ்வர்ணா பதிபதி முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதிகளின் சாட்சி விசாரணை எதிர்வரும் 3ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என நீதிபதி அறிவித்துள்ளார்.

இந்த வழக்கின் பிரதான சந்தேக நபர் உமர் ஹபிதாப்பை எதிர்வரும் 3ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி அநுராதபுரத்தில் தற்கொலைத் தாக்குதலுக்கு இலக்காகி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா உள்ளிட்டவர்கள் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நூல் வெளியீடு

சி.கா. செந்திவேல் எழுதிய வட்டுக்கோட்டையிலிருந்து முல்லைத்தீவு வரை நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நாளை 23ஆம் திகதி மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

பேராசிரியர் சி. தில்லைநாதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இந்நூல் குறித்த வரலாற்றுப் பார்வையை தெ.ஞா. மீநிலங்கோவும் அரசியற் பார்வையை க.த. இராஜரட்ணமும் சமகாலப்பார்வையை த.வி. ரெஷாங்கனும் ஊடகப் பார்வையை அ. மதனும் நிகழ்த்தவுள்ளனர்.

புதிய நீதி வெளியீடாக வந்துள்ள இந்நூல் வட்டுக்கோட்டை தீர்மானம் தொட்டு முள்ளிவாய்க்காலில் முடிந்த ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றை விமர்சன நோக்கில் ஆராய்கிறது. (இ-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை யாழ்.பிர தேசத்தில் நுணாவில், கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்களப்பு, கோகிலாக்கண்டி, கேரதீவு வீதி, அறுகுவெளி, பனை வள ஆராய்ச்சி நிலையம், கைதடி யுனைரட் மோட்டர்ஸ், கைதடி வடமாகாண சபை அலுவலகம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் கண்டி வீதி (ஏ9 வீதி), 1ம் மற்றும் 2ம் குறுக்குத்தெரு, மதவு வைத்த குளம், மூன்றுமுறிப்பு, தவசிக்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம், ஈரப்பெரியகுளம், வேரகம, கற்குண்டமடு, அலுத்கம, சிறுகல்ல, பகல அழுத்வத்த, புபுதுகம, குருந் துப்பிட்டிய, பூ-ஓயா படை முகாம், ஈரப்பெரியகுளம் படை முகாம், ஈரப்பெரிய குளம் SLBC, கார்கில்ஸ் பூட் சிற்றி, மண்டெரின் ஆடைத் தொழிற்சாலை, Kowloom ஆடைத் தொழிற்சாலை, குளோப் அரிசி ஆலை, விமானப்படை இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மன்னார் நகரம் ஒரு பகுதி, பள்ளிமுனை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# எதிர்வரும் தேர்தலுக்கு முன் மைத்திரி - மகிந்த இணைவு

## பிரதியமைச்சர் நம்பிக்கை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஒன்றிணைந்து, எதிர்வரும் தேர்தலை ஒன்றாக கைகோர்த்து எதிர்கொள்ளவுள்ளதாக துறைமுக மற்றும் கப்பற்றுறை பிரதியமைச்சர் நிஷாந்த முத்துஹெட்டிகம நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உள்ளூராட்சிகள் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்திலும், வெளியரங்கிலும் விரோதிகளாக காட்டிக்கொள்ளும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும் ஒன்றாக சேரும் நாள் வெகுதூரம் இல்லை என்றும் அவர் கூறினார்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

அரசாங்கத் தின் பலத்தை நிரூபித்த மூன் றிலிரண்டு பெரும்பான்மை குறித்து தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிரதியமைச்சர் முத்து ஹெட்டிகமவின் காலியிலுள்ள இல்லத்தில் நடைபெற்றது. இதன் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

## அ.தி.மு.க. ஆட்சியை கவிழ்க்க நினைப்பது பகல் கனவாகவே முடியும் - பழனிச்சாமி



(நாகப்பட்டினம்)

அ.தி.மு.க. ஆட்சியை கவிழ்க்க நினைப்பவர்களின் எண்ணம் பகல் கனவாக முடியும் என்று, நாகையில் நடந்த எம்.ஜி. ஆர். நூற்றாண்டு விழாவில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா தமிழகம் முழுவதும் அரசு சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி நாகை மாவட்டத்தில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா நாகை கிழக்கு கடற்கரைசாலையில் உள்ள பாலையூரில் நேற்று முன்தினம் நடந்தது.

விழாவில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உருவப்படத்தை திறந்து வைத்தும், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ.மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கியும் முதலமைச்சர் பழனிச்சாமி பேசினார். அப்போது அவர் கூறிய தாவது,

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா செய்த சாதனைகளை மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் இந்த நூற்றாண்டு விழா நடத்தப்படுகிறது.

ஆனால் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரான மு.க.ஸ்டாலின் அரசு விழாவில் அரசியல் பேசலாமா? என்கிறார்.

தி.மு.க. ஆட்சிகாலத்தில் எத்தனையோ அரசு விழாக்கள் நடந்தன. அந்த விழாக்களில் கருணாநிதி அரசியல் பேசி உள்ளார். இதற்கு ஆதாரங்கள் உள்ளன. இந்த ஆட்சியை கலைக்க வேண்டும் என்று திட்டமிட்டு சதிவலை பின்னப்படுகிறது. இந்த ஆட்சியில் என்ன குறை கண்டார்கள்.

6 ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்கள் மக்களை சென்று சேர்ந்துள்ளன. அது உங்களுக்கு பொறாமையாக உள்ளது.

சிலர் இந்த ஆட்சி கலைந்து விடும் என்கிறார்கள். அது நடக்காது. இந்த ஆட்சி தொடர வேண்டும் என்று தான் மக்கள் விரும்புகிறார்கள்.

இந்த ஆட்சியை கலைக்க நினைப்பவர்களின் எண்ணம் பகல்கனவாக முடியும். இந்த அரசுக்கு மக்கள் பலம் உள்ளது என்பதற்கு இந்த கூட்டமே சாட்சி என்று அவர் தெரிவித்தார். (3-8)

## ஜெயலலிதாவை அப்... கறுப்பு தினம் இன்...

(சென்னை)

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணத்தில் நீடிக்கும் மர்மங்களுக்கு இன்னும் விடை கிடைக்காத நிலையில், அவர் அப்பலோவில் அனுமதிக்கப்பட்ட கறுப்பு தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

ஜெயலலிதா எதனால் திடீர் என மரணத்தை தழுவினார்? அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகளை ஏன் மூடி மறைத்தனர்? 74 நாட்கள் அவர் வைத்தியசாலையில் இருந்தபோது உண்மையில் என்னென்ன நடந்தது?

இத்தகைய மர்மங்களுக்கு இன்னமும் முழுமையான விடை கிடைக்கவில்லை. ஜெயலலிதா உடல் நல விடயத்தில் ஏற்பட்ட மர்மங்கள் தொடர்ந்து மர்மங்களாகவே நீடிக்கின்றன.

உண்மைகள் வெளிவருமா? பொது மக்களும்,



அ.தி.மு.க. தொண்டர்களும் நம்பிக்கை இல்லாமல் எதிர் பார்ப்புகளுடன் உள்ளனர்.

தமிழக அரசியல் களத்தை 35 ஆண்டுகள் கலக்கியவர், 32 ஆண்டுகள் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பதவியில் அரசி போல இருந்தவர். கடைசி 10 ஆண்டுகளில் அவரை சுற்றியே தமிழக அரசியல் சுழன்றது. இத்தகைய ஆற்றல்மிக்க, ஆளுமை மிக்க தலைவிக்கு ஏற்பட்ட முடிவு ஜீரணிக்க முடியாதது.

## மும்பையில் கனமழை

## ஓடுபாதையிலிருந்து விலகி சேற்றில் சிக்கியது விமானம்

## 183 பேர் மீட்பு




(மும்பை)

மும்பையில் பெய்து வரும் கனமழைகாரணமாக விமான நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தரையிறங்கிய விமானம் ஓடு பாதையில் இருந்து விலகி சேற்றில் சிக்கிக் கொண்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மராட்டிய மாநில தலைநகர் மும்பையில் கன மழை பெய்து வருகின்றது. இதனால், நகரின் பல்வேறு பகுதிகள் வெள்ளக்காடாக காட்சியளித்து வருகின்றன.

இந்நிலையில், மும்பை விமான நிலையத்திற்கு வாரணாசியிலிருந்து வந்த ஸ்பைஸ் ஜெட் விமானம் ஓடு பாதையில் தரையிறங்கியது.

கனமழை காரணமாக ஓடுபாதை ஈரமாக இருந்ததால், விமானம் சற்று விலகி சேற்றில் சென்று சிக்கிக் கொண்டது.

இதனால், விமானத்தில் இருந்த 183 பயணிகளும் பதற்றமடைந்தனர். உடனே, பாதுகாப்பு அதிகாரிகள் விரைந்து சென்று பயணிகள் அனைவரையும் பத்திரமாக மீட்டனர்.

இதனால், விமான நிலையத்தின் வழக்கமான நடவடிக்கைகள் சில மணி நேரம் பாதிக்கப்பட்டன. தரையிறங்க வேண்டிய விமானங்கள் வேறு விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டது. (3-8)

## பழனிச்சாமி அணியில் இணையவுள்ளார் தீபா

(சென்னை)

அரியலூர் மாணவி அனிதாவின் வீட்டுக்கு செல்லும் வழியில் திருச்சியில் வைத்து நிருபர்களுக்கு பேட்டி அளித்த தீபா, மக்களும் தொண்டர்களும் விரும்பினால் எடப்பாடி பழனிச்சாமி அணியில் இணைவது பற்றி பரிசீலிப்பேன் என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக கட்சி நிர்வாகிகள், தொண்டர்களிடம் தீபா கருத்து கேட்டு வருகிறார். இதுபற்றி அவர் விரைவில் முடிவெடுத்து அறிவிப்பார் என்று தெரிகிறது. பேரவையை கலைக்க அவர் திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

சசிகலா குடும்பத்தினர் தி.மு.கவின் கைக் கூலிகளாக செயற்பட்டு வருகிறார்கள். தொடக்கத்தில் இருந்தே தி.மு.கவுடன் இணைந்து



ஜெயலலிதாவுக்கு எதிராக செயற்பட்டு வந்துள்ளனர். அப்போதெல்லாம் பழனிச்சாமியும், ஓ.பன்னீர்செல்வமும் கண்டு கொள்ளவில்லை. காலம் கடந்து சசிகலா குடும்பத்துக்கு எதிராக களம் இறங்கியுள்ளனர்.

இரட்டை இலைச் சின்னத்தை மீட்பது தொடர்பாக எடப்பாடி பழனிச்சாமி- ஓ.பி.எஸ். அணியில் தாக் கல் செய்துள்ள பிரமாண பத்திரங்கள் போலியானவை. இது தொடர்பாக தேர்தல் ஆணையத்தையும், நீதிமன்றத்தையும் அணுகவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.

எடப்பாடி பழனிச்சாமி அணியில் இணைவதற்கு பரிசீலிப்பதாக கூறியுள்ள தீபா ஜெயலலிதா மரணம் அடைந்தவுடன் அ.தி.மு.க வில் இருந்து தனியாக பிரிந்து சென்ற ஓ.பன்னீர் செல்வத்துடன் கைகோர்த்தது குறிப்பிடத்தக்கது. அப்போது ஓ.பி.எஸ். வீட்டிற்கு சென்ற தீபாவை ஆரத்தி எடுத்து அவரது குடும்பத்தினர் வரவேற்றனர்.

அ.தி.மு.கவின் இருகரங்களாக ஓ.பி.எஸ்.சும் நானும் செயற்படுவோம் என்று தீபா அப்போது கூறினார். ஆனால் அவரது அணியில் இணையாமல் தனியாக செயற்பட்டு வந்தார். (3-8)

## தீவிரவா... பொது...

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் புல்வாமா மாவட்டத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 3 பேர் பலியாகினர். மேலும், சி.ஆர்.பி.எப். வீரர்கள் 7 பேரும், பொதுமக்களில் 10 பேரும் காயமடைந்தனர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் புல்வாமா மாவட்டத்தின் முரால் பகுதியில் உள்ள பேருந்து நிலையத்தில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகள் பொலிஸார் சென்ற வாகனத்தை குறிவைத்து கையெறி

## 7 வயதுச் சிறுமியைக்கொன்ற காமுகனுக்கு பொதுமக்கள் தூக்கு

### ஈரான் நீதிமன்றம் உத்தரவு

(பக்தாத்)

ஈரானில் 7 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்து கொன்றவனை நீதிமன்ற உத்தரவின்படி பொது மக்கள் முன்னிலையில் தூக்கிலிட்டனர். இந்த காட்சிகளை பொதுமக்கள் படம் பிடித்து இணையத் தளங்களிலும் வெளியிட்டுள்ளனர்.

ஈரானில் உள்ள அர்டேபிள் பிராந்தியத்தில் 7 வயது சிறுமியை இஸ்மாயில் ஜபரசேத் (வயது 42) என்பவன் துஷ்பிரயோகம் செய்து கொலை செய்தான். இது சம்பந்தமான வழக்கு நீதிமன்றில் நடந்து வந்தது.

அவனை பொதுமக்கள் முன்னிலையில் தூக்கில் போடும்படி ஈரான் நீதிமன்றம் உத்தரவிட்டது. அவனை பர்சாபாத் என்ற இடத்தில் உள்ள சதுக்கத்தில் பொது மக்கள் முன்னிலையில் தூக்கில் போட ஏற்பாடு செய்யப்பட்டது.

முகத்தை மூடி அவனை அழைத்து வந்து மக்கள் கூட்டத்தின் மத்தியில் தூக்கிலிட்டனர். அப்போது பொது மக்கள் ஆரவாரம் செய்தனர். இந்த காட்சிகளை படம் பிடித்து இணையத் தளங்களிலும் வெளியிட்டுள்ளனர். (3-8)

## தகுதி நீக்க ...

### தமிழக ஆளுந...

(சென்னை)

சென்னை உயர்நீதிமன்றத்தில் 18 எம்.எல்.ஏக்கள் தகுதி நீக்க வழக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளதால் ஆளுநர் வித்யாசாகர் ராவ் நேற்று மாலை மராட்டியம் திரும்பினார்.


முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் போர்க்கொடி உயர்த்தியதால் அரசியலில் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து தமிழக ஆளுநர் பொறுப்பு வகிக்கும் வித்யாசாகர் ராவ் கடந்த வாரம் மும்பையிலிருந்து சென்னை வந்தார்.

அவரை தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள் சந்தித்து ஆதரவு வாபஸ் கடிதம் கொடுத்தனர். அதன் பிறகு ஆளுநர் மும்பை திரும்பினார். இந்த நிலையில் 18 எம்.எல்.ஏக்களை தகுதி நீக்கம் செய்து சபாநாயகர் தனபால்

## கின்னஸ் சாதனைப் பெண்

(பீஜிங்)

சீனாவைச் சேர்ந்த 48 வயது யு ஜியான்ஸியாவின் இமை முடிகள் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு மிக நீளமானவை! சாதாரணமாக மனிதர்களின் இமை முடிகள் 0.8 முதல் 1.2 செ.மீ. வரை நீளம் இருக்கும்.



ஆனால் ஜியான்ஸியாவின் இமை முடிகள் 12.4 செ.மீ. நீளம் இருக்கின்றன! உலகின் மிக நீளமான இமை முடிகள் என்ற கின்னஸ் சாதனையைப் பெற்று விட்டன. 2018-ம் ஆண்டு கின்னஸ் புத்தகத்தில் ஜியான்ஸியாவின் பெயர் இடம்பெற இருக்கிறது.

உலகம் முழுவதும் 500 பேர் இந்தப் பிரிவில் போட்டியிட்டனர். அதில் ஒருவர் கூட இவருக்கு அருகில் வர முடியவில்லை. (3-8)

# வெளிநாடு

## அப்பலோவில் சேர்த்த ...ன்று அனுஷ்டிப்பு

இப்போதும்கூட, தமிழ்நாட்டு மக்கள் மனதில் ஜெயலலிதா மரணம் தொடர்பான அடுக்கடுக்கான கேள்விகள் குவிந்து கிடக்கின்றன.

2015ஆம் ஆண்டே ஜெயலலிதா உடல்நலக் குறைவால் சற்று தளர்ச்சி அடைந்தார். அப்போதே ஏன் அவருக்கு உரிய சிகிச்சைகள் அளிக்கப்படவில்லை.

உலகத் தரம் வாய்ந்த சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்று சொன்னாலும் கடைசியில் அவர் உயிரை காப்பாற்ற இயலாமல் போய் விட்டதே, ஏன்?

இது போன்று ஜெயலலிதா உடல் நலம் பற்றி ஏராளமான கேள்விகள் மக்கள் மனதில் உள்ளன. இந்த கேள்விக்குறிகள் மக்கள் மனதில் உருவாகி ஓராண்டு ஆகப் போகிறது.

ஆம், ஜெயலலிதா உடல் நலக்குறைவு காரணமாக சென்னை அப்பலோ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு இன்றுடன் ஓராண்டு முடியப் போகிறது. கடந்த ஆண்டு செப்டெம்பர் 22 ஆம் திகதி இரவில்தான் ஜெயலலிதா உடல் நலம் இல்லாமல் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அந்த செப்டெம்பர் 22 ஆம் திகதியை அ.தி.மு.க. தொண்டர்கள் ஒவ்வொருவராலும் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்து விட முடியாது.

68 வயது வரை வாழ்ந்த அவர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்படாமல் இருந்திருந்தால் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து தமிழக மக்களுக்கு சேவை செய்திருப்பார். அவர் உடல் நலம் பாதித்த அந்த செப்டெம்பர் 22 ஆம் திகதி அ.தி.மு.க. வினருக்கு கறுப்பு நாளாகும்.

இன்று அந்த முதலாண்டு கறுப்பு நாளாகும்... அ.தி.மு.கவினருக்கு ஏக் கத்தையும் பரிதவிப்பையும் ஏற்படுத்திய நாள் விடை காண முடியாத மர்மங்கள் சூழ்ந்த நாள் என்றும் சொல்லலாம். (3-8)

## மனிதாபிமான அடிப்படையில் 8 மில்லியன் டொலரை வடகொரியாவுக்கு வழங்குகின்றோம்

### தென்கொரியா அறிவிப்பு

(சியோல்)

மனிதாபிமானத்தின் அடிப்படையில் வடகொரியாவுக்கு 8 மில்லியன் டொலர் அளவில் நிதியுதவி வழங்கப்படவுள்ளது என தென்கொரிய அரசு தெரிவித்துள்ளது.

வடகொரியா சமீப காலமாக பலமுறை அணு குண்டுகளையும், கண்டம்விட்டு கண்டம்பாயும் பல ஏவுகணைகளையும் பரிசோதித்து வருகிறது.

இதற்கு தென்கொரியா உள்ளிட்ட உலக நாடுகள் தங்கள் எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றன.

மேலும், வடகொரியா அரசு மீது பொருளாதார தடைகளையும் விதித்துள்ளன. ஆனால் இதையெல்லாம் பொருட்படுத்தாத வடகொரியா, தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்நிலையில், மனிதாபிமானத்தின் அடிப்படையில் வடகொரியாவுக்கு 8 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட உள்ளது என தென் கொரிய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அதிகாரிகள் கூறுகையில், உலக உணவு அமைப்பு மற்றும் யுனிசெப் அமைப்பின் பரிந்துரையின் பேரில் வடகொரியாவுக்கு நிதியுதவி அளிப்பது தொடர்பான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

அப்போது வடகொரியாவுக்கு நிதி வழங்குவதற்கு கண்டனங்கள் எழுந்தன.

ஆனாலும், மனிதாபிமானத்தின் அடிப்படையில் வடகொரியாவுக்கு நிதியுதவி வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, சுமார் 8 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கப்படவுள்ளது. இந்த நிதியில் 4.5 மில்லியன் டொலர் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து உணவுகள் வழங்குவதற்கும், 3.5 மில்லியன் டொலர் தடுப்பூசிகள் மற்றும் மருத்துவ செலவுகளுக்காக வழங்கப்படவுள்ளது. விரைவில் இந்த நிதியுதவி அவர்களுக்கு சென்று சேரும்.

கொரியா பகுதியில் நிலவிவரும் பதற்றமான சூழ்நிலையிலும் வடகொரியாவுக்கு நிதியுதவி வழங்க தென்கொரியா முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

## சிரியாவில் 850 கிளர்ச்சியாளர்களை கொன்று குவித்த ரஷ்ய விமானப்படை



(மொஸ்கோ)

சிரியாவில் அரசுக்கு எதிராக ஆயுதமேந்தி போராடி வரும் கிளர்ச்சியாளர்கள் 850 பேரை கடந்த 24 மணி நேரத்தில் விமானப்படை கொன்றுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் அரசுக்கு எதிராக பல்வேறு கிளர்ச்சிக்குழுக்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆயுதமேந்தி போராடி வருகின்றது. அரச தரப்புக்கு ஆதரவாக ரஷ்யாவும், கிளர்ச்சிக் குழுக்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும் களமிறங்கியுள்ளன.

இத்தனை ஆண்டுகள் நடைபெற்று வரும் சண்டையினால் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பலியாகியுள்ளனர். பல இலட்சம் மக்கள் அகதிகளாக பல்வேறு நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இந்நிலையில், அந்நாட்டின் இட்லிப் நகரில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் சுமார் 850 கிளர்ச்சியாளர்கள் வான் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கிளர்ச்சிக்குழுக்களுக்கு ஆயுத உதவிகள் வழங்குவதை நிறுத்த அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ ஏற்கனவே முடிவெடுத்துள்ளதால், இன்னும் சில காலத்தில் கிளர்ச்சியாளர்கள் முற்றிலும் ஒடுக்கப்படும் நிலை அங்கு காணப்படுகிறது. (3-8)

## ...திகளின் தாக்குதலில் ...மக்கள் மூவர் பலி




குண்டுகளை எறிந்து தாக்குதல் நடத்தினர். பின்னர் துப்பாக்கியால் சுட்டும் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 3 பேர் பலியாகினர். மேலும், பொதுமக்களில் 10 பேரும், சி.ஆர்.பி.எப். படைவீரர்கள் 7 பேரும் காயம் அடைந்தனர். சக பொலிஸார் அவர்களை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்த்தனர். அங்கு அவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அப்போது அந்த பகுதிக்கு வந்த ஜம்மு-காஷ்மீர் பொதுப்பணித்துறை அமைச்சர் அக்தர் இந்த தாக்குதலில் இருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காஷ்மீரின் ராம்பான் மாவட்டத்தில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் எஸ்.எஸ்.பி. தலைமை காவலர் ஒருவர் பலியானது குறிப்பிடத்தக்கது. (3-8)

## ... வழக்கு தள்ளி வைப்பு

### ...நர் மராட்டியம் திரும்பினார்

உத்தரவிட்டார்.

இதற்கிடையே பெரும்பான்மையை நிரூபிக்க ஆளுநருக்கு உத்தரவிடக் கோரி தி.மு.கவும், தகுதி நீக்கத்தை எதிர்த்து 18 எம்.எல்.ஏக்களும் சென்னை உயர்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தனர். இதையடுத்து ஆளுநர் வித்யாசாகர் ராவ் அவசரமாக கடந்த செவ்வாய்க்கிழமை சென்னை திரும்பினார்.

தி.மு.க. வழக்கும், தகுதி நீக்க வழக்கும் நேற்று முன்தினம் சென்னை உயர் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. அப்போது நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த விதிக்கப்பட்ட தடை நீட்டிக்கப்பட்டதுடன், எம்.எல்.ஏ.க்கள் தகுதி நீக்கத்துக்கு தடை விதிக்கவும் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

வழக்கு விசாரணை அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்கு தள்ளி வைக்கப்பட்டது. இதனால் அரசியல் பரபரப்பு சற்று தணிந்து இருக்கிறது. இனி 4ஆம் திகதி மீண்டும் வழக்கு விசாரணைக்கு வந்த பின்புதான் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடங்கும்.

அரசியல் பரபரப்பு சூடு குறைந்ததால ஆளுநர் வித்யாசாகர் ராவ் நேற்று மாலை மீண்டும் மராட்டியம் திரும்பினார். மும்பையில் மழை பெய்து விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டு இருப்பதால் அவர் சென்னையில் இருந்து நேற்று மாலை 3.30 மணிக்கு நாக்பூர் சென்றார்.

அங்கிருந்து கார் மூலம் மும்பை செல்ல திட்டமிட்டுள்ளார். (3-8)


## இந்தியா மீது அணு ஆயுத தாக்குதல் நடத்தவும் தயங்கமாட்டோம்

### பாகிஸ்தான் பிரதமர் மிரட்டல்

(இஸ்லாமாபாத்)

தேவைப்பட்டால் இந்தியா மீது அணு ஆயுத தாக்குதல் நடத்தவும் தயங்கமாட்டோம் என்று கூறி பாகிஸ்தான் பிரதமர் ஷாஹித் அப்பாஸி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

நியூயோர்க்கில் வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பான கவுன்சில் ஒன்றில் பேசிய பிரதமர் ஷாஹித், இந்தியாவின் அண்மைக் கால விமர்சனங்கள் பாகிஸ்தானை தூண்டும் விதத்தில் அமைந்துள்ளன என்றார்.



குறுகிய தூரம் சென்று தாக்கும் அணு ஆயுதங்களை பாகிஸ்தான் தயாராக வைத்திருக்கிறது என்ற அவர், இந்தியா தனது போக்கை மாற்றிக் கொள்ளாவிட்டால் அவற்றை பிரயோகப்படுத்தப்போவதாகவும் அசட்டுத் துணிச்சல் காட்டியுள்ளார்.

ஐ.நாவில் அமெரிக்கா மற்றும் ஜப்பான் பிரதிநிதிகளுடன் நடத்திய முத்தரப்பு பேச்சுவார்த்தையில் வடகொரியாவுக்கு பாகிஸ்தான் அணு ரகசியங்களை விற்கிறது என்று வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் குற்றம் சாட்டினார். இதற்கு பதிலளிக்கும் வகையில் அப்பாஸி இப்படி பேசியுள்ளதாக தெரிகிறது. வடகொரியா மட்டுமே அணு ஆயுத மிரட்டல்களை விடுத்து வரும் நிலையில், இந்தியாவின் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் நிலையில் பாகிஸ்தான் பிரதமரின் பேச்சு அமைந்துள்ளதாக சர்வதேச அரசியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். (3-8)

# இலங்கையில் நிலையான அமைதி ஏற்பட இன்னும் அதிகம் செய்ய வேண்டும்

## ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி வலியுறுத்து



(கொழும்பு)

இலங்கையில் அமைதியைக் கட்டியெழுப்புவதற்கும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் இன்னும் அதிகமாக செய்ய வேண்டிய தேவை உள்ளது என்று இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலி தெரிவித்துள்ளார்.

அமைதிக்கான அனைத்துலக நாள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

"ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 21ஆம் திகதியை அமைதிக்கான அனைத்துலக நாளாக கொண்டாடுகிறோம். எல்லா நாடுகள், மற்றும் மக்களிடையே அமைதியை வலுப்படுத்துவதற்காக இந்த நாளை ஐ.நா பொதுச்சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

இன்று அனைத்துலக சமுகம் என்ற வகையில், எமது கடமைகளை நினைவில் கொள்ள வேண்டும் வன்முறை மோதல்களும், பாகுபாடுகளும், மிகவும் பாதிப்புகளைத் தரக் கூடியது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டு, "அமைதிக்காக இணைந்திருந்தல் - அனைவருக்கும் மதிப்பளித்தல், பாதுகாப்பு மற்றும் கௌரவம்" என்ற தொனிப் பொருளில் அமைந்துள்ளது.

குறிப்பாக அகதிகளையும், குடியேற்றவாசிகளையும் கவனத்தில் கொள்கிறோம். அனைவரதும் மனித உரிமைகளைப் பாதுகாத்து, பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிரந்தரத் தீர்வைக் காண வேண்டும்.

மோதல்களுக்கான காரணிகளுக்குத் தீர்வு கண்டு, வன்முறைகளைத் தடுத்து, ஒற்றுமையை உறுதிப்படுத்த வேண்டியது எமது கடப்பாடாகும்.

இலங்கையில் போர் முடிந்து விட்டது. இன்னமும் வெறுப்பு மற்றும் பாகுபாடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமைகள் உள்ளன.

நிலையான அமைதிக்காக அனைவரும் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பு இன்னமும் உள்ளது.

அமைதியைக் கட்டியெழுப்புதல், மற்றும் நல்லிணக்கத்துக்கு இன்னமும் அதிகமாகச் செய்ய வேண்டியுள்ளது.

இதன் அர்த்தம், நாம் மற்றவரின் மதத்தை, இனத்தை, கலாசாரத்தை, பெறுமானத்தை, அரசியல் நம்பிக்கையை மதிக்க வேண்டும். அர்த்தமுள்ள முன்னேற்றங்களுக்காக, வேறுபாடுகளை மறந்து இணைந்து செயற்பட வேண்டும்.

பாகுபாடு, சகிப்பற்ற தன்மை மற்றும் சமத்துவமின்மையை ஊக்குவிக்கப்படுதல் அல்லது அலட்சியம் செய்யப்படும் வரை, எங்களது முயற்சிகள் பயனற்றவை." என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# மகேந்திரன் சாட்சியமளிக்க வேண்டும்

## ஜனாதிபதி ஆணைக்குழு அறிவிப்பு



இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், வெளிநாட்டு பிரஜையாக இருந்தாலும், இலங்கை சட்டத்தின் கீழ் உட்பட்டவர். ஆகையால், அவர் ஆணைக்குழுவில் சாட்சியமளிக்கவேண்டும் என்று பிணைமுறி தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், இலங்கைப் பிரஜை இல்லை என்பதால், பிணைமுறி தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில், சாட்சியமளிக்க வேண்டிய அவசியமில்லை என அவர் சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று முன்தினம் விசேட அறிக்கையை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில், "அர்ஜுன் மகேந்திரன் வெளிநாட்டவராக இருந்தாலும் எங்களுடைய அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட நபரென எம்மால் கவனத்திற்கொள்ள முடியாது. அவர், ஆணைக்குழுவில் ஆஜராகி சாட்சியமளிக்க வேண்டும் என்பதற்காகவே நோட்டிஸ் அனுப்பப்பட்டது.

"அர்ஜுன் மகேந்திரன், இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவியேற்றதன் பின்னர் அவரை வெளிநபராகக் கவனத்தில் கொள்ள முடியாது. அர்ஜுன் மகேந்திரனின் நிலைப்பாடும், அர்ஜுன அலோசியஸின் நிலைப்பாடும் ஒன்றுக்கொன்று வேறுபட்டுள்ளது.

"அர்ஜுன் மகேந்திரனுக்கு நோட்டிஸ் அனுப்பி வைக்கப்பட்ட போது, தனக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என்றும் அதில் தன்னைப் பிரதிவாதியாக குறிப்பிட முடியும். அதனடிப்படையில்தான் , ஆணைக்குழுவில் சாட்சியமளித்தால் அது தனக்குப் பாரபட்சமாக அமையும் என்றும் தெரிவித்திருந்தார்.

"இந்நிலையில், ஆணைக்குழுவில், தான் சாட்சியமளிப்பேன் எனத் தெரிவித்திருந்த நிலையில், அவர் சாட்சியமளிக்க வேண்டும். அது தொடர்பில் அவரது சட்ட ஆலோசகர் ஆலோசனை வழங்குவார் என ஆணைக்குழு நம்புகின்றது" என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## 19 ஆண்டுகளின் பின்னர்

# கொலைக் குற்றவாளிகள் மூவருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

தம்புள்ளை - மிரிஸ்கோனியா சந்தி - பலுகால பிரதேசத்தில் 19 ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற மனிதப்படுகொலை ஒன்றின் குற்றவாளிகள் மூவருக்கு கண்டி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

1998ஆம் ஆண்டு சோமரத்ன என்பவருடைய் கொலை தொடர்பில் தம்புள்ளை பொலிஸாரினால் கண்டி மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதி ரோஹன அநுர குமார ஹேரத்தினால் இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஆறு சந்தேகநபர்களுக்கு எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டிருந்த நிலையில் மூன்றாவது மற்றும் ஆறாவது சந்தேகநபர்களுக்கு விடுதலை கிடைத்துள்ளது.

அதேநேரம் நான்காவது சந்தேகநபர் உயிரிழந்துள்ளதாக நீதிமன்றத்தில் பதிவாகியுள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்


## திமிர் எனப்படுவது யாதெனில்...

நின்று கொண்டு விலகாமல் இருந்தால்கூட, "ரொம்பத்தான் திமிர் இவனுக்கு", என்று கூறுவார்கள்.

எதையாவது சற்றே தூக்கிப் போட்டால் உடனே "என்ன திமிரா?" என்று சர்வ சாதாரணமாகக் கேட்கிறார்கள். சொன்னதைக் கேட்காவிட்டால் கூட, "ஆனாலும் உனக்கு இவ்வளவு திமிர் கூடாது" என்கிறார்கள். ஆனால் வரும் "ஆமாம்! எனக்குத் திமிர் தான்!" என்று ஒப்புக் கொள்வதாகத் தெரியவில்லை. சொல்லப் போனால் திமிர் என்றால் அதற்கு என்ன பொருள் என்பதே பலருக்கத் தெரியாது ஆணவம் என்றும், அகந்தை என்றும் சிலர் இதற்குக் குறிப்பிட்டாலும் இச் சொற்களுக்கும் தெளிவான விளக்கம் இன்னும் பெறப்படவில்லை.

ஒரு பெண்ணை ஓர் ஆண் கேலி செய்தால் "என்ன திமிர் இருந்தால் நீ அப்படிக் கேலி செய்வாய்?" என்று நான்கு சாத்துச் சாத்துகிறார்கள். மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளும் இயல்பும் (சாடிஸத்தின் ஆரம்ப நிலை) மற்றவர்களைவிட நமக்கு நிறையத் தெரியும் என்று எண்ணும் மனநிலையும், மற்றவர்களை மதிக்காத போக்கும் அவர்களை வம்பிற்கு இழுக்கும் போக்கும் தான் திமிர் எனப்படுகிறது. இனம்புரியாத உற்சாகத்தின் போது நாம் செய்யும் சில செயல்கள் கூட மற்றவர்களால் திமிர்த்தனமான செயல்கள் எனப் புரிந்து கொள்ளப்பட வாய்ப்பு இருக்கிறது என்பதால் இதுவும் தவிர்க்கப்பட வேண்டும். சிலருக்குத் தங்கள் அழகைப் பற்றிப் பெருமை. சிலருக்குத் தங்கள் புத்திசாலித்தனத்தைப் பற்றிப் பெருமை. வேறுசிலருக்கோ தங்களுடைய பொருட்களைப் பற்றி பெருமை. அவர்களுடைய பெருமைகளை நாம் எப்போது அலட்சியம் செய்யத் துவங்கி விட்டோம் என்று இந்த உலகம் நம்ப ஆரம்பிக்கிறதோ, அப்போதிலிருந்தே நம்மைப் பாராட்டத் தொடங்கி விடுகிறது. இது பலருக்குப் புரிவதில்லை. மற்றவர்களை எப்போது மதிக்கிறோமோ அப்போது முதல் உலகம் நம்மை மதிக்க ஆரம்பிக்கிறது. எப்போது மற்றவர் சந்தோஷத்தில் அக்கறை காட்டுகிறோமோ அப்போதே நம் சந்தோஷத்தைப் பற்றி மற்றவர்கள் அக்கறை காட்ட ஆரம்பித்து விடுகிறார்கள். திமிரை விரட்டினால் போதும், இவ்வளவு பலன்களும் நம்மை உடனே வந்து சேரக் காத்துத் தவங்கிடக்கின்றன!

**லேனா தமிழ்வாணன்**



# ஈழத்துத் திருப்பதி யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று கொடியேற்றம்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளாகிய காத்தற்க்டவுள் ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியானவர் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் நீக்குவதற்காக யாழ்ப்பாணம் வண்ணையம்பதியிலே வேங்கடேச வரதராஜப் பெருமாள் எனும் நாமத்துடன் எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார்.

அத்தகைய அருள் நிறைந்த அற்புதத் தெய்வமான ஸ்ரீ வேங்கடேசனுக்கு இன்று கொடியேற்றம். கேட்டதெல்லாம் கொடுக்கின்ற கேசவப் பெருமாளின் இந்த ஆண்டுக்கான வருடாந்த மஹோற்சவமானது இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலஞ் செய்கின்ற ஸ்ரீ மகாவிஷ்ணு கோயில் கொண்டு எழுந்தருளி பக்தரட்சகனாக அருள் பாலிக்கும் ஈழத்துத் திருப்பதி என்று அழைக்கப்படுகின்ற வண்ணை பெருமாள் கோயிலின் மஹோற்சவம் இன்று முதல் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு வெகு விமரிசையாக நடைபெற இருக்கின்றது.

யாழ்ப்பாண நகர மத்தியிலே வானளாவ உயர்ந்த இராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இந்த அருள்மிகு அற்புத ஆலயம் மிகவும் தொன்மை வாய்ந்த் பழம்பெரும் வரலாற்றுச் சிறப்புடன் பிரசித்தி பெற்ற ஓர் அழகு மிளிரும் ஆலயமாகும். வைணவ சம்பிரதாய முறைப்படி வேதாகம நெறிப்படி பூசை வழிபாடுகள் நடைபெறுகின்ற இந்தப் பெருமாள் கோயில் பண்டாரவளைச் செட்டிப் பிள்ளைகள் என்று அழைக்கப் பெறுகின்ற பத்மசாலிச் செட்டிமார் பரம்பரையினரால் பரிபாலனஞ் செய்யப்பட்டு வருகின்றது. ஸ்ரீ வேங்கடேசன் மீது அளவுகடந்த பக்திமிக்க ஆதீன மகா சபையினர் ஆறுகாலப் பூசையுடன் ஒவ்வோர் ஏகாதசித் திதிப் பெருநாளில் மிக்க விமரிசையாக விழா நடத்தும் பெருமையுடைய இவ்வாலய மஹோற்சவம் காண்பதற்கு யாழ். குடாநாட்டின் பல பாகங்களிலிருந்தும் அடியார் பெருமக்கள் இங்கு வந்து குழுமுவரர்கள்.

ஒவ்வொரு நாளும் விதவிதமான அலங்காரத்துடன் அருட்காட்சி தந்து திருவீதி வலம் வந்து சேவை சாதிக்கும் பெருமாள் திருவிழாக்கள் அற்புதப் பொலிவுடன் கூடிய ஆனந்த விழாக்களாகும். முதலாம் நாளாகிய இன்று சூரிய பரிதிச் சேவை எனப்படும் சூரிய ஒளிப் பிரகாசத்துடன் ஸ்ரீ தேவி பூமி தேவி சமேதராக அருட் பவனி வரும் அழகு வர்ணிக்க முடியாத பேரருட் காட்சியாகும்.

இரண்டாம் நாள் புரட்டாதி முதற் சனி வாரத்தில் காலையில் கருட சேவையும் மாலையில் சேஷசயன சேவையும் இடம்பெறும். தொடர்ந்து மூன்றாம் நாளில் காலையும் மாலையும் கருட சேவை. நான்காம் நாள் காலை கருட சேவையும் மாலையில் அனுமான் சேவையும் ஐந்தாம் நாள் காலை கருட சேவையும் மாலை பூந்தண்டிகை. ஆறாம் நாள் காலை கருட சேவை, மாலை கஜேந்திர யானை சேவை, ஏழாம் நாளன்று காலை கருட சேவை, மாலை வெண்ணெய் தாழிச் சேவை.

எட்டாம் நாள் காலை கருட சேவை, மாலையில் அஸ்வாருட குதிரைச் சேவை, ஒன்பதாம் நாள் இரதோற்சவம். அழகான சித்திரத் தேரிலே பெருமாள் அருட்பவனி வருகின்ற அற்புதமான தேர்த்திருவிழா காண்பதற்கு பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். ஒன்பதாம் நாளான அன்று ஆலயத்தின் சுற்றாடல் புனிதம் பேணப்படும். தேர்த்திருவிழாவன்று அடியார் பெருமக்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஊர் கூடித் தேரிழுக்கும் அற்புதமான அழகுத் திருக்காட்சி. இந்த ஆலயத்திலன்றி வேறெங்குமே காண முடியாத அருட்காட்சியாகும். காத்தற் கடவுளாகிய ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தியானவர் வேங்கடேச வரதராஜப் பெருமாளாக ஸ்ரீதேவி பூமிதேவி சகிதம் தேரிலே ஆரோகணித்துத் திருவீதி வலம் வரும் போது கோவிந்தா! கோவிந்தா!! என்று அடியார்கள் கோஷம் எழுப்பிய வண்ணம் தேர் வடம் பிடித்து இழுத்து வருகின்ற ஆனந்த கோலாகலம் சொல்லில் வர்ணிக்க முடியாத பக்தி பூர்வமான ஒன்றாகும்.

இந்தக் கோயிலில் ஒரு தனிவிசேஷம் என்னவென்றால் ஒவ்வொரு நாளும் பெருமாள் திருவீதி வலம் வருகின்ற அலங்காரப் பவனியிலே நான்கு வீதிகளிலும் பூரண கும்பம் வைத்து குத்து விளக்கேற்றி ராஜோபசாரத்துடன் விதம் விதமான பலகாரங்கள் நிவேதனம் செய்யப்படும். லட்டு, ஜிலேபி, முறுக்கு, வடை, பகோடா, அதிரசம், அல்வா, தொதல் என்று அழகழாகச் செய்து பெருமாளுக்குப் படைப்பார்கள். அவற்றை வாங்குவதற்கு அடியார்கள் நான்முந்தி நீ முந்தி என்று முண்டியடித்து நிற்பார்கள்.

அதுவும் தேர்த்திருவிழா நாளில் மிகவும் விஷேசமான மண்டகப்படி வரவேற்பு உபசாரம் கோலாகலமாக இடம்பெறுவதை இங்கு காணக் கூடியதாக இருக்கும். தீர்த்த நாள் அதாவது பத்தாம் திருவிழா மிகச் சிறப்பானமுறையிலே பெருமாளுக்கு அலங்காரமாகிக் கருடசேவை இடம்பெறும்.

அதற்கு அடுத்த நாள் பதினொராம் திருவிழாவாக திருக்கல்யாணம் வெகு கோலாகலமாக நடைபெறும். ஸ்ரீதேவியும் பூமிதேவியும் அலங்கார பூஜிதைகளாக மணக் கோலம் தாங்கி பூரண அலங்காரத்தோடு எழுந்தருளி வந்து ஸ்ரீ வேங்கடேசனைத் திருமணம் செய்கின்ற அற்புத நிகழ்வைக் காண்பதற்கு இரண்டு கண்கள் போதாது என்றுதான் சொல்ல வேண்டும். அத்தனை அழகு காட்டும் அந்தத் திருமணக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகத் திருமாலும் திருமகளும் பூமிதேவியும் அழகான பூந்தண்டிகையிலே அலங்காரப் பவனி வருகின்ற அதியற்புதக் காட்சியை அன்று காணலாம்.

இவ்வாறு வண்ணை வேங்கடேசனுக்கு நடைபெறுகின்ற இத்தனை உற்சவங்களையும் கண்ணாரக் கண்டு களித்து எம்பெருமான் கிருஷ்ணபரமாத்மாவின் பேரருட் கருணைக்குப் பாத்திரமாகி அருள் பெற்றுய்யுமாறு வேங்கடவன் அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். பக்த ரட்சகனாக விளங்கும் ஸ்ரீ பரந்தாமனுடைய திவ்ய அருட் கருணை அனைவருக்கும் கிடைக்க அவனருளையே நாடி நிற்போமாக.

தெய்வத் தமிழ்ச்சுடர் இராசையா ஸ்ரீதரன்

ஓம் ஸ்ரீராமஜெயம்

யாழ்ப்பாணம் வண்ணையம்பதி ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள்
தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்- 2017

முதலாம் திருவிழா கொடியேற்றம் 22.09.2017 வெள்ளி முற்பகல் 10 மணி

இரண்டாம் திருவிழா - முதலாம் சனிவாரம்- 23.09.2017 காலை கருடசேவை, மாலை சேஷ சயன சேவை

மூன்றாம் திருவிழா- ஞாயிறு 24.09.2017 காலை கருட சேவை, மாலை கருட சேவை

நான்காம் திருவிழா- திங்கள் 25.09.2017 காலை கருட சேவை, மாலை அனுமன் சேவை

ஐந்தாம் திருவிழா- செவ்வாய் 26.09.2017 காலை கருட சேவை, மாலை பூந்தண்டிகை

ஆறாம் திருவிழா- புதன் 27.09.2017 காலை கருட சேவை, மாலை கஜேந்திர சேவை

ஏழாம் திருவிழா- வியாழன் 28.09.2017 காலை கருடசேவை, மாலை வெண்ணெய் தாழிச்சேவை

எட்டாம் திருவிழா- வெள்ளி 29.09.2017 காலை கருடசேவை, மாலை அஸ்வாருட சேவை

ஒன்பதாம் நாள் தேர்த் திருவிழா- சனி 30.09.2017 காலை 7 மணிக்கு வசந்த மண்டப பூசை, 9 மணிக்கு தேரில் எழுந்தருளல்

பகல் 11 மணிக்கு தேரிலிருந்து அவரோகணம்

பகல் 12.30 மணிக்கு மகா ஆசீர்வாதம்,மாலை கருடசேவை

மாலை 3.00 மணிக்கு விஜயதசமி- மானம்பூ உற்சவம்

மாலை 6.00 மணிக்கு இரண்டாம் சனிவார உற்சவம்

10 ஆம் நாள் தீர்த்தோற்சவம் (01.10.2017 ஞாயிறு) காலை 9.00 மணிக்கு உற்சவம் கருட சேவை

பகல் 11 மணிக்கு திருவோண தீப பூஜை

பகல் 12.30 மணிக்கு மகாயாக கும்பாபிஷேகம்

மாலை 7.00 மணிக்கு கொடியிறக்கம்- சந்திரப்பிறை சேவை

பதினொராம் நாள் பூங்காவனம் காலை காசி யாத்திரை, மாலை 5 மணிக்கு திருக்கல்யாணம் (02.10.21017 திங்கட்கிழமை)

உற்சவங்களில் அடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாய் வருகை தந்து வழிபாடாற்றி ஸ்ரீ வேங்கடவன் திருவருளால் லக்சுமி விலாஸ சம்பன்னராக வாழ்வீர்களாக

ஆதீன மகா சபையினர்.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 021 222 2476 (சி-9700)

# மாகாண சபையின் அதிகாரத்தில் மத்திய அரசின் தலையீட்டை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை

## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள் முறைமையை ஆரம்பத்திலிருந்தே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் ஆதரித்தும் வரவேற்றும் வருகின்றோம்.

அதேவேளை மாகாண சபையின் அதிகாரத்தில் மத்திய அரசாங்கம் தலையீடு செய்வதை நாம் ஏற்றுக் கொள்ளவில்லை எனநாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 1988 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்ட மூல விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் ,மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இலங்கை - இந்திய ஒப்பந்தத்துடன் எமது போராட்ட வழிமுறையை கைவிட்டு, தேசிய நீரோட்டத்திற்கு நாங்கள் பிரவேசித்தோம். இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமையை நம்பியே நாங்கள் இந்த தீர்மானத்தை எடுத்திருந்தோம். ஆதலால்தான் இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்பது எமது மக்களுக்கு ஒரு பொன்னான வாய்ப்பு என நான் அடிக்கடி கூறுவதுண்டு.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு தீர்வொன்றைக் காண்பதற்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் ஆரம்பிக்க வேண்டும் என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

நாம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் ஆரம்பிக்க முடியும் என்று கூறியபோது, சிலர் எம்மை பரிகாசம் செய்தார்கள். தனிநாடு கிடைத்துவிடும் என்றும், அதற்காக எத்தனைபேரும் பலியாகலாம் என்றும் உசுப்பேற்றினார்கள். வன்முறையையும், கொலைகளையும் நியாயப்படுத்தி தூண்டிவிட்டார்கள். ஈ.பி.டி.பியின் தீர்வுத் திட்டமே 13ஆவது திருத்தமும், மாகாண சபை முறைமையும் என்றும், அதைத் தும்புத் தடியாலும் தொட்டும் பார்க்க மாட்டோம் என்றும் எம்மைத் துரோகிகள் என்றும் தூற்றினார்கள். எம்மீது பழிகளையும், அவதூறுகளையும் பரப்பிவிட்டார்கள்.

இன்று நாம் கூறிவந்ததே நிதர்சனமாகி இருக்கின்றது. எம்மைத் தூற்றியவர்கள், நாம் கூறிய வழிமுறைக்கு வந்து நிற்கின்றார்கள். அதன் நடைமுறைச்சாத்தியத்தைப் பற்றி பேசுவதற்கு முற்படுகின்றார்கள். நாம் அன்று கூறியதை இவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பார்களேயானால், எமது மக்கள் இத்தனை உயிர் இழப்புக்களையும், உடைமை இழப்புக்களையும், இடப்பெயர்வுகளையும் சந்தித்திருக்க மாட்டார்கள். காலம் கடந்தேனும் இவர்களுக்கு நாம் கூறிய நிதர்சனம் புரிந்து ஞானம் பிறந்திருக்கின்றதே என்று வரவேற்கின்றேன்.

அந்த வகையில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமையப்பெற்ற மாகாணசபை முறைமையை பாதுகாக்க வேண்டும், அதை சக்தியுள்ள நிர்வாக முறையாக செயற்படுத்த வேண்டும் என்பதில் நாம் அக்கறையுடன் இருக்கின்றோம். எனவே மாகாணசபை முறைமையில் மத்திய அரசின் அநாவசியத் தலையீடு செய்வதையோ, அதிகாரங்களில் கைவைப்பதையோ நாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

அதேபோல் பதவிக்காலம் நிறைவடையும் மாகாணசபைகளுக்கான தேர்தலையும் உரிய காலத்தில் நடத்தி, மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் வழிநடத்தாத அதிகார மையங்கள் மக்களுக்கு பயனுள்ள சேவையை வழங்க முடியாது.

துரதிர்ஷ்டவசமாக மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி செய்கின்றபோதும், சில ஆட்சி மையங்கள் மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைவாக திறம்படச் செயலாற்றாமல், அர்த்தமற்ற தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டும், பதவிச் சண்டையில் காலத்தை வீணடித்துக்கொண்டும் இருக்கின்றன என்பதையும் நாம் பார்க்கின்றோம். அவ்வாறான தவறை திருத்துவதற்கும் கிடைக்கப் பெறும் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள மக்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும்.

மாகாணசபைகள் திருத்தச் சட்ட மூலத்தில் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான பரிந்துரை செய்யப்பட்டிருப்பதை நாம் வரவேற்கின்றோம். 30 சதவீத பெண்களின் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்ற சட்ட ஏற்பாடு அமையப்பெறுவது வரவேற்புக்குரியதாகும். எம்மைப் பொறுத்தவரை அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் 50 வீதமாக இருக்க வேண்டும் என்பதேயாகும்.

மாகாணசபைகளுக்கான அதிகாரங்கள் பாதுகாக்கப்படுவதற்கும், மத்திய அரசாங்கத்துடன், மாகாண சபைகள் எவ்வாறு தேவையான அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது என்பதைக் கையாளவும், மேல்சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் அரசியல் தீர்வுக்கான எமது பரிந்துரையில் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.



அவ்வாறு அமையப்பெறும் மேல் சபையில் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் 50க்கு 50ஆக இருப்பதும் அவசியமாகும். இல்லாவிட்டால், நாடாளுமன்றத்தில் இருப்பதைப்போல், மேல்சபையிலும் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் பலமான பங்களிப்பைச் செய்யமுடியாது போகும் என்பதையும் நாம் குறிப்பிட்டிருக்கின்றோம்.

மாகாணசபை முறைமையானது வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுமாக இருந்தால், அதைக் கட்டங் கட்டமாக அரசியல் தீர்வு நோக்கி நகர்த்த முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அதை வரவேற்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன.

13ஆவது திருத்தச் சட்டம் ஏற்கனவே எமது நாட்டின் சட்ட திருத்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. பெரும்பான்மைச் சிங்கள மக்கள் அதை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆகையால் அதன் மீது அவர்களுக்கு தெளிவும், நம்பிக்கையும் இருக்கின்றது. முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு சர்வஜன வாக்கெடுப்புக்கோ, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியமோ, தேவையோ இல்லை என்பதாகும்.

எனவே மாகாணசபைகள் தொடர்பான திருத்த வரைபில், தேர்தல் நடத்தும் முறைமை, அதில் பெண்களுக்கு 30 வீதப் பிரதிநிதித்துவம், என்பவற்றோடு, உள்ளூராட்சி மன்றங்களை மாகாணசபைகள் கட்டுப்படுத்தும் திட்டத்தையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன் என்று தனது உரையில் தெரிவித்துள்ளார். (இ)

# வெளிமாவட்ட மீனவர்களால் மீன்பிடித்தொழிலை கைவிடும் நிலையில் முல்லை. மீனவர்கள்

## வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சருடனான சந்திப்பில் சுட்டிக்காட்டு

(பனிக்கன்குளம்)

வெளிமாவட்ட மீனவர்களால் தமது வாழ்வாதாரத் தொழிலான மீன்பிடித் தொழிலைக் கைவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடக்குமாகாண மீன்பிடி அமைச்சர் நேற்று முன்தினம் முல்லைத் தீவு மாவட்ட மீனவர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே போரினால் பேரழிவை சந்தித்த தமக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமை தொடர்பில் மீனவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

வடக்கு மாகாண சபையின் மீன்பிடி அமைச்சர் கந்தையா சிவநேசன், நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள மீனவ சங்க பிரதிநிதிகளுடன் முக்கிய கலந்துரையாடலொன்றை நடத்தினார்.

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் குறைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அறிந்துகொள்ளும் நோக்கிலேயே இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் அமைச்சருடன் அமைச்சின் செயலாளர், கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர்கள் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

எனினும் மீனவர்களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. இதற்கு மீனவர்கள் மத்தியில் நிலவும் விரக்தியே காரணம் என முல்லைத்தீவு மாவட்ட மீனவ சமாசத் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

போரினாலும் பேரழிவைச் சந்தித்த முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களான தமது மீன்வளம் வெளிமாவட்ட மீனவர்களால் திட்டமிட்டு சூறையாடப்படுவதாகவும் மீனவர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியிருந்தனர்.

வெளிமாவட்டங்களிலிருந்து வரும் மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்தாலும் அவற்றை அதிகாரிகளோ அல்லது கடற்படையினர் உட்பட அரச படையினரோ தடுப்பதில்லை என்று குற்றம்சாட்டும் முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள், அதற்கு மத்திய அரசில் இருக்கும் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதே காரணம் என்றும் விசனம் வெளியிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது முல்லைத்தீவு மாவட்ட தமிழ் மீனவர்கள் தமது தொழிலை வளர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் சிவநேசன் கோரிக்கை விடுத்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட தமக்கு ஆழ்கடலில் சென்று மீன்பிடிப்பதற்கான படகுகளை கொள்வனவு செய்வதற்கு வசதி இல்லை என்று தெரிவித்த முல்லைத்தீவு மீனவர்கள், படகுகளைக் கொள்வனவு செய்ய உதவ வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தகாலத்திலும் அனைத்து வசதிகளுடனும் இருந்த சம்மாட்டிகள் இறுதிக்கட்ட யுத்தத்தில் அனைத்தையும் இழந்து வாங்கிய கடன்களைக்கூட திருப்பிச் செலுத்த முடியாதிருப்பதாக சுட்டிக் காட்டிய சம்மாட்டியொருவர், போரினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (2-281)

# இலங்கையின் உள் விவகாரங்களில் அல்ஹுசைன் நேரடித் தலையீடு

## தினேஷ் எம்.பி.குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் செயிட் ராட் அல் ஹுசைன், இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் விடுக்க முயற்சித்திருப்பதாக, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் எம்.பியான, தினேஷ் குணவர்தன குற்றம் சாட்டினார்.


நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 36 ஆவது அமர்வின் நிமித்தம், கடந்த 11 ஆம் திகதி உயர்ஸ்தானிகர் செயிட் ராட் அல் ஹுசைன், ஆற்றிய ஆரம்ப உரை, இலங்கையின் உள் விவகாரத்தில் நேரடியான தலையீடாக அமைந்திருந்தது" என்றும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# ஐ.தே.க. எம்.பிக்கள் இருவர் விரைவில் இராஜினாமா

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் வெகு விரைவில் எம்.பி .பதவியை இராஜினாமா செய்யவுள்ளனர்.



இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷான் வித்தானகே சப்ரகமுவ மாகாண சபை முதலமைச்சராகவும், பொலனறுவை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாலக்க கொலன்னே வடமத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளராகவும் களமிறங்கவுள்ளனர்.

இந்த தகவலை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெளியிட்டார். (இ-7)

# இந்தியர்கள் விடுதலை

விசா மற்றும் கடவுச்சீட்டுக்களின்றி கைதுசெய்யப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த நால்வரின் விசா மற்றும் கடவுச்சீட்டு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து அவர்களைபண்டாரவளைப் பொலிஸார் நேற்று முன்தினம் மாலை விடு தலை செய்தனர்.

பண்டாரவளைப்பகுதி ஆலயமொன்றில், சிற்ப நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த குறித்த நால்வரும் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்ட நிலையில், கடந்த 19 ஆம் திகதிகைது செய்யப்பட்டிருந்தனர்.

இது தொடர்பாக ஆலய பரிபாலன சபையினர் பொலிஸ் நிலையத்திற்கு சென்று, கைது செய்யப்பட்ட நால்வரின் விசா மற்றும் கடவுச் சீட்டுக்களை, பொலிஸாரிடம் காண்பித்ததும், அவர்கள் அதனை பரிசீலனை செய்தபின்னர், கைது செய்யப்பட்ட நால்வரையும், ஆலய பரிபாலன சபையினருடன் செல்ல அனுமதித்தனர். (இ-7)

# சிறுவர் விளையாட்டுக்கள்

யாழ்.கொக்குவில் பொதுநூலக சிறுவர் பகுதியில் தரம்-8ற்கு உட்பட்ட மாணவர்களுக்கான சிறுவர் உள்ளகவிளையாட்டுக்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.15 இற்கு கொக்குவில் பொது நூலகத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் அனைத்துச் சிறுவர்களையும் கலந்து கொள்ளுமாறு கொக்குவில் பொது நூலக நூலகர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-10)

# இலங்கை-பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தை



இலங்கை- பாகிஸ்தான் கடற்படைகளுக்கு இடையிலான அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள் இலங்கை கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இலங்கை கடற்படையின் நடவடிக்கை பணிப்பாளர் றியர் அட்மிரல் பியால் டி சில்வா தலைமையிலான 10 கடற்படை அதிகாரிகள் இலங்கைத் தரப்பில் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றனர்.

கொமடோர் மசூத் குர்ஷித் தலைமையிலான 5 கடற்படை அதிகாரிகள் பாகிஸ்தான் தரப்பில் இடம்பெற்றிருந்தனர். கள நடவடிக்கை ஒத்துழைப்பு, பயிற்சி, இராணுவ பரிமாற்றங்கள், பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளில் கடற்படைகளுக்கிடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்தப் பேச்சுக்களில் கலந்துரையாடப்பட்டது.

இதுபோன்ற கலந்துரையாடலை ஆண்டுதோறும் நடத்தவும், அடுத்த ஆண்டு பாகிஸ்தானில் பேச்சுக்களை நடத்தவும் இந்தச் சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டது.

இலங்கை கடற்படை இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இது போன்ற கலந்துரையாடல்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கீதாவின் மேன்முறையீட்டை விசாரிக்க ஐவர் அடங்கிய நீதிபதிகள் குழு தெரிவு

(கொழும்பு)

காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவிற்கு இரட்டை பிரஜாவுரிமை இருப்பதன் காரணமாக அவருக்கு பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட முடியாது என தெரிவிக்கப்பட்டிருந்த தீர்ப்பு தொடர்பில் மேன்முறையீடு செய்யப்பட்டிருந்த வழக்கை விசாரிப்பதற்கு ஐவர் அடங்கிய



நீதிபதிகள் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நீதியரசர் பிரியஸாத் டேப் மூலம் நியமிக்கப்பட்டுள்ள குறித்த குழுவில் சிசிர டி ஆப்ரூ, அனில் குணரத்ன, புவனேக அலுவிகாரே, பிரியண்ண ஜயவர்தன மற்றும் நளின் பெரேரா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (இ-7)

# வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் கிராமியப் பண்பாடும் மேம்பாடும் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் இயங்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் ''கிராமியப் பண்பாடும் மேம்பாடும்" எனும் தொனிப் பொருளிலான ஆய்வரங்கு இன்றும் நாளையும் காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

முதலாம் நாள் நிகழ்வு கல்வயல் வே.குமாரசுவாமி அரங்கில் யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெறும். "கிராமியப் பண்பாடும் மேம்பாடும்'' ''மொழியும் இலக்கியமும்'' எனும் தொனிப்பொருளிலான ஆய்வரங்கத்தில் "பண்பாட்டு மொழி வழக்கும் இன்றைய நிலையும் சமுதாய மொழியியல் ஆய்வு '' எனும் தலைப்பில் செல்வி கவிதா சதாசிவம், "சிறுபஞ்சமூலத்தில்பெண்கள் தொடர்பான குறிப்புக்கள்" எனும்தலைப்பில்செல்வி க.துசாந்தினி (யாழ்.பல்கலைக்கழகம் தமிழ்த்துறை), "வடமராட்சியின் பண்பாட்டை வெளிப்படுத்தும் சிறுகதைகள் '' எனும் தலைப்பில் கரவெட்டி பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் தர்மராஜா அஜந்தகுமார் ஆகியோர் பங்கேற்பர்.

"வரலாறும் மரபும்" எனும் தொனிப்பொருளின் கீழ் வட ''இலங்கையில் நாக மனிதர்கள் ஒரு சுருக்கமான அறிமுகம் '' எனும் தலைப்பில் களனிப் பல்கலைக்கழக மொழியியற்றுறை விரிவுரையாளர் சிவசோதி கேசவன், ''கிளிநொச்சி மாவட்டத்தில் போருக்குப் பின்னரான பண்பாட்டு வளர்ச்சியில் கிறிஸ்தவ தேவாலயங்களின் பங்களிப்பு ஓர் ஆய்வு '' எனும் தலைப்பில் பளை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி அ.அன்பரசி, ''இந்துக்களின் ஆன்மீக, சமூக மேம்பாட்டில் ஆகம கிராமிய மரபுகளின் பங்களிப்பு '' எனும் தலைப்பில் செ. கமலநாதன் ஆகியோர் பங்கேற்பர்.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) அரங்கில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள்துணை வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் இடம்பெறும். ''கிராமியப் பண்பாடும் மேம்பாடும் " ''கிராமப்புற கல்வி மேம்பாடு '' எனும் தொனிப்பொருளின் கீழ் "கிராமியப் பண்பாட்டைப் பேணுவதில் கல்வித் துறையின் பங்களிப்பு '' எனும் தலைப்பில் நெல்லியடி மத்திய கல்லூரி ஆசிரியை செல்வி நாராயணிதுங்கராசா, "மாணவர்களிடையே இறைவழிபாட்டுப் பழக்கத்தை மேம்பாடடையச் செய்வதில் பாடசாலை முகாமைத்துவம் எதிர்கொள்ளும் சவால்கள்" எனும் தலைப்பில் வரதராஜன் பாலமுரளி, திருமதி ஜெயலக்ஸ்மி இராசநாயகம் "பாடசாலையில் மாணவர் வரவு குறைவாக இருத்தல்– கிராமிய ரீதியான பார்வை '' எனும் தலைப்பில் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் மாலினி முரளிதரன், ''கிராமியக் கலைகளும் அவற்றின் இன்றைய நிலையும் '' எனும் தலைப்பில் சந்தான கோபால் மதிராஜ், ''கிராமியப் பண்பாட்டு மேம்படுத்தலில் பாரம்பரிய விளையாட்டுக்களின் வகிபாகம் " எனும் தலைப்பில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி தாட்சாயினி செல்வக்குமார், ''யாழ்ப்பாணக் கிராமங்களின் தொடர்பியல் பண்பாடு '' எனும் தலைப்பில் ஸ்ரீதயாளன், ஸ்ரீபிருந்திரன் ஆகியோர் பங்கேற்பர். (இ-3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1197

Search for people, places and things | Nagendram Home

குமரன்




கருணா




பாமினி





காண்டீபன்




குமாரி




மகிந்தன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## ஆரவ் கிளின் சேவுக்கு காரணம் ஓவியாவா?



பிக்போஸ் நிகழ்ச்சியில் பலவிதமான உணர்வுகள் அரங்கேறியுள்ளன. பாசம், கோபம், துரோகம், சண்டை, மருத்துவ முத்தம், கட்டிப்பிடி வைத்தியமென பல விடயங்களுக்கு மத்தியில் ஒரு காதலும் அரங்கேறியது. ஆனால் இது ஒருதலை காதலாக மாறி ஓவியா மனம் நொந்து வெளியேறினார்.

இவர் ஆரவ்விடம் பேசும்போது, தனக்கு மீசை, தாடி வைத்த ஆண்களைத் தான் பிடிக்கும் என்று கூறினார். இவர் விரைவில் 100வது நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் ஆரவ்வை மீசை, தாடியை க்ளின் ஷேவ் செய்ய சொல்லிவிட்டார் பிக்போஸ். இதில் ஏதும் பின்னணி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## பிக்போஸ் வீட்டில் பேய்கள் குப்பையால் வெடித்தது சண்டை




பிக்போஸ் வீட்டில் உள்ளவர்களுக்கு தேவதை-பேய் டாஸ்க் கொடுக்கப்பட்டது. வீட்டில் போட்டியாளர்கள் இரண்டு அணிகளாக பிரிந்து (3 பேர் பேய், 3 பேர் தேவதை) விளையாட வேண்டும் என கூறப்பட்டது. ஆரவ், பிந்து, ஹரிஷ் ஆகியோர் பேயாக மாறி மற்ற மூவருக்கும் டார்ச்சர் கொடுக்க ஆரம்பித்தனர்.

வீட்டை சுஜா சுத்தம் செய்துகொண்டிருந்த போது ஆரவ் மற்றும் பிந்து சண்டை போடுவது போல நடித்து வீட்டில் இருந்த குப்பை தொட்டிகளில் இருந்த குப்பையை வீடு முழுவதும் கொட்டினார்.

## சுஜாவின் நடிப்பினை வெளியிட்ட பிரபல ரிவி




பிக்போஸ் நிகழ்ச்சி இறுதி கட்டத்தினை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதால் மக்களின் ஆர்வம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

இந்நிலையில் சுஜா அடுத்த ஜூலியாக அவதாரமெடுத்து வருகிறார் என நெட்டிசன்கள் கூறி வருகின்றனர்.

ஆம் தனது காலில் அடிபடாமலே அடிபட்டதாகவும், ஹரிஷ் மைக்கை தானே அறுத்துவிட்டு பழியை சிநேகன் மேல் போட்டதும் மக்கள் நன்கு அவதானித்துள்ளனர்.

ஆனால் நிகழ்வில் வெளிவராத காணொளி ஒன்று. அதில் கணேஷ் உடன் சேர்ந்து நடனம் கற்றுக்கொள்கிறார் சுஜா

## ஐயையோ இது ஆரவ் கிடையாதே புலம்பும் பெண் ரசிகர்கள்




## வீடு சென்ற வையாபுரி என்ன செய்தார் தெரியுமா?



கடந்த வாரம் பிக்போஸ் நிகழ்ச்சியிலிருந்து எலிமினேட் ஆன வையாபுரி முதன் முதலாக வீட்டிற்கு சென்று செய்தது என்ன என்பதை அவரது மனைவி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வையாபுரியின் மனைவி ஆனந்தி கூறுகையில், பிக்போஸ் நிகழ்ச்சிக்கு முன் பிக்போஸ் நிகழ்ச்சிக்கு பின் என்று கூறும் அளவிற்கு எங்களது வாழ்க்கை பெரிய அளவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.


சனிக்கிழமை இரவு எந்த முன் அறிவிப்பும் இன்றி திடீரென வந்து நின்ற அவரைப் பார்த்து ரொம்பவே அழுதுவிட்டேன். அதற்கு அவர் எதற்கு அழுகிற எல்லாம் நல்ல படியா முடிந்தது.. புது வையாபுரியா வந்துருக்கேன்ல அப்படின்னு சமாதானம் செய்தார்.

ஆரத்தி எடுத்து உள்ளே அழைத்துச் சென்றதும் அதிகமாக உணர்ச்சிவசப்பட்ட ஆரம்பித்துவிட்டார். பிக்போஸ் வீட்டை விட்டு வந்த வருத்தத்தில் அன்று இரவு முழுவதும் பேசிக் கொண்டிருந்தார்.

இனிமேல் உங்கள் மேல் அன்பாக நடந்து கொள்வேன் என்ற அவர், மகளை அழைத்துக் கொண்டு வெளியே கூட சென்று வந்தார்.

பிக்போஸ் வீட்டில் விதவிதமான சாப்பாடு சமைத்ததாக கூறினார். எங்களுக்கும் சமைத்து தருவதாகவும் கேட்டார். நான் தான் வேணாம் என்று கூறிவிட்டேன்.

தற்போது மெலிந்து காணப்படுவதால் அவருக்கு பிடித்த சாப்பாடு சமைத்து போட வேண்டும் என்றும் நவராத்திரி பண்டிகையை அவருடன் மிகவும் மகிழ்ச்சியாக கொண்டாடுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.



# யாழ்.மாநகர சபை வட்டாரங்களும் அங்கத்தவர்கள் எண்ணிக்கையும் நேற்றும் இன்றும்


பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் பல கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் பெற்றது. யாழ்ப்பாண நகர மக்களுக்கு மாத்திரமல்ல தமிழ்மக்களுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் மிகவும் கரிசனையானது. ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் மாநகர சபை நிர்வாகத்தை கைப்பற்றிவிட வேண்டுமென்ற எண்ணத்தில் கட்சிகள் இருக்கின்றன.

இலங்கைத் தமிழ் மக்களின் உயர்வான பொருட்கள், சேவைகள் வழங்கும் நகரமாக இருப்பதால் இந்நகர் துடிப்பாகவும் அழகாகவும் வளர்ச்சிப் பாதையில் செல்வதையும் மக்கள் விரும்புகின்றனர். யாழ்ப்பாண நகர், கொழும்பு, கண்டி, அநுராதபுரம் போல் வளர்ச்சியடைந்தால் வடமாகாண மக்களுக்கு மாத்திரமல்ல இலங்கை பூராகவும் உள்ள தமிழ் மக்களின் உயர் மட்ட பொருட்களை, சேவைகளை வழங்கும் நிலையமாகச் செயற்படுவதுடன் உயர்மட்ட வேலை வாய்ப்புக்களை வழங்கும் நகரமாக மாறும்.

இலங்கையில் 1865 கொழும்பு, கண்டி, காலி, ஆகிய நகர்கள் மாநகர சபை அந்தஸ்தைப் பெற்ற பொழுதும் யாழ்ப்பாண நகர் 1949 இல் தான் மாநகர சபை அந்தஸ்தைப் பெற்றது. இதற்கு முதல் நகர அபிவிருத்திச் சபையாக இருந்தது. மக்கள் இதை UDC என அழைத்தனர். இன்று வடக்கு மாகாணத்தில் இருக்கும் ஒரேயொரு மாநகர சபையாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய நகர்கள் மாநகரசபையாக இருப்பதுடன் திருகோணமலை நகரை மாநகர சபையாக தரமுயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையும் வலுப் பெற்றுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபைக்கான தேர்தல் இம்முறை வட்டார அடிப்படையிலும் விகிதாசார அடிப்படையிலும் அமைந்த கலப்புத் தேர்தலாக இடம் பெறும்.

வட்டார/ விகிதாசார பங்கீடு 60:40 என்ற வீதத்தில் இடம் பெறும். வரவிருக்கும் தேர்தலில் மாநகர சபைக்கு மொத்தமாக 45 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர். இவர்களுள் வட்டார அடிப்படையில் 27 பேரும் விகிதாசார அடிப்படையில் 18 பேரும் தெரிவு செய்யப்படுவர். கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் வட்டாரத் தேர்தலில் 10 வீத பெண் அபேட்சகர்கள் இடம்பெறுவதை உறுதி செய்யவேண்டும். யாழ்ப்பாண மாநகர சபை ஒவ்வொரு கட்சியின் வட்டார அபேட்சகர் பட்டியலில் குறைந்தது இரு வட்டாரங்களிலாவது பெண்கள் அபேட்சகர்களாக இருக்க வேண்டும். இந்நிபந்தனைகள் இடம் பெறாது இருப்பின் அபேட்சகர் நியமனப் பத்திரம் நிராகரிக்கப்படும்.

1981 இற்கு முன்பு யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல்கள் தனி வட்டார அடிப்படையில் இடம்பெற்றன. 1981-2010 இற்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இடம்பெற்ற தேர்தல்கள் முழுமையாக விகிதாசார/ விருப்பு வாக்கு அடிப்படையிலும் இடம்பெற்றன. இக்காலப் பகுதியில் குறிப்பிடத்தக்க காலம் உரிய நேரங்களில் தேர்தல் இடம்பெறாமல் மாநகர சபை நிர்வாகம் ஆணையாளர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இந்நகர் 1949 இல் 12 வட்டாரங்களைக் கொண்டும் பின்னர் 1950 களில் வட்டாரங்களின் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்து 1967 இல் வட்டாரங்களின் எண்ணிக்கை 23 ஆக மேலும் அதிகரித்து இன்று 27 வட்டாரங்களாக அதிகரித்துள்ளன. முன்னைய வட்டாரங்கள் சபையின் முழுப்பிரதிநிதித்துவமாக இருந்தது. இன்றைய 27 வட்டாரங்கள் மூலம் தெரிவு செய்யப்படுபவர் அங்கத்தவர் எண்ணிக்கையில் 60 வீதமாக இருக்கின்றது.

1981-2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கை 23 ஆகவே இருந்து வந்ததுடன் இவர்கள் யாவரும் விகிதாசார விருப்பு வாக்கடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

யாழ்ப்பாண மாநகரசபை 1949 இல் உருவாக்கப்பட்ட பின்னர் புதிய வட்டார அமைப்புடன் நான்கு வட்டார ஒழுங்கு உருவாக்கப்பட்டன. 1949 இல் இருந்த நகர வட்டார அமைப்பும் வட்டாரங்களின் குடித்தொகையும் பின்வருமாறு,

| வட்டாரத்தின் பெயர் | வட்டாரக் குடித்தொகை |
|---|---|
| கோட்டை | 3585 |
| கதிற்றல் | 8609 |
| புனித அந்தோனியார் | 3866 |
| கொழும்புத்துறை | 2678 |
| அரியாலை | 4523 |
| நல்லூரர் | 4659 |
| கோயில் | 5446 |
| வண்ணார்பண்ணை | 6905 |
| முஸ்லிம் | 6597 |
| பஜார் | 5011 |
| ஸ்ரேசன் | 7449 |
| சுண்டுக்குளி | 3570 |
| நகரம் | 42922 |

மாநகர சபையின் ஆரம்ப காலத்தில் 12 வட்டாரங்களே இருந்ததுடன் சபையிலும் 12 பேரே இருந்தனர்.

மாநகர சபை ஆக்கப்பட்ட பின்னர் நகரின் வட்டாரங்கள் மீள் நிர்ணயம் செய்யப்பட்ட துடன் வட்டாரங்களின் எண்ணிக்கை 12 ஆக இருந்து 15 ஆக அதிகரிக்கப்பட்டது. நகரின் மக்கள் தொகை 1953 இல் 77218 ஆக இருந்தது.

1953 இல் இரு ந்த வட்டாரங்களின் பெயரும் குடித்தொகையும் பின்வருமாறு,

| வட்டாரத்தின் பெயர் | குடித்தொகை | |
|---|---|---|
| | 1953 | 1963 |
| கோட்டை | 3816 | 3722 |
| புனித ஜேம்ஸ் | 6716 | 8292 |
| கதிற்றல் | 6877 | 8721 |
| கொய்யாத்தோட்டம் | 4347 | 5592 |
| கொழும்புத்துறை | 1989 | 2888 |
| அரியாலை | 5090 | 6234 |
| நாயன்மார்கட்டு | 3748 | 4619 |
| நல்லூரர் | 4154 | 5231 |
| கந்தர்மடம் | 5175 | 6830 |
| வண்ணார்பண்ணை | 7373 | 8897 |
| பழைய சோனகதெரு | 4864 | 5505 |
| புதிய சோனக தெரு | 4243 | 5476 |
| பஜார் | 6236 | 6596 |
| ஸ்ரேசன் | 8343 | 10854 |
| சுண்டுக்குளி | 4226 | 5213 |

1950களின் முற்பகுதியிலிருந்து 1960களின் பிற்பகுதிவரை மாநகர சபையில் 15 அங்கத்தவர்கள் இருந்தனர்.

1952 இல் இருந்து தமிழரசுக் கட்சி பாராளுமன்றத் தேர்தலில் பங்குகொண்டு வட கிழக்கு மாகாணங்களில் பல தொகுதிகளில் வெற்றி பெற்ற பொழுதும் யாழ்.நகரை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தொகுதியில் வெற்றி பெறவில்லை. 1952, 1956, 1965 இல் ஜி.ஜி. பொன்னம்பலத்திடனும் 1960 மார்ச், 1960 ஜூலை பாராளுமன்றத் தேர்தல்களில் அல்பிரட் துரையப்பாவிடமும் தோல்வி கண்டது. இச் சூழ்நிலையில் 1965 இல் செனற்றர் எம். திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சரான பொழுது யாழ்ப்பாண மாநகர சபையின் வட்டாரங்களை மீள் நிர்ணயம் செய்ய முன்னாள் நீதிபதி சி. எக்ஸ். மார்ட்டினை நியமித்தார். இவர் அன்றிருந்த வட்டார கட்டமைப்பில் கத்தோலிக்க சமூகமும் மீனவர் சமூகம் மற்றும் பின்தங்கிய சமூகங்கள் உரிய பங்கைப் பெறவில்லை என்று அவர்களின் பிரதிநிதித்துவத்தை உயர்த்தினார். இவரின் சிபாரிசில் நகரின் வட்டாரங்களின் எண்ணிக்கை 23 ஆக அதிகரித்தது.

வட்டாரங்களின் பெயரும் வட்டாரங்களின் 1971, 1981 ஆண்டுக் குடித்தொகையும் பின் வருமாறு,

| | 1971 | 1981 |
|---|---|---|
| கோட்டை | 5386 | 7590 |
| குருநகர் மேற்கு | 4901 | 5390 |
| குருநகர் கிழக்கு | 4403 | 4813 |
| கதிற்றல் | 4797 | 4639 |
| மத்தியூஸ் | 4933 | 6319 |
| கொய்யாத்தோட்டம் | 4463 | 4916 |
| பாசையூர் | 3186 | 3737 |
| கொழும்புத்துறை | 3164 | 4609 |
| அரியாலைமேற்கு | 4332 | 4871 |
| அரியாலை கிழக்கு | 3578 | 3820 |
| கலைமகள் | 2925 | 3261 |
| நல்லூரர் | 5524 | 6241 |
| சுண்டுக்குளி | 4875 | 4994 |
| ஸ்ரேசன் | 4950 | 4494 |
| கைலாயபிள்ளையார் | 5425 | 6125 |
| கந்தர்மடம் | 5237 | 5189 |
| ஆஸ்பத்திரி | 7467 | 7691 |
| பஜார் | 5407 | 5048 |
| புதிய பள்ளிவாசல் | 4899 | 4656 |
| நாவாந்துறை | 3796 | 5284 |
| பழைய பள்ளிவாசல் | 4636 | 5999 |
| வண்ணார்பண்ணை மேற்கு | 4881 | 5597 |
| வண்ணார்பண்ணை கிழக்கு | 4649 | 4829 |

1970 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பா ணத் தொகுதியில் ஜீ.ஜீ. பொன்னம்பலம், அல்பிரட் துரையப்பா, சி.எக்ஸ். மார்ட்டின் ஆகியோர் போட்டியிட்டனர். இவர்களுள் தமிழரசுக் கட்சியில் போட்டியிட்ட சி.எக்ஸ் மார்ட்டின் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் அல்பிரட் துரையப்பாவை தோற்கடித்தார். இவரது வெற்றிக்கு இவரது மாநகர சபை வட்டார நிர்ணயமே பெரும் பங்களித்தது. தமிழரசுக் கட்சியின் இரும்பு மனிதன் ஈ.எம். வி. நாகநாதன், சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளையால் பெற்றுக் கொடுக்காத வெற்றியை சி. எக்ஸ். மார்ட்டின் தமிழரசுக் கட்சிக்குப் பெற்றுக் கொடுத்தார். 1981 இல் விகிதா சார விருப்பு வாக்கு முறை அறிமுகப்படுத் திய பின்னர் மாநகர சபையின் அங்கத்தவர்கள் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை.

2012 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் வட்டார எல்லை நிர்ணய குழுவும் இதன் பின்னர் அமைக்கப்பட்ட உள்ளூராட்சி வட்டார எல்லை நிர்ணய மீள் ஆய்வுக்குழுவும் யாழ்ப்பாண மாநகர சபைக்கு வட்டார ரீதியில் தெரிவாகும் அங்கத்தவர் எண்ணிக்கை 27 ஆக தீர்மானித்தார்கள்.

(திங்கள் தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## புதிதாக வந்த நட்பும், உதவியும்

(19ஆம் திகதி தொடர்ச்சி...)

...வழக்கம்போல மாடுகள் ஒவ்வொரு இடமாக மேய ஆரம்பித்தன. ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்த நரி அந்த நாயின் கண்படாத தொலைவில் ஒரு மாடு மேய்ந்து கொண்டு வருவதை கவனித்து மெல்ல அருகில் வந்து நண்பா இந்த காய்ந்த புல்களைத்தான் தினமும் மேய்கிறாயா? என்று கேட்டது. கேட்டது யார் என நிமிர்ந்து பார்த்த மாடு, நரியிடம் என்ன செய்வது இந்த இடங்களில் புற்கள் காய்ந்து விட்டன.

தள்ளிப் போய் மேயலாம் என்றால் இந்த நாய் விடுவதில்லை. இப்பொழுது கூட உன்னிடம் பேசிக் கொண்டிருப்பதை பார்த்தால் பாய்ந்து வந்து விடும். அது இந்த இடத்தை விட்டு வேறு இடத்தில் மேய்ந்தால் ஆபத்து வரும் என்று சதா கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறது. என்ன செய்வது என்று அலுத்துக்கொண்டது.

நீ மட்டும் சரி என்று சொன்னால் இதைவிட அழகான பச்சைப்பசேல் என்ற புல்வெளியை காட்டுகிறேன் என்றது. ஐயையோ நாயார் என்னை விடமாட்டாரே என்று மாடு சொன்னது. அதைப்பற்றி கவலைப்படாதே. நாளை இதே போல் வா. வந்தவுடன் எல்லோரையும் போல மேய்ந்து கொண்டே இந்த இடத்துக்கு வா. உன்னை அங்கு அழைத்துப்போகிறேன். உனக்கு வேண்டியதை மேய்ந்துவிட்டு மாலைக்குள் இங்கு வந்து விடு என்றது. மாட்டுக்கு ஒரே மகிழ்ச்சி. நாளை பசும்புல் சாப்பிடப் போகிறேன் என்று நினைத்தது.

அன்று மாலையே நரி புலியிடம் போய் நீங்கள் அந்த குழியில் ஒளிந்து கொள்ளுங்கள். அந்தக் குழியினை இலை தழைகளால் மூடி விடுகிறேன். நாளை அந்த மாட்டை அழைத்து வருகிறேன். அது குழியில் விழுந்தவுடன் நீங்கள் அடித்து சாப்பிட்டு விட்டு மேலே வர இந்த மரக்கிளையை போடுகிறேன் அதில் ஏறி வந்து விடுங்கள்.

நான் இந்த மரக்கிளையில் இறங்கி உள்ளே சென்று மிச்சத்தை சாப்பிட்டுவிட்டு இதே மரக்கிளை வழியாக மேலே வந்து விடுகிறேன் என்று சொல்லியது.

புலியும் அந்த மரக்கிளை வழியாக குழியில் போய் படுத்துக்கொண்டது. நரி மரக்கிளையை வெளியே எடுத்து விட்டு முதலில் இருந்தது போல் இலை தழைகளால் மூடி விட்டது.

(தொடரும்...)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

09.2017 22

- 1692 - ஐக்கிய அமெரிக்காவில் சூனியக்காரர்களின் கடைசித் தொகுதியினர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1711 - டஸ்கரோரா பழங்குடிகள் வட கரோலைனாவில் பாம்லிக்கோ ஆற்றுப்படுகையில் குடியேற்றவாசிகளைத் தாக்கி 130 பேரைக் கொன்றனர்.
- 1784 - அலாஸ்காவின் கோடியாக் என்ற இடத்தில் ரஷ்யா தனது குடியேற்றத்தை ஆரம்பித்தது.
- 1877 - யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் பத்திரிகையின் ஆசிரியராக தமிழறிஞர் அருளப்ப முதலியார் நியமிக்கப்பட்டார்.
- 1888 - நஷனல் ஜியோகிரபிக் மகசின் (National Geographic Magazine) முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1893 - அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட தானுந்து முதன் முதலாகக் காட்சிப்படுத்தப்பட்டது.
- 1896 - பிரித்தானியாவின் அரச வம்சத்தில் அதிக காலம் ஆட்சியில் இருந்த பெருமையை விக்டோரியா மகாராணி பெற்றார்.
- 1908 - பல்கேரியா விடுதலையை அறிவித்தது.
- 1914 - ஜெர்மனியின் எம்டன் நாசகாரிக் கப்பல் இரவு 9:30 மணிக்கு சென்னைத் துறைமுகத்தையும் மற்றும் நகரப் பகுதிகளையும் குண்டுவீசித் தாக்கியது. மொத்தம் 130 குண்டுகளை அது வீசியது.
- 1934 - வேல்சில் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 266 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941 - யூதர்களின் புத்தாண்டில் உக்ரேனின் வின்னிட்சியா நகரில் 6,000 யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் முதல் நாட்களில் கொல்லப்பட்ட 24,000 யூதர்களில் உயிர் தப்பியோராவர்.
- 1955 - ஐக்கிய இராச்சியத்தில் ஐடிவி தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1960 - மாலிக் கூட்டமைப்பில் இருந்து செனெகல் விலகியதை அடுத்து சூடானியக் குடியரசு மாலி எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1965 - இந்திய-பாகிஸ்தான் போர், 1965: இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் காஷ்மீர் தொடர்பாக இடம்பெற்ற போர் ஐ.நாவின் போர் நிறுத்த அழைப்பை ஏற்று முடிவுக்கு வந்தது.
- 1970 - மலேசியாவின் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தனது பதவியை விட்டு விலகினார்.
- 1975 - ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி ஜெரால்ட் ஃபோர்ட் கொலை முயற்சி ஒன்றில் இருந்து தப்பினார்.
- 1980 - ஈரான் - ஈராக் போர்: ஈராக் ஈரானை முற்றுகையிட்டது.
- 1993 - ஜோர்ஜியாவின் பயணிகள் விமானம் ஒன்று சுகுமி என்ற இடத்தில் தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 108 பேர் கொல்லப்பட்டனர்.
- 1995 - யாழ்.நாகர்கோயில் பாடசாலை மீது இலங்கை விமானப்படையினர் நடத்திய குண்டுவீச்சில் 30 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1997 - அல்ஜீரியாவில் 200 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2006 - MSN தமிழ், ஹிந்தி பீட்டாவிற்கு விடை கொடுத்து இறுதிப் பதிப்பை ஆரம்பித்ததோடு, மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் பதிப்பை ஆரம்பித்தது.

பிறப்புகள்

- 1791 - மைக்கேல் பரடே, ஆங்கிலேய இயற்பியலாளர், வேதியியலாளர். (இ. 1867)
- 1834 - இராபர்ட் புரூசு ஃபூட், பிரித்தானிய நிலவியலாளர், தொல்லியலாளர். (இ. 1912)
- 1863 - அலெக்சாண்டர் எர்சின், சுவிட்சர்லாந்து மருத்துவர், நுண்ணியலாளர் (இ. 1943)
- 1869 - முகமது ஹபிபுல்லா, இந்திய அரசியல்வாதி, திருவாங்கூர் திவான். (இ. 1948)
- 1930 - பி.பி. ஸ்ரீநிவாஸ், தென்னிந்தியத் திரைப்பட பின்னணிப் பாடகர். (இ. 2013)
- 1930 - தி.ச.சின்னத்துரை, சிங்கப்பூர் உயர் நீதிமன்ற நீதிபதி. (இ. 2016)
- 1931 - அசோகமித்திரன், தமிழக எழுத்தாளர்.
- 1934 - டிமோதி இம்வன்றா, பிஜி அரசியல்வாதி (இ. 1989)
- 1939 - ஜுன்கோ டபெய், சப்பானிய மலையேறி
- 1959 - சோல் பெர்ல்முட்டர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர், வானியலாளர்
- 1962 - மார்ட்டின் குரோவ், நியூசிலாந்துத் துடுப்பாளர். (இ. 2016)

இறப்புகள்

- 1539 - குரு நானக், சீக்கிய சமயத்தைத் தோற்றுவித்தவர் (பி. 1469)
- 1828 - சாக்கா சூலு, சூலு பேரரசர். (பி. 1787)
- 2009 - எஸ். வரலட்சுமி, நடிகை, பாடகி. (பி. 1927)
- 2009 - ஆர். பாலசுந்திரன், பேராசிரியர், கவிஞர்.

சிறப்பு நாள்

- புற்றுநோய் ரோசா நாள்.
- விடுதலை நாள் (பல்கேரியா, 1908)
- விடுதலை நாள் (மாலி, 1960)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 80 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 95 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 250 | 170 | 300 | 250 | 180 |
| தக்காளி | 150 | 200 | 100 | 160 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 | 80 | 60 | 80 |
| கோவா | 80 | 120 | 60 | 100 | 100 | 70 |
| கரட் | 100 | 200 | 100 | 160 | 160 | 80 |
| பூசணி | 40 | 40 | 25 | 40 | 60 | 30 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 60 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 250 | 180 | 240 | 240 | 280 |
| பெரிய வெங்காயம் | 120 | 160 | 90 | 140 | 100 | 140 |
| பாகற்காய் | 300 | 400 | 250 | 250 | 400 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 50 | 50 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 160 | 70 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 100 | 120 | 90 | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 160 | 80 | 160 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 80 | 100 | 150 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 200 | 250 | 120 | 160 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | 100 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 40 | 40 | 40 | 40 | 25 |
| தேசிக்காய் | 250 | 250 | 240 | 400 | 400 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 90 | 60-80 | 70 |
| இராசவள்ளி | 300 | 400 | 250 | — | 400 | 300 |
| வெங்காயப்பூ | 200 | 160 | 120 | 200 | 200 | — |
| முள்ளங்கி | 60 | 60 | 25 | 60 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 20 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 60 | 20 | 60 | 50 | 60 |

ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலாற்கு
ஆயிரம் திருநாமம்.

– திருவாசகம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஓர் உருவம் ஒரு நாமம் இல்லாததற்கு பல நாமம்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவற்றுக்கு நேர்ந்த சதிகள் பற்றி ஆராய்ந்தால் எல்லாம் செப்படி வித்தை என்பதை உணர முடியும்.

பண்டா – செல்வா ஒப்பந்தம் முதல் இன்றைய அரசியலமைப்புச் சீர்திருத்தம்வரை எல்லாமும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக என்று கூறப்பட்டாலும் அறுபது ஆண்டுகள் கடந்தும் எதுவும் நடந்ததாக வில்லை.

மாறாக தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றும் நோக்கிலேயே தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன.

பண்டா – செல்வா ஒப்பந்தம், இலங்கை – இந்திய ஒப்பந்தம், ரணில் – பிரபாகரன் உடன்படிக்கை, தெரிவுக்குழு, அரசியலமைப்புச் சீர்திருத்தம் என எத்தனையோ நாமங்களில் எத்தனையோ தீர்வுத் திட்டங்கள் வந்து போயின என்றாலும் அவை எதிலும் ஒன்றும் இல்லை என்பதுதான் முடிந்த முடிவு.

ஆக, ஓர் உருவம் ஒரு நாமம் இல்லாத தீர்வுத் திட்டத்துக்கு பல நாமங்கள் சூட்டி ஏமாற்று நாடகம் தொடர்கிறது.

அந்த நாடக வரிசையில் இப்போது புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்ற பெயரில் அரங்கேறியுள்ள நாடகத்தின் முடிவு என்னவாகும் என்பதை இன்னும் சில காலங்களில் கண்டறிய முடியும்.

இருந்தும் அரசியலமைப்புச் சீர்திருத்த நாடகத்தை ஒத்திகை பார்த்தவர்களுக்கு நாடகத்தில் ஒன்றும் இல்லை என்ற உள்ளார்ந்தம் புரிந்திருக்கும்.

தவிர, நாடகத்தை தயாரித்தவர்கள், எழுத்தாக்கம், ஒப்பனை, கதையாக்கம், நெறியாள்கை செய்தவர்கள் நாடகத்தின் முடிவு ஒன்றும் இல்லை என்பதை ஏலவே தெரிந்திருப்பர்.

ஒன்றுமில்லாமல் ஒன்றை அரங்கேற்ற வேண்டும். அதில் எல்லாம் இருப்பதாக தமிழ் மக்களை நம்பவைக்க வேண்டும். அதற்கு தமிழ் அரசியல் தலைமையை சாட்சியாக்க வேண்டும் என்ற மிகப்பெரும் ஏற்பாட்டில் அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபு பிரசவமாகியுள்ளது.

வந்ததில் ஏதேனும் இருக்கிறதா? அல்லது எதுவும் இல்லையா? என்பதையெல்லாம் நடக்கப்போகும் ஆய்வுகள் விமர்சனங்களில் இருந்து கண்டறிய முடியும்.

ஆனாலும் இலங்கை அரசாங்கம் எங்களுக்கு எதையும் தரப்போவதில்லை என்பது மட்டும் நிறுதிட்டமான உண்மை.

இனப்பிரச்சினையைத் தீர்க்கக்கூடியவர் என்று தமிழ் மக்கள் நம்பியது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை.

எனினும் தமிழ் அரசியல் தலைமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தரப்புக்கு தனது ஆதரவை வழங்கி வருவதை அறிந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இப்போது தனது நிலைப்பாட்டை மாற்றி வருகிறார் என்பதை உணரமுடிகின்றது.

அந்த மாற்றத்தின் ஓர் அறிகுறியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.நாவில் ஆற்றிய உரை அமைகிறது.

என்ன செய்வது தமிழ் அரசியல் தலைமையும் தன் சொந்த நலனை முதன்மைப்படுத்தியதால், தமிழ் மக்களின் நலனை இழக்க வேண்டியதாயிற்று.

எதுஎவ்வாறாயினும் ஒன்றுமில்லாத தீர்வுக்கு இன்னும் பல நாமங்கள் மொழியப்படும் என்பது மட்டும் மாற்றமில்லாத உண்மை.

# நவராத்திரி பாமாலை

வீரத்திற்கு இன்று இரண்டாம் நாள்



### வீரத்தின் திருவுருவமே

வீரத்தின் திருவுருவமே- உன்னை
விழுந்தழும் கைகூப்பினேன்
மகிசாசூரனை வதைத்தவளே
மனதோடு என்றும் வைப்பேன்

உண்மையில் திருவுருவமே உன்னை
உணர்வுகளால் நான் காண்பேன்
வர்ணங்களின் ஜாலமே உன்னை
வணங்க என் இரு கை போதாது

க.கனுசிகா
கல்வியங்காடு

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உங்கள் வீட்டில் தங்கமழை கொட்டணுமா?

❖ அட்சய திருதியை மட்டுமல்லாமல் பரணி, பூரம், பூராடம்போன்ற நட்சத்திரம் வரும் நாட்களில் சுக்கிரன், புதன ஆகிய நாட்களில் தங்கநகை வாங்கினால் யோகம் வரும்.

❖ தங்கம் அதிகரிக்க புதன், வெள்ளிக்கிழமைகளில் மேற்கூறப்பட்ட நட்சத்திரங்கள் உள்ள நாட்களில் நகைகள் வாங்கினால் அதிர்ஷ்டம் உண்டாகும்.

❖ நெல்லிமரம், ஸ்ரீமகாலஷ்மியின் உள்ளங்கையில் உருவானது. அதனால் நெல்லிவாசம் உள்ள இடத்தில் லஷ்மி இருப்பாள். எனவே பெருமாளுக்கு உகந்த தினமான ஏகாதசி அன்று நெல்லிக்காயை தலையில் தேய்த்து குளித்தால் ராஜயோகம் கிடைக்கும்.

❖ புதிதாக தங்கம் வாங்கியதும் அதை ஒரு சுத்தமான வெள்ளை துணியில் கட்டி, அதை உப்பில் சிறிது நேரம் புதைத்து வைக்க வேண்டும். இதனால் தங்கத்தின் மீது உள்ள தோஷங்கள் நீங்கி, தங்கம் அதிகரிக்கும். (முற்றும்)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஒவ்வொரு கல்லும் விலை மதிக்க முடியாதது

சிற்பி ஒரு கோவில் கட்ட எல்லாவிதமான கற்களையும் உபயோகப்படுத்துகிறான்.

சில கற்களை அஸ்திவாரத்திற்குப் (அடிக்கட்டடம்) பயன்படுத்துகிறான். அவை வெளியே தெரிவதில்லை.

எந்தக் கற்களில் வடிவம் அமைக்க முடியுமோ அந்தக் கற்களை சுவர்கள் தூண்டுகள் கட்டுவதற்கு எடுத்துக்கொள்கிறான்.

சில கற்களால் படிகளை அமைக்கிறான்.

சில கோயில் கோபுரமாகும்.

மிகவும் பொருத்தமான கல்லில் மாத்திரமே கடவுளின் உருவத்தைச் செதுக்குகிறான்.

கோவிலின் ஒரு அங்கமாக ஆகிவிட்ட கல் பிறகு வெறும் கல் அல்ல; அது சிற்பமாகிறது. கலையாகிறது. வாழும் (உயிர்ச்சக்தியுடைய) தெய்வமாகிறது.

இதைப்போல் குருவினிடம் நிறையப் பேர் வருகிறார்கள். அவர்களின் சரணாகதியின் தரத்திற்கு ஏற்றவாறு குரு அவர்களை அவரவர்க்குரிய நிலையில் வைக்கிறார்.

எல்லாம் மிக அவசியமானது.


படிகள் இல்லாமல் இருந்தால் ஒருவனால் கோவிலுக்கு எப்படி வரமுடியும்?

அஸ்திவாரம் (அடிக்கட்டடம்) இல்லாவிட்டால் எப்படி கோவில் இருக்கும்?

தூண்கள் இல்லாமல் கோபுரம் என்ன செய்யும்?

சிற்பிக்கு ஒவ்வொரு கல்லும் முக்கியம். விலை மதிக்க முடியாததாகும்.

# மலரும் இஸ்லாமியப் புதுவருடம்



(ஹிஜ்ரி 1437 – 1439)

உலக முஸ்லிம்களின் ஹிஜ்ரியை பூர்த்தி செய்து கொண்டு ஹிஜ்ரி 1439 ஆம் ஆண்டுக்குள் பிரவேசிக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

பிறக்க இருக்கும் இஸ்லாமியப் புது வருடம் இலங்கையில் 03.10.2017 அன்று எதிர்கொள்ளப்பட இருக்கிறது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் (நுபுவத்) கிடைத்த பின் 13 வருடங்கள் மக்காவிலேயே இஸ்லாமியப் பணிகளில் ஈடுபட்டார்கள். இங்கு பல துன்பங்களைத் தாங்கி பின் அல்லாஹ்வின் கட்டளைப்படி மதீனா நோக்கி தூய இஸ்லாத்தை எடுத்துச்சென்ற ஹிஜ்ரத் நிகழ்வு இஸ்லாமிய வரலாற்றில் மாபெரும் திருப்பு முனையாக அமைந்தது. இந்நிகழ்வில் இருந்தே இஸ்லாமிய வருடம் கணிக்கப்படுகிறது.

இஸ்லாம் தனித்துவம் மிக்க மார்க்கமாகும். அவ்வாறே இஸ்லாமிய வருடக் கணிப்பும் தனித்துவத்துடன் காணப்படுகிறது. சூரிய சுழற்சியை அடிப்படையாகக் கொண்டே தமிழ், சிங்கள, ஆங்கில வருடங்கள் கணிக்கப்படுகின்றன. சந்திர சுழற்சியை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய வருடம் கணிக்கப்படுகிறது.

எமது தாய்நாடு இலங்கையில் முஸ்லிம்களாகிய நாம், எமது கடந்து போகும் ஹிஜ்ரி வருட அனுபவங்களை மீட்டிப் பார்த்து, பெற்ற உயர்வுகளை மதித்து, பட்ட காயங்களை மறந்து- ஏனைய சமூகங்களுடன் இஸ்லாம் கூறும் சமத்துவம், சகோதரத்துவம் பேணி பரஸ்பர புரிந்துணர்வுடன் ஒற்றுமை பேணி வாழ்வோமாக.

எல்லாம் வல்ல இறைவனே! பிறக்கும் இந்தப் புத்தாண்டில் உனது படைப்பான உலக மக்கள் குறிப்பாக இலங்கை மக்கள் கடந்த காலப் பயங்கரங்களையும் இழப்புக்களையும் விட்டுத் தம் சொந்தக்காலில் எழுந்து நிற்க ஆவன செய்வாயாக. நீ எமக்கு வாக்களித்தபடி உன்னை மன்றாடி நிற்கும் எமது பாவங்களை மன்னித்து அமைதியடையச் செய்வாயாக. இதுவே இப்புதுவருடத்தில் உன்னிடம் இலங்கை வாழ் முஸ்லிம்களின் பிரதான பிரார்த்தனையுமாகும். இதற்காகவே இப்புத்தாண்டில் எம் இரு கரங்கள் ஏந்தி உன் முன் நிற்கின்றோம்.

அல்லாஜ். மௌலவி.
ஏ.எ.எம்.ஏ.அஸீஸ்
(யாழ்.கிளிநொச்சி
மாவட்ட உலமா சபை
சர்வமதத் தலைவர்)

### மகிந்தவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில்

# நுழைய முற்பட்டவர் கைது

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கொழும்பில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நேற்று பிரவேசிக்க முயற்சித்த நபரொருவர் பாதுகாப்பு பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கூரிய ஆயுதமொன்றுடன் சந்தேகநபர் வாசஸ்தலத்தில் நுழைய முற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (மு–11)

# கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

பலாலி கிழக்கு வசாவிளானை சேர்ந்த தம்பியப்பா தவராசா என்பவருடைய தொழில் திணைக்கள அடையாள அட்டை, வங்கிப் புத்தகம், ATM அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி வலம்புரி பத்திரிகை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும். (மு)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### குறை சொல்லித் திட்டாதீர்

✦ வசதி இல்லாத ஒருவன் மனம் நொந்து உங்களிடம் உதவி கேட்டால் அவனை விரட்டாதீர்கள். கொஞ்சமேனும் கொடுத்து அனுப்புங்கள். அல்லது இனிய வார்த்தைகளால் பதில் சொல்லுங்கள்.

✦ ஒருவர் நேர்வழி பெற்றபின், வீண் தர்க்கம் செய்வதை விட்டு விட்டால் அவர் ஒருபோதும் வழிகெடமாட்டார். ஏனெனில், இறைவனிடம் மிகவும் கோபத்திற்குரியவர்கள், வீண்தர்க்கம் செய்வதில் திறமைசாலிகளாக இருப்பார்கள்.

✦ யாராவது உன்னிடமுள்ள குறைகளைச் சொல்லி உன்னைத் திட்டினால் நீ அவனுடைய குறைகளைச் சொல்லி திட்டாதே. காரணம் அந்தப் பாவம் அவனையே சாரும்.

✦ ஓரிடத்தில் மூவர் இருப்பின், ஒருவரை விட்டு இருவர் மட்டும் ரகசியம் பேசாதீர். ஏனென்றால் அது அவருக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணும்.

✦ எவன் புகழுக்காகவும், பகட்டுக்காகவும் ஆடை அணிகிறானோ அவனுக்கு கியாமநாளில் இழிவான ஆடையை அல்லாஹ் அணிவிக்கிறார்.

# விளையாட்டில் சாதனை புரிந்த முல்லை. மாணவர்கள் கௌரவிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டில் சாதனை புரிந்து மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் முல்லைத் தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

மாவட்ட செயலக கணக்காளர் ஜெசுறெஜினோல்ட் தலைமை யில் நடைபெற்ற நிகழ்வில் முன்னதாக விளையாட்டில் சாதனை நிகழ்த்திய வீரர்களை பாண்ட் வாத்திய அணி இசையுடன் மாவட்ட செயலகத்திற்கு வரவேற்கப்பட்டு கௌரவிப்பு நடைபெற்றுள்ளது.

நிகழ்வில் கருத்துரைகளை முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அதிபர் சிவலிங்கம் மற்றும் முல்லை. வலயக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் நிகழ்த்த வாழ்த்துரையினை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் நிகழ்த்தியுள்ளார். (க)



43 ஆவது தேசிய விளையாட்டுப்போட்டியில் வட மாகாண மகளிர் கிரிக்கெட் அணியினர் Western அணியை வீழ்த்தி சம்பியனாகியது.

# உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை வீழ்த்தியது வதிரி டயமன்ஸ் அணி



"வடமாகாண மகுடம் " மின்னொளியிலான உதைப்பந்தாட்டத் தொடர் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை வீழ்த்தியது வதிரி டயமன்ஸ் அணி.

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியான அழைக்கப்பட்ட முன்னணி கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் இரண்டாவது சுற்றுத் தொடரின் ஐந்தாம் நாள் போட்டிகள் 19-09-2017 அன்று செவ்வாய்க்கிழமை இரவு 7.00 மணியளவில் கழக மைதானத்தில் இடம்பெற்றது. பரபரப்பாக ஆரம்பமாகிய போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது. வதிரி டயமன்ஸ் அணியின் முன்கள வீரர்களின் சிறப்பான ஆட்டம் அவர்களின் வெற்றியை உறுதி செய்தது . இறுதியாக ஆட்டம் முடியும் போது 3-0 என்ற கோல்கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை வீழ்த்தி வதிரி டயமன்ஸ் அணி அடுத்த சுற்றுப்போட்டிக்கு தகுதிபெற்றது. (க)

# பனால்டியில் மன்னார் சென். அன்ரனீஸ் அணியிடம் வீழ்ந்தது வல்வை அணி

"வடமாகாண மகுடம்" மின்னொளியிலான உதைபந்தாட்டத் தொடர் இறுதிவரை போராடி பனால்டியில் மன்னார் சென். அன்ரனீஸ் அணியிடம் வீழ்ந்தது வல்வை அணி

மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியான அழைக்கப்பட்ட முன்னணி கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் இரண்டாவது சுற்றுத் தொடரின் ஐந்தாம் நாள் போட்டிகள் 19-09-2017 அன்று செவ்வாய்க்கிழமை இரவு 8.00 மணியளவில் கழக மைதானத்தில் இடம்பெற்றது. பரபரப்பாக ஆரம்பமாகிய போட்டியில் மன்னார் அந்தோனியார்புரம் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து வல்வெட்டித்துறை வல்வை அணி மோதியது.



இரு அணிகளின் வீரர்களின் சிறப்பான ஆட்டம் பரபரப்பாக இறுதி வரை அமைந்தது. இறுதியாக ஆட்டம் முடியும் போது 1-1 என்ற கோல்கணக்கில் போட்டி நிறைவு பெற்றது. வெற்றியை தீர்மானிக்க நடுவர்களினால் பனால்டி உதை வழங்கப்பட்டது. இறுதியில் 3-2 என்ற கோல் கணக்கில் வல்வை அணியை வீழ்த்தி மன்னார் அந்தோனியார்புரம் அணி அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதிபெற்றது. (க)

# சைனிங்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனாகியது நேதாஜி



நேதாஜி விளையாட்டுக் கழகம் ஆண்டுவிழாவினை முன்னிட்டு நடத்திய கரப்பந்தாட்ட தொடரின் பரபரப்பாக ஆரம்பமாகிய இறுதிப் போட்டியில் சைனிங்ஸ் அணியை எதிர்த்து நேதாஜி அணி மோதியது.

இரு அணிகளின் வீரர்களின் சிறப்பான ஆட்டம் பரபரப்பாக இறுதி வரை அமைந்தது. இறுதியாக ஆட்டம் முடியும் போது 25:22 -25:22 என்ற புள்ளி அடிப்படையில் நேதாஜி அணி வெற்றி பெற்று சம்பியனானது. (க)

# துறையூர் ஐயனார் வெற்றி



"வடமாகாண மகுடம்" மின்னொளியிலான உதைப்பந்தாட்டத் தொடரில் துறையூர் ஐயனார் அணி வீரர்களின் அதிரடி கோல்கள் மூலம் வீழ்ந்தது வடமராட்சி சமரபாகு நியூட்டன் அணி மாலு சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியான அழைக்கப்பட்ட முன்னணி கழகங்களுக்கிடையிலான அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் இரண்டாவது சுற்றுத் தொடரின் ஆறாம் நாள் போட்டிகள் 20-09-2017 அ ன்றுபுதன்கிழமை இரவு 8.00 மணியளவில் கழக மைதானத்தில் இடம்பெற்றது. பரபரப்பாக ஆரம்பமாகிய போட்டியில் வடமராட்சி சமரபாகுநியூட்டன் அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதியது.

ஐயனார் அணியின் முன்கள வீரர்களின் சிறப்பான ஆட்டம் வெற்றியை உறுதி செய்தது. இறுதியாக ஆட்டம் முடியும் போது 5-1என்ற கோல் கணக்கில் வடமராட்சி நியூட்டன் அணியை வீழ்த்தி துறையூர் ஐயனார் அணி அடுத்த சுற்றுப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க)

## போர்க்குற்றச்சாட்டு...

நான் இந்த வாரம் நியூயோர்க்கிற்கு பயணிக்கவிருந்தேன். ஆனால் இலங்கையில் இருந்து செல்லும் குழுவில் இடம்பெற்றிருந்த எனக்கு மாத்திரம் நுழைவுவிசா வழங்கப்படவில்லை.

இதனால், ஐ.நா பொதுச்சபையில் உரையாற்றுவதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டுச் சென்ற ஜனாதிபதியுடன் இணைந்து கொள்ள முடியவில்லை.

இராணுவத்துக்கு எதிரான போர்க்குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகளால்தான் எனக்கு நுழைவு விசா வழங்கப்படவில்லை.

இதனால் தான், குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் என்று நான் கூறுகிறேன்.

போரின் இறுதிக்கட்டத்தில் சிலரின் செயல்களால் ஒட்டுமொத்த படைகளினதும் பெயர் நாசமாக்கப்படக் கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (மு-11)

## இலங்கைக்கு...

டம் இருந்து எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை என அதில் தெரிவித்துள்ளார்.(மு-11)

## சந்தர்ப்பத்தை...

அதனோடு சேர்த்து முன்வைக்கப்பட்டுள்ள இணைப்புக்களிலும் அடங்கியுள்ள விடயங்கள் பற்றிய கருத்துக்களைத் தற்பொழுது கூறுவது எனது எண்ணமல்ல. அத்தகைய நோக்கத்துக்காக அரசியலமைப்புச் சபையின் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள கூட்டங்களில் அந்த விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

நாங்கள் ஈடுபட்டுள்ள செயல்முறையின் சில விடயங்களின் அவசரமான தொடர்பு மற்றும் முக்கியத்துவம் பற்றியே குறிப்பிட்டுக் கூற விரும்புகின்றேன்.

சனநாயக சோசலிஷக் குடியரசாகிய எமது நாட்டிற்கான அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும் செயல்முறையிலேயே நாம் அனைவரும் ஈடுபட்டுள்ளோம். அடிப்படை மீயுயர் சட்டமாகிய இலங்கையின் அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் நாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் சார்பாக இலங்கைப் பாராளுமன்றத்தின் உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் ஈடுபட்டுள்ளோம்.

பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாத ஐக்கிய இலங்கை என்ற உறுதியான கட்டமைப்புக்கமைவாக இது மேற்கொள்ளப்படுகின்றது. இந்தக் கட்டமைப்பின்படியே நாங்கள் யாவரும் சுயமாக விரும்பி ஒப்புக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் கூடிய வகையில் அரசியலமைப்பு உருவாக்கப்படும்.

நியாயமான, ஏற்புடையதான, போதியளவான தேசிய ஒருங்கிசைவின் அடிப்படையில் உருவாக்கப்படும் அரசியலமைப்புச் செயற்பாடுகள் வெற்றிகரமாக முடிவுறும்போது அது இந்தப் பிரச்சினைக்கான உறுதியான முடிவைக் கொண்டுவரும்.

நாட்டின் மீயுயர் சட்டத்தின் அடிப்படையிலும், அதன் மக்களுடைய சுயவிருப்பத்துடனும், சம்மதத்துடனும் இலங்கை ஐக்கியமான, பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாததாகத் தொடர்ந்தும் இருக்கும்.

வித்தியாசமான அடையாளங்களைக் கொண்டுள்ள வேறுபட்ட மக்களான சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பறங்கியர் போன்றோர் வாழுகின்ற நாடாக இலங்கை உள்ளது. அத்துடன் இலங்கை பல்வேறு அரசியற் கட்சிகள் செயற்படுகின்ற ஜனநாயகம் தொழிற்படுகின்ற நாடாகும். இரண்டு பிரதான அரசியற் கட்சிகளும் மாறி மாறி இந்த நாட்டின் அரசாங்கத்தை அமைத்து ஆட்சி செய்திருக்கும் அதேவேளை, ஏனைய கட்சிகளும் தங்களுடைய வகிபாகத்தைக் கொண்டிருந்தன.

இலங்கையில் இதுவரை கட்டமைக்கப்பட்ட அரசியலமைப்புக்கள் எதுவும் அதன் வேறுபட்ட மக்களின், குறிப்பாகத் தமிழ் மக்களின் இருதரப்பு ஒருங்கிசைவைப் பெற்றிருக்கவில்லை அல்லது இரு பிரதான கட்சிகளின் மற்றும் ஏனைய அரசியற் கட்சிகளின் இருதரப்பு ஒருங்கிசைவையும் பெற்றிருக்கவில்லை. அரசியலமைப்பு உருவாக்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் அதற்கான ஒரு வாய்ப்பை முதற் தடவையாகத் தந்துள்ளன.

இதுவே, அரசியலமைப்பை அரசியல் சூழ்நிலைகளின் பிடிக்குள் இருந்து வெளியே கொண்டு வந்து, இலங்கையை ஒரு தேசமாகவும் இலங்கையர் என்ற அடையாளத்தையும் காட்டும் பண்புகளை உருவாக்கக்கூடிய அரசியலமைப்பொன்றைப் பெற்றுத் தரும்.

இலங்கை சுதந்திரம் அடைந்து எழுபது ஆண்டுகளாக இந்த நிலைமையை அடைய எமமால் முடியவில்லை.

1987-1988 ஆண்டு தொடக்கம் அரசியலமைப்பு உருவாக்கச் செயற்பாடுகள் தொடர்கின்றன. செயல்வலு குறைந்ததாக இருந்த போதும், அரசியலமைப்புக்கான 13வது திருத்தமே மத்திக்கும் மாகாணங்களுக்கு மிடையிலான அதிகாரப் பங்கீட்டை முதற் தடவையாக அரசியலமைப்புக்குள் உள்ளடக்கியது. அப்பொழுது தொடக்கம் பின்வந்த ஜனாதிபதிகளும் அரசாங்கங்களும் தேசியப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வைக் காண்பதற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய முன்னேற்றகரமான பிரேரணைகளை முன்வைத்தனர். ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் மங்கள முனசிங்க தெரிவுக்குழுவின் பிரேரணைகள் வந்தன. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சிக் காலத்தில் அமைச்சரவையின் அனுமதியுடன் 2000ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அரசியலமைப்புப் பிரேரணைகள் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அவரால் நியமிக்கப்பட்ட பல்லின நிபுணர்களின் பிரேரணைகள் உருவாக்கப்பட்டதோடு, பேராசிரியர் திஸ்ஸ விதாரணவைத் தலைவராகக் கொண்டு சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு அதன் அறிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பித்திருந்தது. இப்போதைக்கு அவை பற்றிய விபரங்களுக்குள் நான் போகவில்லை. அத்தகைய பிரேரணைகள் பல்வேறு புறம்பான காரணங்களுக்காக அரசியலமைப்புடன் சேர்க்கப்படாவிட்டாலும் அப்பிரேரணைகள் தொடர்பாகக் கணிசமான ஒருங்கிசைவு காணப்பட்டதென்பதைத் தெரிவிப்பது போதுமானதென எண்ணுகிறேன். உண்மையில் இதுமுன்னைய செயற்பாடுகளின் தொடர்ச்சியெனக் குறிப்பிட்டுக் கூறுவதோடு, இந்தச் செயற்பாடு முழுமையாக வித்தியாசமான ஒரு சூழ்நிலையில் இடம்பெறுவதனால், இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாதென எல்லோரும் நியாயமாகவும் உறுதியுடனும் இருந்தால் இது வெற்றியடையக் கூடிய எல்லாச் சாதகமான நிலைமைகளும் உள்ளன.

தமது அடையாளமும், கௌரவமும் அங்கீகரிக்கப்படும் நியாயமானதும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதுமான அரசியலமைப்பு ஏற்பாடுகளே தமிழ்பேசும் மக்களின் நீண்டகால அபிலாசையாக இருந்து வருகின்றது. உலகத்தில பரவலாக இத்தகைய ஒழுங்குமுறைகள் இருக்கின்றன. தீர்வு காணப்படாத நிலைமைகளின் விளைவாக முழு நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும் பல்வேறு பக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளன. கல்வியறிவுடைய தகுதிவாய்ந்த இந்த நாட்டின் பிரசைகள், குறிப்பாகத் தமிழர்களும் சிங்களவர்களும் நாட்டைவிட்டு வெளியேறி பிற நாடுகளில் புகலிடம் பெற்றுள்ளதனால் இந்த நாடு திறமையானவர்களைப் பாரிய அளவில் இழந்துள்ளது. பல்வேறு வழிகளிலும் இந்த நாட்டின் எதிர்காலத்திற்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் சர்வதேச ரீதியில் நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் எமது நாட்டின் நற்பெயரை மீட்டெடுத்து சர்வதேசத்தின் மதிப்பைப் பெறவேண்டிய தேவை உள்ளது. எமது பொருளாதாரம் பாரிய அளவில் குறைபாடுடையதாக உள்ளதோடு, முன்னர் எமது வாழ்க்கைத் தரத்தை விடப் பின்தங்கிய நிலையில் இருந்த இந்தப் பிராந்தியத்தின் ஏனைய நாடுகள் வேகமாக முன்னேற்றமடைந்து இன்று நாம் வாழும் வாழ்க்கைத் தரத்தைவிட மிக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்டவர்களாக இருப்பதால் பொருளாதார ரீதியில் நாம் மிகவும் பின்னடைந்துள்ளோம். பாதுகாப்புச் செலவினங்களுக்காக பாரிய தொகையைச் செலவிட வேண்டியுள்ளதால் முக்கியமான துறைகளில் அபிவிருத்திகளை மேற்கொள்ள வளப் பற்றாக்குறை தடையாக உள்ளமை பின்னடைவுக்குக் காரணமாகின்றது.

இத்தகைய காரணிகளே புதிய மீயுயர் அடிப்படைச் சட்டத்தின் மீது ஒரு புதிய எதிர்காலத்தை உருவாக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் புனிதமான பணியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்துவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றார் சம்பந்தர். (மு-11)

# போராட்டத்தில் ஈடுபட்டோரை இராணுவத்தினர் அச்சுறுத்தினர்!

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

நிலமீட்பு போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை சீருடை தரித்த இராணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளதாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்விடங்களை குறிவைத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தேசிய பூங்கா அமைப்பதற்கான காணிகள் அடையாளப்படுத்தும் நடவடிக்கைக்கு எதிராக அப்பகுதி மக்கள் நேற்றைய தினம் மருதங்கேணி பிரதேச செயலக முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் கலந்து விட்டு மாலை நேரம் வீடு திரும்பிய பொதுமக்களை சீருடை தரித்த இராணுவத்தினர் அச்சுறுத்தியுள்ளனர்.

அதாவது போராட்டம் ஏற்பாடு செய்த கிராம அபிவிருத்தி சங்க தலைவரின் வீட்டுக்கு அருகில் நேற்றைய தினம் மாலை இரண்டு இராணுவத்தினர் சீருடையுடன் சென்றுள்ளனர்.

அங்கு நின்றிருந்த பொதுமக்களிடம் குறித்த போராட்டம் எமக்கு எதிராகவா நடைபெறுகிறது? எதற்காக இந்த போராட்டம் மேற்கொள்கிறீர்கள்?, தொடர்ச்சியாக இந்த போராட்டத்தை முன்னெடுக்கப்போகிறீர்களா? யார் இந்த போராட்டத்தை செய்கிறார்கள் என மிரட்டும் தொனியில் விசாரணை செய்துள்ளனர்.

இதை ஏன் எம்மிடம் கேட்கிறீர்கள்? இராணுவம் சிவில் நடவடிக்கைகளில் தலையிட முடியுமா தரவுகள் பெற வேண்டுமெனில் பிரதேச செயலரை சந்தித்து பெறுங்கள் என பதிலளித்துள்ளனர். அப்போது அவ்விடத்தை விட்டு இராணுவத்தினர் நழுவிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து போர்ராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், தம்மால் தம் உரிமைகளை கேட்பதற்கும் பயமாக உள்ளது. இவ்வாறு இராணுவத்தினர் எமது விபரங்களை பெற்றுச் சென்றால் இனி வரும் காலத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டு ள்ளதாகவும் தமது தொடர்ச்சியான போராட்டத்தை தடுத்து நிறுத்துவதற்காகவே இவ்வாறு தம்மை அச்சுறுத்துகிறார்கள் எனவும் தெரிவித்திருந்தனர். (மு-9,89)

## அற்ப சொற்ப...

மக்கள் இயக்கம் கபே குற்றம் சாட்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தத்துவாசிரியராக இருக்கும் எம்.ஏ.சுமந்திரன், நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு விலைபோய்விட்டதாக குற்றம் சுமத்தினார்.

பல மாதங்களாக இழுபறி நிலையிலிருந்த உள்ளூராட்சி தேர்தல்கள் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேறியது.

எனினும் இந்த திருத்தச் சட்டத்தில் பல குறைபாடுகள் காணப்படுவதாக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளும், அமைப்புக்களும் சுட்டிக்காட்டி வந்த நிலையில் கூட்டமைப்பு உட்பட அரசியல் கட்சிகள் இந்தச் சட்டமூலத்திற்கு பச்சை கொடி காட்டியது.

இந்நிலையில் கொழும்பில் நேற்றைய் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன், குறைபாடுகளுடன் குறித்த சட்டம் நிறைவேற்றப்பட்டதாக அதிருப்தி வெளியிட்ட அதேவேளை, தமிழ்த் தலைமைகளை அரசாங்கம் விலை கொடுத்து வாங்கி விட்டதாக குற்றம் சுமத்தினார்.

நாடாளுமன்ற வரலாற்றில் பின்கதவால் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட முதலாவது சட்டமாக உள்ளூராட்சிகள் தேர்தல்கள் திருத்தச் சட்டமாக அடையாளமிடப்படுகின்றது. இது ஜனநாயக விரோத மற்றும் முறையற்ற சட்டமாகும். குறிப்பாக துரதிர்ஷ்டவசமாக தொகுதிவாரி மற்றும் விகிதாசார முறைக்கு இடையிலான 60, 40 வீத வித்தியாசம் இறுதி தருணத்தில் சபையில் வாக்கெடுப்பு நடத்தவிருந்த 15 நிமிட சொற்ப நேரத்திலேயே 50 இக்கு 50ஆக மாற்றப்பட்டுள்ளது. இந்த விகிதத்திற்கு கொண்டுவந்தமைக்கான காரணம், ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், ரிஷாத் பதியூதீன் ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தேவைகளை நிறைவேற்றவே ஆகும். அவர்களது வாக்குகளற்ற நிலையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாமற்போன சூழ்நிலை உருவாகியிருந்தது. நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டு அம்மூவரது கோரிக்கையான 50க்கு 50 என்ற திருத்தம் சட்டமூலத்திற்கு உள்வாங்கப்பட்டது. இந்த திருத்தத்துடன் விகிதாசார தொகுதிவாரியுடன் சேர்த்த பின்னர் நடக்கும் ஒருவிடயம் இருக்கிறது. அது தான் நாட்டில் பரந்துவாழும் சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படும் அரசியல் கட்சிகளுக்கு எப்போதுமே கிடைக்காத நன்மையொன்று கிடைக்கும். இந்த சட்டமூலத்திற்கு திருத்தங்கள் பின்கதவால் கொண்டு வந்து நிறைவேற்ற செலுத்தப்பட்ட விலை அதிகமாகும். இதனால் வடக்கு, கிழக்கிலேயே அதிக அநீதி ஏற்படும் என்று கூறுகின்றோம்.

ஆனால் நேற்றுமுன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தத்துவாசிரியராக இருக்கும் சுமந்திரன், அந்தக் கடமையை சம்பந்தனுக்கு செய்யாமல் ரணிலுக்கே நிறைவேற்றினார். இது இனவாத அறிவிப்பல்ல. இந்த நாட்டில் சட்டத்தை பற்றி நன்கு தெரிந்தவர்களும், மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சட்டத்தை சரிவர நிறைவேற்றுவோம் என குரல் கொடுத்தவர்கள் நாடாளுமன்றத்தில் இப்போது உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு கீழே கண்களுக்கு எவ்வாறு மண்ணைத்தூவுகிறது என்று ஆலோசனை கூறுபவர்களாக மாறிவிட்டனர் என்றார். (மு-11)

## ஜனநாயகத்தை...

டளஸ் அழகப்பெரும இதனை கூறியுள்ளார்.

இலங்கையின் அரச தலைவர் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றிக் கொண்டிருக்கும் போது, அரசாங்கம் இலங்கைக்குள் ஜனநாயகத்தை கொலை செய்ய நடவடிக்கை எடுத்தமை மிகவும் கவலைக்குரிய செயல்.

மாகாண சபைத் தேர்தல் திருத்தச்சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் அரசாங்கம் சில அடிப்படை தவறுகளை செய்துள்ளது.

அரசாங்கம் உயர் நீதிமன்றத்திடம் உள்ள உயரிய தன்மையை இல்லாமல் செய்தது. நீதிமன்றத்தின் அதிகாரத்தை பறித்துக் கொண்டுள்ளது.

சர்வஜன வாக்கெடுப்பின்றி மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க முடியாது என உயர் நீதிமன்றம் அறிவித்திருந்த நிலையில், ஒத்திவைக்கும் சட்டத்தை நிறைவேற்றியதன் காரணமாக நீதிமன்றத்தை அரசாங்கம் சுரண்டிய பின்னர் வீசிய லொத்தர் சீட்டாக மாற்றியுள்ளது.

எவரும் சர்வாதிகாரமாக ஆட்சி நடத்தி தீர்மானங்களை எடுப்பதற்கான வழியை அரசாங்கம் திறந்துள்ளது.

எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உள்ளவர்கள் எந்த திருத்தங்களையும் செய்து கொள்ள முடியும்.

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் தேர்தல் ஆணைக்குழு என்பன மிகவும் தாழ்ந்த முத்திரைகளாக மாற்றப்பட்டன எனவும் டளஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார்.(மு-11)

## ஜகத்துக்கு எதிரான...

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, ஜகத் ஜயசூரிய தொடர்பில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள கருத்துக்கள் யாவும் அவருடைய தனிப்பட்ட கருத்துக்கள் என்றும் திலக் மாரப்பன குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், ஜகத் ஜயசூரியவிற்கு எதிராக பிரேசிலில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கிற்கு, இலங்கை அரசாங்கம் எவ்வித ஆதரவையும் வழங்காதென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(மு-11)

# போலி நாணயத் தாள்களை...

பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுஅவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில்குறித்த கள்ள நோட்டு கடத்தல் தொடர்பாகமேலும் தெரிய வருவதாவது,

யாழ்.நகரில் உள்ள பிரபல மான வெளிநாட்டு பண மாற்று நிலையத்திற்கு இளைஞர் ஒருவர் 100 ரூபாய் பெறுமதியான 100 டொலர் கனேடியன் போலி நாணயத் தாள் களை இலங்கை பணத்திற்கு பரிமாற்றம்செய்வதற்கு கொண்டு சென்றுள்ளார்.

இதன்போது பண மாற்று சேவை பிரிவில் உள்ள இளைஞரினால் குறித்த நபர் கொண்டுவந்த கனேடியன் டொலர்கள் அனைத்தும் போலி நாணயங்கள் என கண்டுபிடித்ததையடுத்து இதுதொடர்பாக யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையிலான புலனாய்வு பிரிவினருக்கு தகவல் வழங்கியிருந்தார்.

கிடைக்கப்பட்ட தகவலையடுத்து யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பாலித்த பனார்ன்டோ மற்றும் யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் செயற்பட்ட குற்றத் தடுப்பு பிரிவு புலனாய்வு சம்பவ இடத்திற்கு சென்று நாணயம் மாற்றுவதற்கு வந்த இளைஞரை கைதுசெய்தனர்.

மேலும் குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளூடாக, சித்தன் கேணிப் பகுதியில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவர் போலி நாணயங்களை மாற்றிக்கொண்டு வருமாறு கொடுத்ததாக தெரியவந்ததுள்ளதுடன் குறித்த வர்த்தகரும் குற்றத் தடுப்பு பிரிவுபொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினூடாக 100 ரூபாய் பெறுமதியான 100 கனேடியடொலர் போலி நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டதுடன் இருகையடக்க தொலைபேசிகளும்கைப்பற்றப்பட்டிருந்தன.

ஒருகனேடிய டொலரின் இலங்கை பெறுமதி 124 ரூபாய்கள் எனவும் அதன்படி கைப்பற்றப்பட்ட மொத்த போலி நாணயத் தாள்களின்பெறுமதி 12இலட்சத்து 40ஆயிரம் ரூபாய்கள் என்பதுவிசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் இன்றையதினம்இவர்களை யாழ்.நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளதுடன் குறித்த போலி நாணயத் தாள்கள் வெளிநாடுகளில் அச்சிடப்பட்டு இங்கே கடத்தி கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்றும் அத்தகைய கோணத்திலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் உயர்பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்திருந்தார். (மு-4)


## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் வெளிநாடுகளில் இருந்து வருபவர்களுக்கும் திருமணம் மற்றும் சுப காரியங்கள் தங்கி நின்று செய்வதற்கும் சகல தளபாட வசதிகளுடன் கூடிய புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்குண்டு.

077 703 5457 (650)

## கண்ணன் எலக்ரோனிக்ஸ் அறிவித்தல்

எமது நிறுவனத்தில் T.V, ரேடியோ போன்ற பொருட்களை திருத்தம் செய்ய வழங்கி இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் ஒரு மாத காலத்திற்குள் அவற்றைப் பெற்றுக்கொள்ளவும். அதன் பின் ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல.

**கண்ணன் எலக்ரோனிக்ஸ்**
963 A, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(633)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம் (638)


# கூடியளவு அதிகாரங்...

தின் ஊடாக செனட் சபை ஒன்றை ஏற்படுத்தி, அதில் அங்கம் வகிக்கும் இரண்டு உறுப்பினர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்றயோசனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கியுள்ளது. அதேபோல் அரசியலமைப்புச் சட்டத்தில் அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட வேண்டும்.

மேலும் அமைச்சுக்களுக்கான துறைகளில் மாற்றங்களை செய்ய முடியாத யோசனைகளும் உள்ளடக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார். (மு-11)

# இலங்கைக்கு...

யுள்ளார்.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் இலங்கை சிவில் சமூகப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்பட்ட செய்தி தம்மைக் குழப்பத்தில் ஆழ்த்தியதாக 2017 மார்ச் 22ஆம் நாள்ஐ.நாமனித உரிமைகள்ஆணையாளர்தனது உரையில்கூறியிருந்தார். அவர் இந்த விவ காரத்தை உதவிச் செயலருக்கு அனுப்பியிருந்தார்.

ஜெனிவாவில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 34 ஆவது அமர்வில் கலந்து கொண்ட எஸ்.கணேசநாதன் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்பட்டது தொடர்பாக ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்களும் விசாரித்திருந்தனர்.

இந்த நிலையில், மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் உதவிச்செயலர் அன்ட்ரூ கில்மோர் நேற்று முன்தினம் இது தொடர்பான அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

2017 மார்ச் 7- 9ஆம் திகதிகளுக்கிடையில் இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைமைகள் தொடர்பாக கணேசநாதன்உரையாற்றியிருந்தார்.

2017 மார்ச் 1ஆம் திகதி கல்முனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கணேசநாதனின் வீட்டுக்குச் சென்று, அவரது உறவினர்களை மிரட்டியுள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 34ஆவது அமர்வில் கணேசநாதன் கலந்து கொண்டமையினால், அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டமை குறித்து, நிபுணர்கள் தீவிர கரிசனை வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நேரம் வரையில், இலங்கை அரசாங்கத்தி 23☛


## TECHNO WORLD

**A/L தொழில்நுட்பபிரிவு**

A/L 2017 தொழில்நுட்பப்பிரிவில் தோற்றிய மாணவர்களுக்குரிய செயன்முறை பரீட்சை (Practical Exam) கருத்தரங்கு.

பொறியியல் தொழில்நுட்பம்
23, 24, 25, 26/09/2017

உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்

Spot Exam - 23.09.2017
B1 Exam - 24.09.2017
B2 Exam - 24.09.2017

நேரம் :- 9.00 - 2.00
இடம் :- யாழ் வெலிங்டன் சந்தி. (யாழ் பேருந்து நிலையம் அருகாமை)

தொடர்பு : 077 017 5346 (C-9710)

## வாணி விழாவை முன்னிட்டு... உயர்தரத்தின் பின்னர்

IT மற்றும் ஆங்கிலத்திற்கு இலங்கையின் பிரபல்யம் பெற்ற இரட்டை டிப்ளோமா பாடநெறிகள்

DUAL DIPLOMA
Diploma in Information Technology (DiTEC INTERNATIONAL) + Diploma in English (DiE)

புரட்டாதி 25 வரையிலான பதிவுகளுக்கு இலவச ESOFT T- Shirt வழங்கப்படும்!

ஏனைய டிப்ளோமா பாடநெறிகள்

- DiSE Diploma in Software Engineering
- DiWE Diploma in Web Engineering
- DiGD Diploma in Graphics Designing
- DiHN Diploma in Hardware & Networking
- DiBM Diploma in Business Management
- DiCA Diploma in Computerized Accounting
- DiHM Diploma in Hospitality Managemnet
- DiCAD Diploma in AutoCAD



Assured By PEARSON
தரச் சான்றளிக்கப்பட்டுள்ளது

50%* வரையிலான கட்டணக்கழிவு

பாடநெறியின் இறுதியில் பிரித்தானியச் (UK) சான்றிதழ் வழங்கப்படும்

புதிய பிரிவுகள்
வாரஇறுதிநாள் வகுப்புக்கள் 23.09.2017 காலை 9.00 மணி (சனிக்கிழமை)
வாரநாள் வகுப்புக்கள் 25.09.2017 காலை 9.00 மணி (திங்கட்கிழமை)
(C-9706)

பதிவுகளுக்கு : உங்களது பெயர், முகவரி ஆகியவற்றை 077 55 888 95 தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

ESOFT METRO CAMPUS
Shaping Lives, Creating Futures.
NO.137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Tel : 021 222 4142 Hotline : 077 309 9 308

இலங்கையின் மிகப் பெரிய தனியார் உயர்கல்வி வலையமைப்பு 021 7 572 572

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் வேம்படிச்சந்திக்கு அருகாமையில் அமைந்திருக்கும் எமது (KINGS ELECTRONICS(PVT) LTD) நிறுவனத்திற்கு

விற்பனை பிரதிநிதிகள்(பெண்)
கணக்கு உதவியாளர்(பெண்)
(கணனி அறிவு விரும்பத்தக்கது)



பணியாளர்கள் உடன் தேவை 01.10.2017ம் திகதிக்கு முன்னர் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமூகமளிக்கவும்.

KINGS ELECTRONICS (PVT) LTD
12, Point Petro Road, Jaffna. TEL-021-4546699

## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

UK - 550/= (C-9698)
CANADA - 400/= மட்டுமே
V.2 TRAVELS-0768226240
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்
021 221 5656 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
(C-9699)

## உடனடி வேலை வாய்ப்பு V2 TRAVELS

UK-550/-Kg
விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப்பொதிகள் சேவை
நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
தகுதி- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
0768226241

## அமெரிக்க லொட்டறி விசா-2018

வருடந்தோறும் 55000 பேர் தெரிவு செய்யப்படும் அமெரிக்க லொட்டறி விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.



திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd
216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
18, பிரதான வீதி, நெல்லியடி.
Hotline:-0777554528


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.